www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka K·JUDE

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஏப்.12–18,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 252

## சவாலுக்கு சவால் மும்முனைக் களம்



## அனுபவமும் வழி நடத்தலும்

இனிய
வாசக நெஞ்சங்களுக்கு
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
இத்தரை மீது
நம்மிடை புகுந்த
காரிருள் விலகட்டும்!



## அம்பலமாகும் அரசதந்திரங்கள்



## அசாரின் தொப்பி இரகசியம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மனதில் உறுதி வேண்டும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

சாந்தி, சமாதானம் மலரட்டும்
என்ற சம்பிரதாய
வார்த்தைகள் வேண்டாம்!
புளித்துப் போய்விட்டன!

'நாம் யாருக்கும்
கீழ்ப்பட்டவர்கள் அல்லோம்'
என்று வாழும் உரிமைதான்
மனிதருக்குள்ள சிறப்புரிமை!
பிறப்புரிமையும் அதுவே!

கீழ்ப்பட்டு வாழ்வதற்கான
விலைதான்
சமாதானம் என்றால்,
அத்தகைய சமாதானம்
அடிமைத்தனத்துக்கு சமன்!

தமிழ் பேசும் மக்கள்
நாடுகின்ற சமாதானம்
தலை குனிந்து
இரந்துவாழும் சமாதானமல்ல!

ஆனால், இன்றைய
ஆட்சியாளர்கள்
யுத்தம் மூலம் சமாதானம்
என்று கூறுகின்றனர்!

முதலில் மண்டியிடுங்கள்
பின்னர் மடிப்பிச்சையிடுகிறோம்
என்பது போல் இருக்கிறது!

நாடெங்கும் தலைவிரித்தாடும்
பாதுகாப்பு கெடுபிடிகள்
தமிழ் மக்களின்
தன் மானத்திற்கு விடப்படும்
சவாலாகவே மாறியுள்ளன!

குண்டுகள் வெடித்தால்
பொறுமையாக இருக்குமாறு
சாதாரண மக்களுக்கு
அறிவித்தல் விடுக்கப்படுகிறது!

'பார்த்தீர்களா, நாங்கள்
தமிழர்களை பாதுகாத்தோம்'
என்று அரசு கூறுகிறது!

ஆனால், இவையெல்லாம்
இதய சுத்தியுடன்
நடக்கும் காரியங்களா?
அல்லது-அகில
உலகின் அபிமானம் பெறுவதற்கா?
என்று சந்தேகம் எழுகிறது!

இனவாதக் காடையர்களை
கடந்த காலங்களில்
தமிழர்கள்மீது ஏவிவிட்டதில்
அவ்வப்போது பதவியில் இருந்த
ஆட்சியாளர்களுக்கு பங்குண்டு!

பண்டாரநாயக்கா முதல்
ஜெயவர்த்தனா வரை
கலவரத்தை வேடிக்கை பார்த்தனர்!
இனவாதப் பூதத்தை
கட்டுப்படுத்த விரும்பாமல்
கால அவகாசம் கொடுத்தனர்!

இன்று காலம்
மாறிவிட்டது.
ஆகவே-உத்திகளும்
மாறிவிட்டனவா என்று
சந்தேகம் வருகிறது!

அகில உலகம் முன்
சமாதான முகம் காட்டும்
அரசாங்கம் இன்று
பதவியில் இருக்கிறது!

கலவரம் மூண்டால்
உலகம் கண்டிக்கும்.
ஆகவே-அதனால்-
பாதுகாப்பு நிலவரத்துக்காக
என்ற போர்வையில்
இன ஒடுக்குமுறை
கட்டவிழ்த்து விடப்படுகிறதா?
என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில், தலை நகரில்
நாளொரு விதமாகவும்
பகுதிக்கு ஒரு முறையாகவும்
புதுப்புது பாதுகாப்பு விதிகள்
அறிவிக்கப்பட்டு வருகின்றன!

இவையெல்லாம்,
தலைநகரில் தமிழர்கள்
வாழவேண்டாம் என்பதை
மறைமுகமாக உணர்த்துவது
போன்றே உள்ளன!

தலைநகரப் பாதுகாப்புக்கு
தமிழர்கள் ஆபத்தானவர்கள்
என்ற எண்ணம்
ஆட்சியாளர்களுக்கு
ஏற்பட்டுள்ளது!

அதனால்தான், நீண்டநாளாக
தேடுதல் வேட்டை நடந்தும்,
தெருத் தெருவாய்
தமிழர்கள் அலைந்தும்கூட
ஒரு அமைச்சர்கூட
திருவாய் திறக்கவில்லை!
அத்துமீறல் தடுக்கவில்லை!

அவசரகாலச் சட்டம்
என்ற இரும்பு கரத்தால்
தமிழர்களின்
சுய கௌரவத்தின்மீது
ஓங்கி அறைந்து வருகிறார்கள்!

சட்டத்தின் பாதுகாப்போடு
திட்டமிட்டு அவமதித்தல்
தொடரத்தான் போகிறது!

இவற்றை எதிர்கொண்டு
மனம் தளராமல்
நியாயமான தீர்வுவரை
எதிர் நீச்சல் போடும்
மன உரம்
நம் மக்களுக்கு வேண்டும்!
துன்பங்களைக் கண்டு
துவண்டுபோய்,
அரை குறைத் தீர்வுகளுக்கும்
அற்ப சொற்ப சலுகைகளுக்கும்
தலையாட்டும் மக்களாக
மாறாதிருக்கும்
மன உறுதி வேண்டும்!

அதுதான்-நமது
சித்திரைப் புத்தாண்டுக்கான
திட சங்கற்பமாக இருக்கட்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## 'நிம்மதிக்கு அவசியம் இறை வணக்கம்'

எழுத்துக்களெல்லாம் 'அ'வை முதலாக வைத்து வந்துள்ளன. அகில உலகங்களும் ஆதிபகவனை (பரமாத்மாவை) முதலாகவைத்து வந்துள்ளன எனகிறார் வள்ளுவரும்.

கண்டத்தில் எழும் 'அ'வாயின் நடுப்பகுதியில் எழும் 'உ' உதடுகளின் முடலில் வரும் "ம்" ஆகிய மூன்று ஒலியில் 'ஓம்' உண்டாக, அதில் அனைத்து ஒலிகளும் மொழிகளும், எழுத்துக்களும் அடங்கி விடுகின்றன. அந்த ஓம்தான் உத்கீதம், பிரணவம் என்று ஆதி பகவனைக் குறிப்பதாகவும் உள்ளது. ஆதி பகவனின் 'ஓம்' ஒலியே உலகமாக வந்துள்ளது. அதுவே அவருடைய சக்தி.

ஆகவே வையகத்தின் ஆதாரம் 'ஓம்' தான் அதுவேதான் ஜீவனாகிய நமது ஆதாரமும். இவ்வாறு ஜீவர்கள் உலகமான இயற்கை இரண்டிற்கும் ஆதாரமாகிறவர் பரமாத்மாவே.

ஆகவே அவரே உலக சுகங்களுக்காகவும், ஆன்மீக நிம்மதிக்காகவும் பணியத் தக்கவர். எனவே இறைவனைப் பணிந்து நிம்மதியடையுங்கள்!

அ.அரசரெத்தினம், சேனையூர்.06.



## பகுதானிய வருடப்பிறப்பு

இந்துக்களுக்கான 60 வருடங்கள் கொண்ட சுற்று வட்டத்தில் 12 வது வருடமான பகுதானிய வருடம், நிகழும் ஈசுவர வருடம் பங்குனி 30ம் திகதி செவ்வாய்க்கிழமை (14.04.1998) அதிகாலை 5.34க்கு (திருக்கணித பஞ்சாங்கப்படி) மீன லக்கினம், துலாம் இராசி விசாக நட்சத்திரம் முதலாம் பாதத்தில் பிறக்கிறது.

வாக்கிய பஞ்சாங்கப்படி, புது வருடம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.41க்கு கும்ப இலக்கினம் துலாம் இராசி, விசாக நட்சத்திரம் முதலாம் பாதத்தில் பிறக்கிறது.

இவற்றின்படி அன்றையதினம் அதிகாலை 1.34 முதல் காலை 9.34 வரையும் புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் விளாவிலையும் காலில் கடபமிலையும் வைத்து மருத்து நீர் தேய்த்து நீராட வேண்டும்.

ஆடை: வெண்பட்டு அல்லது வெள்ளைக் கரையுடைய புத்தாடை.

உணவு: அறுசுவை உணவுடன் பால்பாயாசம், தயிரன்னம், நெல்லித் துவையல்.

ஆபரணம்: முத்துப் பதித்த தங்க நகைகள்.

பொங்கல்கள்: திங்கட்கிழமை காலை 6.45 முதல் 7.15 வரை.

பெரியோர் தரிசனம்: 15.04.98 புதன்கிழமை அல்லது 18.04.98 சனிக்கிழமை.

கைவிசேடம்:
15.04.98 புதன் காலை 9.22 முதல் 10.22 வரை
17.04.98 வெள்ளி பகல் 10.21 முதல் 10.57 வரை
18.04.98 சனி காலை 8.33 முதல் 8.40 வரை.

விருந்துண்பதற்கு-கை விசேடத்துக்கான காலமே சாலப் பொருந்தும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவினரின் பஞ்சாங்கத்தைத் தழுவித் தொகுக்கப்பட்டது.

# கவிதைப் போட்டி இல.249

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



## பரிசுக்குரிய கவிதை

### நவ நங்கை

பெற்றபிள்ளை ஜெர்மனியில்.
பேரப்பிள்ளை கனடாவில்,
விசா வந்து சேரு முன்னே
நரை முடியை அகற்றியுனை
நவ நங்கை ஆக்கிடுவேன்!

சி.ஐ.சிற்சபேசன், புத்தளம்.

### உயர்ந்த அன்பு

இருமனங்கலந்து திருமண முடித்து
சடில்லா இன்ப வாழ்வினைக் கழித்து
உருவம் தேய்ந்தாலும் உள்ளம் தேயாது
உயர்ந்த அன்பைக் காட்டும் இனியதம்பதி!

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

### எட்டாதது

என்னடி
புள்ள-
தீர்வுப்பொதி போல
கண்ணுக்கு எதுவும்
எட்டுதில்லை!

செல்வமலர்
சோதிரெட்ணம்-வவுனியா.

### ஏக்கம்

அன்று
நாம் இருவர்
நமக்கிருவர்:
இன்று
நாம் இருவர்
நமக்கு...எவரோ!?

ராஜாதி ராஜன்-
கொழும்பு-15.

### பிரிக்கவில்லை

வறுமை பிரிக்கவில்லை:
வருத்தம் வழங்கும்
மரணம் பிரிக்கவில்லை.
வயோதிபம் வரை
வாழ்ந்த ஜோடியை
'பொம்மர்கள்' பிரிக்கவில்லை.
பொறிவெடி பிரிக்கவில்லை!
காலனை வென்றது
காதலின் மகிமை!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### இன்றுவரை

48ல்
சிக்கலானது
98லும்
அவிழ்க்க முடியவில்லை!

வை.சித்திகிருஷ்ணா,
பாண்டிருப்பு-01.

### மாறாததொன்று

அன்புக்கு ஏது முதுமை?
அரவணைப்புக்கேது வறுமை?

திருமதி க.கதிரவேலு- வவுனியா.

### அழிவேது?

நரை திரை மூப்பிலும்
கரையிலாக் காதல்!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம்.

### என்றும்....

காமம் உதிர்ந்த
பின்னரும்
காதல் வேண்டும்!

அ.குமணன்-
பாண்டியூர்-01.

### தேடுதல்

தலை நகர்
தேடுதல்கள் தொடரும்.
அழிக்கப்படும்வரை
முடியுமா?

சுபா வரன்-கண்டி.

### இப்போதிது....

வாழ்வின் முடிவினிலும்
காணும் சுகங்களுண்டு!
வாழத் தொடங்கு முன்பே
சோகத் தழுவலுமுண்டு!

ம.திருவரசுராசா-வவுனியா.

### ஆசை

எல்லாமே இழந்து
இல்லாமை வந்தாலும்
உள்ளத்தில் அமைதி இருந்தால்
தள்ளாத வயதிலும்
'தலை' பார்க்க ஆசைவரும்!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### சிக்கல்!

பிரிக்க பிரிக்க
இழுக்க இழுக்க
அவிழ்க்க அவிழ்க்க
தொடர்ந்தும்
பொதி போலவே...!

ம.பிரதீபன்-நெடுந்தீவு-11.

### வாழ்க்கை!

எச்சங்கள் மறைந்த பின்
எஞ்சியவை உயிர்வாழும்.
மிஞ்சியுள்ள வாழ்கையில்
எஃகு நெஞ்சம் உருவாகும்!


எம்.இஸட்.எம்.பைஸீன்-
சுருந்துறை (தெற்கு).

### அ(டி)வ)டிகள் தாண்டி....

சொல்லடிகள், பொல்லடிகள்,
ஷெல்லடிகள் அத்தனையும்
தாண்டிவந்த சாதனையில்,
தலை முடியில்
சிக்கெடுக்கும்
சந்தோஷ ஜீவன்கள்...!

ஏ.முஹம்மது முஸ்அப்
ரஸீன்-நிந்தவூர்-15.

# கவிதைப் போட்டி இல.252



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 18.04.1998 (படப்பிடிப்பு:-கொட்டரமுல்லை ·:·பாருக்)

முகவரி:
கவிதைப் போட்டி இல.252,
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



## சுயரூபம் தெரிந்தது

முன்னர் ஊரில் கோயில் திருவிழாக்களுக்கு தண்ணீர் பந்தல் போடுவார்கள். அந்தத் தண்ணீர் பந்தல்காரர்களுக்கு இருந்த மனிதாபிமானம்கூட தமிழ்க் கட்சிகளுக்குக் கிடையாது. சுற்றிவளைத்து அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்படும்போது தட்டிக் கேட்க திராணியில்லாதவர்களாக தம் சுயரூபத்தை காட்டி விட்டனர். இன்னமும் எத்தனை காலம்தான் உதைக்கிற காலுக்கு முத்தம்? ஒடுக்கும் கைகளுக்கு பூங்கொத்து?

ஆ.சீவரத்தினம், கொழும்பு-06.

## நிவாரணக் கட்சிகள்

முரசே! நீ எடுத்துக் காட்டியது போன்று நிவாரணம் பெற்றுத் தந்து பெயர் வாங்குவதில் தமிழ்க் கட்சிகள் காலம் கடத்துகின்றன. ஒரு கட்சி மீன்பிடி வலை பெற்றுத் தருகிறது. இன்னொரு கட்சி சிரமதானம் செய்கிறது. மற்றொரு கட்சி- அம்மையார் கோயில் திருத்த ஒதுக்கிய தொகையை விளம்பரம் செய்கிறது. பழம் கட்சியோ யாழ் நகரை சிங்கப்பூராக்கப்போவதாகக் கூறுகிறது. இந்தத் திருப்பணிகளை செய்வதற்கு இக் கட்சிகள் எதற்காக? எங்கள் பகுதி சனசமூக நிலையங்களும், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் போதுமே!

கே.அமரசிங்கம், யாழ்ப்பாணம்.

## அவசரகாலச் சட்ட எதிர்ப்புக்குரல்

அன்புள்ள முரசுக்கு,

அவசரகாலச் சட்டத்தை அகற்றுமாறு கோரி தமிழ்க் கட்சிகள் போராடத் தயாரா? அவ்வாறு தயாரானால் அவர்கள் இதுவரை செய்த தவறுகளுக்காவது ஓரளவு பரிகாரம் செய்வதாக அமையும். அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து சகல தமிழ்க் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும். பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகள், அதன் உள்ளேயும், வெளியே உள்ள கட்சிகள் வெளியே நின்றும் எதிர்ப்புக் குரல் எழுப்பட்டும். தமிழ் மக்கள் மனதார பாராட்டுவர். அவசரகாலச் சட்டம் என்ற கொடும் சட்டத்தால் தினம் தினம் அவதிப்படும் மக்கள் நிலை இக்கட்சிகளுக்குத் தெரியாதா? இப்போதுகூட இவர்கள் கண்கள் திறக்காது போனால் இனி எக்காலத்திலும் இவர்கள் கண் திறக்காது.

சி.தவமணி, (பாதிக்கப்பட்ட ஒருத்தி) வத்தளை.

## ஆதரிப்பும் கண்டனமும்

அமைச்சர் தொண்டமானும், அவரது முன்னாள் சீடர் சந்திரசேகரனும் தங்கள் போட்டி அரசியலுக்கு மலையக மக்கள் நலனை பலிக்கடாக்களாக்கிவிட்டனர். கொழும்பில் மலையகத் தமிழர்கள் படும் பாட்டை அவர்கள் அறியாரோ? ஆனால் இன்றுவரை இத்தகைய இன அவமதிப்புக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தினரா? அவ்வப்போது பாராளு மன்றத்தில் வீரமாக முழங்கிவிட்டு அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தும் கை உயர்த்துகிறார்கள். விருந்துகளில் கூடிக்களிக்கிறார்கள். அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தபடி அதன் கொடூரங்களை கண்டிப்பது மக்களை முட்டாளாக்குவதற்கே.

இ.கலியபெருமாள், நுவரெலியா.

'இடி அமீ'னின் தொடர் எடுத்த எடுப்பிலேயே எக்ஸ்பிரஸ் வேகத்தில் செல்கிறது. பூலான் தொடர் நிறைவான சோகத்தை அமீன் நினைவு செய்கிறான். ரசிகனுக்கு பாராட்டு.

எம்.ரஹீம், கொழும்பு-13.

அறிமுகமே அபாரம்! வெள்ளையர்களை நடுங்க வைத்த இடி அமீன் கதையை அறிவதில் அப்போதே ஆவல் கொண்டவன் நான். பல வருடம் கழித்து அந்த ஆசை ரசிகன் மூலமாக நிறைவேறுகிறது.

கே.மகேந்திரன், பசறை.

'சே'யின் கள அனுபவங்கள் சிலிர்ப்பூட்டுகின்றன. தேர்ந்தெடுத்து சிறப்பாகத் தரும் முரசுக்கு நன்றி கூறுகிறேன். அதேபோல உலக அநியாயங்களை சாட்சியமாக தரும் புகைப்படங்களும், அதற்கான விளக்கங்களும் அருமை.

ஏ.கலையரசி, வவுனியா.

குட்டிக் கதைகளைத் தேடிப்பிடித்து தோதான கேள்விகளுக்குப் பொருத்தித் தருகிறார் சிந்தியா. சபாஷ்! இராஜகுமாரனின் புதிய ஆக்கமும் நன்றாய் உள்ளது. இராஜதந்திரியின் அலசல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அரசியல் வகுப்பாக அமைந்துள்ளது.

ம.சேவியர்-திருக்கோணமலை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

## முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:

* சோ.சங்கரலிங்கம், திருப்பழுகாமம்.
* யூ.முஸ்தாக் அஹமட், நிந்தவூர்.
* மு.அ.பஹ்ஜா, காத்தான்குடி-05.
* ஆ.ந.தர்சன், கம்பளை.
* என்.புஸ்பராணி, மாத்தளை.
* பௌமியா அஸீஸ், பொலன்னறுவ.
* ஸ்ரீரஜனி வீரசிங்கம், திருமலை.
* த.கம்சவாகினி, மட்டக்களப்பு.
* எம்.அவுப், மாத்தளை.
* திருமதி பவானி சச்சு, வத்தளை.
* எஸ்.பத்மா-உமாஜினி, கொழும்பு-10.
* செ.ராஜயோகம், அப்புத்தளை.
* சு.ஜெயமதி, கொழும்பு-13.
* ஏ. றினோஸியா, திஹாரிய.
* சந்திராணி தங்கத்துரை, சவளக்கடையூர்.
* தங்கராசா சந்திரன், நேரியகுளம்.
* கே.எம்.ருஷ்மியா, காத்தான்குடி.
* ஏ.எல்.அமீர் ஹுஸைன், கல்முனை-3.
* ஏ.பி.ஜெ.அருவா, ஓட்டமாவடி-03.
* பி.நிருஜா, திருமலை.
* ஆ.ஆனந்தக்குமார், கனடா.
* கா.தினேஷ், ஜெர்மன்.
* எம்.சுந்தரலிங்கம், ஃபிரான்ஸ்.
* கே.ரவீந்திரன், ஃபிரான்ஸ்.
* அ.கமலேஸ்வரன், சுவீடன்.
* மா.மகேஸ்வரன், மட்டக்களப்பு.
* ஏ.நித்தியா, சுவிற்ஸர்லாந்து.
* ஆர்.லோகநாதன், ஜப்பான்.
* சிவம் ஜெயசுப்ரமணியம், தலவாக்கலை.
* அ.ராசமாணிக்கம், கனடா.
* சி.சுரேஸ், டிக்கோயா.
* ப.விமலநாதன், நோர்வே.
* கௌரி ராஜ்மோகன், வவுனியா.
* எம்.மூர்த்தி, வவுனியா.
* ஆர்.பாபு கணேஷன், கொழும்பு-06.
* க.ரவிச்சந்திரன், மட்டக்களப்பு.
* ஜெயரெட்ணம் லக்ஷ்மன், யாழ்ப்பாணம்.
* வே.கணேஸ், காவத்தை.
* ம.ஞானசீலன், முள்ளியவளை.
* க.உதயகுமார், அமெரிக்கா.
* எம்.தவசி, டென்மார்க்.
* ஆ.ஜெயக்குமார், சவுதி அரேபியா.
* அஜார்தீன், நிகவெவ.
* எம்.எஸ்.எம்.நதீர், பலாங்கொட.
* ராஜு மஞ்சு, கொழும்பு.
* ராசரத்தினம் புவனா, ஜெர்மனி.
* ஆர்.வேணுதாஸ், கனடா.
* ரா.குணபாலன், அவுஸ்திரேலியா.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

# "பொதி பற்றி இப்போது பேசாதீர்!"

## ஜனாதிபதி சந்திரிக்கா கூறினாராம்

"நாட்டில் மாகாண சபைத் தேர்தல்கள் நடந்து முடியும்வரை தீர்வுப் பொதி பற்றிய பேச்சையே என்னிடம் எடுக்காதீர்கள்!" இவ்வாறு ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக மூத்த தமிழ் அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனது நெருங்கிய நண்பர் ஒருவரிடம் மட்டுமே மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளார் அந்த மூத்த அரசியல்வாதி.

சமீபத்தில் அந்த மூத்த தமிழ் அரசியல்வாதியும் அவரது கட்சியினரும் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தாராம் ஜனாதிபதி.

ஜனாதிபதி தம்மிடம் கூறியதை தங்கள் கட்சியின் ஏனைய முக்கியஸ்தர்களிடம் கூட மூத்த அரசியல்வாதியோ அவருடன் சென்ற ஏனையோரோ தெரிவிக்கவில்லையாம்.

சமீபத்தில் அக் கட்சியின் ஒன்றுகூடல் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திலும் ஜனாதிபதியின் கருத்து தெரிவிக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல், "தீர்வுப் பொதிக்காகவே அரசை ஆதரிக்கிறோம். அதனால்தான் அரசுக்கு வழங்கும் ஆதரவை முற்றாக விலக்க முடியாதுள்ளது" என்றும் கட்சிப் பிரமுகர்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டதாம்.

முரசுக்கு கிடைத்த தகவல்படி மாகாண சபைத் தேர்தல்வரை பொதி பற்றிய சர்ச்சைகளை கிளற அரசு விரும்பவில்லை என்பது முற்றிலும் உண்மை என்று தெரியவந்துள்ளது. ■

# கெரில்லாப் போர் அரங்காகும் குடாநாடு!

## பல முனைகளிலும் மோதல்கள் ஆரம்பம்

யாழ் குடாநாடு கெரில்லாப் போர் அரங்காக மாறிவருகிறது. புலிகளின் அணிகளது ஊடுருவலும், தாக்குதல்களும் தீவிரமாகியுள்ளன.

ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து இன்றுவரை (08.04.98) யாழ் குடாநாட்டில் புலிகளுக்கும் படையினருக்குமான மோதலில் 20 படையினர்வரை பலியாகி உள்ளதாகத் தெரிகிறது. எனினும் படைத்தரப்பினர் அதனை உறுதி செய்யவில்லை.

தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் மட்டுமன்றி வலிகாமப் பகுதியிலும் புலிகளின் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

கிளைமோர் தாக்குதல், மற்றும் பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகள் என்பவற்றில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து படையினர் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கடும் சோதனைகள் மத்தியிலும் யாழ் நகருக்குள் புலிகளின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்த சிலர் நடமாடுவதாக கண்டுள்ளனர். எனினும் முன்னர் போல் புலிகள் பற்றிய தகவல்கள் பொதுமக்கள் உடனுக்குடன் கிடைப்பதில்லை என்றே தெரிகிறது.

### நடவடிக்கை

இதேவேளை, யாழ்ப்பாணம் புங்குடுதீவில் இருந்து புலிகளது யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தூயவன் செயற்பட்டு வருகிறார்.

"தமிழ்க் கட்சிகள் மக்களுக்கு உதவட்டும். நாம் தடுக்க மாட்டோம். ஆனால் தமிழ் மக்களின் நலன்களுக்கு மாறான நிலைப்பாடுகளை எடுக்கும்போது, அக் கட்சிகளையிட்டு கடுமையாகவே இருப்போம்" என்று தன்னைச் சந்தித்தவர்களிடம் தூயவன் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

"அரச அதிகாரிகள் சிலருக்கும் புலிகள் சில தகவல்களை அனுப்பியுள்ளனராம். மக்களுக்கு உதவிகளைச் செய்து கொடுங்கள். ஆனால் அரசாங்கம் ஏதோ தாரான மன தோறு நடப்பது போன்ற மாயையை ஏற்படுத்தாதீர்கள். அவ்வாறு செய்வோரிது நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவோம்!" என்று கூறியுள்ளனராம்.

"யாழ்ப்பாணத்தை சிங்கப்பூராக மாற்றுவோம்" என்று யாழ் மாநகர மேயர் வெளியிட்ட அறிவிப்புக்கள், யாழ்ப்பாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய யாழ் பா.உக்களது செய்திகள் குறித்தும் தங்கள் அதிருப்தியை புலிகள் சில பிரமுகர்கள் ஊடாக தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

### ஷெல் தாக்குதல்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் புலிகளின் அணிகள் நிலைகொண்டுள்ளன. அங்கு செல்ல முயன்ற படையினர் புலிகளின் எதிர்த்தாக்குதல் காரணமாக முகாம் திரும்பினர். பின்னர் முகாமில் இருந்து வடமராட்சி கிழக்கு நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. ஷெல் தாக்குதலால் பொது மக்கள் இருவரே காயமடைந்தனர். ■

# பொலிசார் இல்லாத பொலிஸ் நிலையம்

## தோப்பூரில் நடந்த தாக்குதல்

திருமலை மாவட்டம் தோப்பூர் பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கப்பட்டது. 02.04.98 அன்று இத்தாக்குதல் இடம்பெற்றது.

நூறுபேர் வரையான பொலிசார் இங்கு கடமையில் இருந்தனர். தாக்குதல் நடைபெற்றபோது பொலிசார் எவரும் அங்கிருக்கவில்லை என்று தெரிகிறது.

புலிகள் தாக்கக்கூடும் என்று கருதி பொலிஸ் நிலைய கட்டடத்தில் தங்காமல் வெளியே தங்குவதுதான் வழக்கமாம்.

நள்ளிரவில் தாக்குதல் நடத்திய புலிகளுக்கு பதிற் தாக்குதல் இல்லாதது ஆச்சரியமாகப் போய்விட்டதாம். பின்னர்தான் பொலிஸார் யாரும் உள்ளே இல்லை என்று தெரிந்ததாம்.

பொலிஸ் நிலையத்தில் இருந்த ஆயுதங்கள் உட்பட தளபாடங்கள் அனைத்தையும் பஸ் ஒன்றில் ஏற்றிக் கொண்டு சென்றனர் புலிகள். இருதடவைகள் பஸ்ஸில் பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டதாம்.

நள்ளிரவு முதல் அதிகாலை வரை தோப்பூர் பொலிஸ் நிலையப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

புலிகள் போகும்போது பொலிஸ் நிலையப் பகுதியில் மிதிவெடிகளைப் புதைத்து வைத்துவிட்டுச் சென்றனர். பின்னர் அந்த மிதிவெடிகளில் சிக்கியே ஐந்து பொலிசார் காயமடைந்தனர். ■

### முக்கிய அறிவித்தல்

புத்தாண்டு விடுமுறைகள் காரணமாக அடுத்தவார முரசு மட்டும் சிறிது தாமதமாகும். சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் உங்கள் கரம் சேரும்!

# பயணிகளைக் கைவிட்ட கட்சிகள்

## மக்கள் போராட்டம் வெற்றி

யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவையை அரசாங்கம் நிறுத்தியதால் ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள் திருமலையிலும், வவுனியாவிலும் அந்தரித்தனர்.

தமிழ்க் கட்சிகளோ அல்லது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களோ இதில் தலையிட்டு பரிகாரம் செய்ய முடியவில்லை. அரசு மூலம் பரிகாரம் செய்ய முடியாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தவும் தமிழ்க் கட்சிகள் முன்வரவில்லை.

இந்நிலையில் யாழ் செல்லக் காத்திருந்த பயணிகள் தாமாக முன்வந்து உண்ணாவிரதம் இருந்தனர். அரசுக்கு எதிரான சுலோகங்களை தாங்கிய வண்ணம் உண்ணாவிரதம் நடைபெற்றது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல் சேவை நடத்தி, ஆயிரத்தி நானூறு பேரையும் யாழ் குடாநாட்டுக்கு அனுப்பி வைக்க அரசு சம்மதித்துள்ளது. ■

# தமிழ்ப் பெண்கள் தொடர்ந்து கைது!

## வெளியே நடமாட அச்சம்

தலைநகரில் கைதுக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

தனியாகச் செல்லும் தமிழ்ப் பெண்கள்-குறிப்பாக இளம் பெண்கள் தடுத்து நிறுத்தப்பட்டு ஆங்காங்கே தயாராக நிற்கும் பொலிஸ் வாகனங்களில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றனர்.

இதனால், பண்டிகைக் கால கொள்வனவுக்கெனச் சாலையில் செல்லத் தமிழ்ப் பெண்கள் அஞ்சுகின்றனர்.

முக்கியமான சந்திகளிலுள்ள கடலைக் கடை மற்றும் சைவ ஹொட்டல்களின் முன்பு திடீரென்று வயர்லெஸ் போன்ற தொலைத் தொடர்பு சாதனங்களுடன் சிறிய எண்ணிக்கையில் தோன்றும் படையினர், அங்கிருக்கும் சிப்பந்திகள் மற்றும் நுகர்வோரிடம் அடையாள அட்டையைப் பரிசோதித்த பின்பு அழைத்துச் சென்று தயார் நிலையிலுள்ள பஸ் வண்டிகளில் ஏற்றுகின்றனர்.

இவ்வாறு கண்டவிடங்களில் கைது செய்யப்படுவோர் புத்தாண்டு தொடர் விடுமுறையின் பின்பே நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

இந்துக்களின் விசேஷ தினங்களான செவ்வாய்,வெள்ளி ஆகிய தினங்களில் ஆலயங்களுக்குச் சென்று திரும்புவோர் அனுபவிக்கும் அசௌகரியங்கள் சொல்லி அடங்காது என்றார் பாதிக்கப்பட்ட ஒருவர்.

உறவினர்களுக்கு தகவல் கொடுக்க முடியாமல் தவித்த தமிழ் யுவதி பொலிஸ் ஜீப் வண்டியொன்றுள் தேம்பியழுது கொண்டிருந்ததை நமது நிருபர் நேரில் கண்டார்.

இதேவேளை தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்படமாட்டார்கள் என்று தமக்கு உத்தரவாதங்கள் தரப்படுவதாக தமிழ் பா.உக்கள் சிலர் பத்திரிகைகளுக்கு கூறி வருகின்றனர்.

இந்த உத்தரவாதங்கள் எல்லாம் பத்திரிகைச் செய்திகள் மட்டுமே. நடைமுறையில் நெருக்கடிகள் அதிகரித்தே வருகின்றன: என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்.

# புலிகள் ஏற்றிச் சென்ற பொருட்கள் சிக்கின

மட்டக்களப்பு-வாழைச்சேனை நாசிவன் தீவுப் பகுதியில் புலி இயக்கத்தினர் தொடர்ந்து பொருட்கள் எடுத்துச் செல்வதாகக் கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியில் படையினர் மறைந்திருந்து அவதானித்தனர். அப்போது இரு மாட்டு வண்டில்களில் பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் அதன்மீது தாக்குதல் நடத்திக் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது புலி இயக்கத்தினர் எவருக்கும் காயமோ உயிரிழப்போ ஏற்படவில்லையென்று கூறப்படுகிறது. மார்ச் 31ம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இதனிடையே அன்னை பூபதியின் நினைவு தின அனுஷ்டிப்புக்காக புலி இயக்கத்தினரால் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை வாசிக்குமாறு பொதுமகனான தியாகு (55)எனும் மீன் வியாபாரியொருவரைப் படையினர் கேட்டுக் கொண்டனர்.

அதன்படி அவரும் அவ்விடத்திலேயே நின்று சுவரொட்டி வாசகங்களை விளக்கிக் கொண்டிருக்கும்போது தூரத்தே நின்று அவதானித்துக் கொண்டிருந்த புலி இயக்கத்தினர் அவ்விடத்தில் படையினர் நிற்பதைக் கண்டு துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அதில் மீன் வியாபாரி கொல்லப்பட்டார். இச்சம்பவம் வாழைச்சேனை- கோராவெளியில் மார்ச் 17ஆம் திகதி இடம்பெற்றது. ■

# பஸ்மீது சிப்பாய் துப்பாக்கிச் சூடு!

## பயணிகள் நேரடியாகக் கண்டனர்!

(நமது நிருபர்)

நிறைந்த பயணிகளுடன் கதுறுவெலவில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த 62-7182 இலக்க இன்ரசிற்றி லக்ஷரி பஸ்மீது புணானை புகையிரத நிலையப்படை முகாமிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த சிப்பாய்கள் இருவரில் ஒருவர் திடீரென இலக்குப் பார்த்து மூன்று தடவைகள் சுட்டார். சுட்டுவிட்டு அவர்கள் தன்பாட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். துப்பாக்கிச் சூட்டில் ஒன்று பஸ்ஸின்மீது பட்டு பஸ்ஸின் இரு பக்கங்களையும் துளைத்துச் சென்றது.

குறித்த சிப்பாய் வேண்டுமென்றே பஸ்மீது இலக்குப் பார்த்துச் சுட்டதை பஸ் நிறைந்த பயணிகளும் நமது 'முரசு' நிருபரும் நேரடியாகக் கண்டனர்.

இது விடயமாக ஓட்டமாவடிச் சோதனைச் சாவடியில் இருந்த இராணுவ பொலிஸாரிடம் கூறிய பொழுது, அவர்கள் தங்களால் எதுவும் செய்ய முடியாது என்றும் துப்பாக்கிச் சூடு தற்செயலாகவோ அல்லது வேறு பக்கத்திலிருந்து யாராவது சுட்டிருக்கலாமோ என்றும் மழுப்பலான பதிலைத் தந்துவிட்டு பொலிஸில் முறையிடுமாறு கூறினர்.

பின்னர் வாழைச்சேனைப் பொலிஸில் முறையிடச் சென்றபொழுது அங்கும் நீண்ட விளக்கத்தின் பின்னர் "யார் சுட்டார்கள் என்றில்லாமல் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது" என்று முறைப்பாட்டைப் பதியுமாறு கேட்டனர்.

அதுவும் சிங்களத்தில்தான் பதிய முடியும் என்று கூறி சிங்களத்திலேயே முறைப்பாட்டைப் பதிந்தனர்.

பஸ்மீது இராணுவ சிப்பாய் சுட்டதை அதே பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ்காரர் ஒருவரும் நேரடியாகக் கண்டார்.

இராணுவ சிப்பாய் பஸ்மீது சுட்டதை நேரடியாகக் கண்டதாக நமது நிருபர் பொலிஸாரிடம் கூறியபோதும் பொலிஸார் வெறுமனே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது என்று மாத்திரம் சிங்களத்தில் முறைப்பாட்டைப் பதிந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தெய்வாதீனமாகப் பயணிகள் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லையாயினும் பயணிகள் பெரும் பதற்றத்திற்கும், கவலைக்கும் உள்ளாகினர். இச்சம்பவம் ஏப்பிரல் 03ம் திகதி காலை 11.20க்கு இடம்பெற்றது. ■

# தமிழ் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு

## அரச ஆதரவுக் கட்சிகள் திண்டாட்டம்!

(நமது நிருபர்)

தமிழ் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான கடும் எதிர்ப்பு உருவாகிவருகிறது. இந்நிலையில் அரசுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளின் நிலை திண்டாட்டமாகியுள்ளது.

அவசரகாலச் சட்டம் வழங்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தியே தமிழ் மக்கள் மீதான அன்றாட கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே அவசரகாலச் சட்டத்தை தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும். அத்தோடு அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயம் பரவலாக எழுந்துள்ளது.

இந்நிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்போவதாக கூட்டணி அறிவித்திருந்தது. இதுவும் மக்களின் அதிருப்திகளை சமாளிக்க முடியாமல் கூட்டணி மேற்கொண்ட முடிவேயாகும். பிரேரணை கொண்டுவராவிட்டாலும்கூட அத்தகைய முடிவு எடுத்ததாக செய்தி வெளியாவது தங்கள்மீதான அதிருப்தியை சற்றுத் தணிக்கும் என்று கூட்டணியினர் கருதுகின்றனர்.

இதேவேளை இதுவரைகாலமும் அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்துவந்த புளொட் இம்முறையும் வாக்களிக்கவில்லை.

ஈ.பி.டி.பி. ஆதரித்து வாக்களித்தபோதும் மூன்று பா.உக்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர்.

இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகியவை அவசரகாலச் சட்டம் வடக்கு-கிழக்கு யுத்தத்துடன் மட்டுமே சம்பந்தப்பட்டது போன்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்த முயலுகின்றனர். ஆனால் மலையக மக்கள் உட்பட சகல தமிழ் மக்களும் அவசரகாலச் சட்ட விதிகளால் பாதிப்புற்றே வருகின்றனர்.

தமிழ்க் கட்சிகளின் உள்ளேயும் வெளியேயும் அரச ஆதரவு நிலைப்பாடுகள் தொடர்பாக பெரும் அதிருப்திகள் தோன்றியுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் மட்டக்களப்பு, திருமலை கிளைகளைச் சேர்ந்தோர் கூட்டணித் தலைமையின் இன்றைய போக்குக் குறித்து கடும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

# சோதனையும் சுருட்டலும்

## சாவடிகளில் அன்பளிப்பு

கிழக்கு மாகாண வாகனங்கள் மீது பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்கனவே மறைமுகமாக வாகனக்காரர்களிடம் சோதனைச் சாவடிகளிலுள்ள பொலிசாரும் படையினரும் பெற்றுவந்த 'அன்பளிப்புகள்' இப்பொழுது 'உத்தியோகபூர்வமாக' வசூலிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாண தமிழ்- சிங்களப் பகுதி எல்லைப் பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் கடமை புரியும் ஊர்க் காவலர்கள்,பொலிஸார், படையினர் ஆகியோருக்குத் தற்சமயம் வாகனங்கள் மீது கொண்டு வரப்பட்ட கண்டிப்பான கெடுபிடி உத்தரவுகள், நல்ல வாய்ப்பைக் கொடுத்துள்ளதாகப் பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளன.

இப்பொழுது மாதுறு ஓயாச் சந்தி, சியம்பலாண்டுவ ஓயாச் சந்தி, மல்வத்தை போன்ற இடங்களில் வாகனங்களில் இருந்து பொருட்களை இறக்கிச் சோதனை செய்யப்படுவதற்காக வாகனங்கள் அங்கு தடைப்படுத்தப்படுகின்றன.

வாகனங்களில் இருந்து பொருட்களைக் கீழிறக்கிச் சோதனை செய்யும் கடமையில் ஈடுபட்டுள்ளோர் சியம்பலாண்டுவையில் ஒரு லொறிக்கு ரூபா 250/= ஐப் பெற்றுக்கொண்டு பற்றுச்சீட்டு வழங்குகின்றனராம். எவ்வாறாயினும் லொறிகள் அங்கு 24 மணிநேரம் தரித்து நிற்க வேண்டும். இதேபோல மஹா ஓயாச் சந்தியில் ஊர்காவல் படையினரும் பொலிஸாரும் வாகனக்காரர்களிடமிருந்து ரூபா 250/= வீதம் பெறுகின்றனர். ஆனால் பற்றுச்சீட்டு எதுவும் வழங்குவதில்லை. மல்வத்தைச் சோதனைச் சாவடியிலும் வாகனங்களுக்கு ரூபா 50/= என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது.

லொறிகளிலிருந்து பொருட்களை முற்றாகக் கீழிறக்கிச் சோதனையிட்ட பின்னரே ஏற்றி இறக்கும் தொழிலாளியின் கூலி பெறுவதாகக் கூறினாலும், உண்மையில் லொறியிலிருந்து பொருட்கள் கீழிறக்கிச் சோதனையிடப்படாமலேயே கூலிப்பணம் மாத்திரம் பெறப்படுகிறது.

24 மணிநேரம் தடுத்து வைப்பு, வாகனங்கள் தீவிர சோதனை என்பன போன்ற கடும் உத்தரவுகளெல்லாம் பாதுகாப்புத் தரப்பினரின் மேலதிகப் பிழைப்புக்கு வழிகாட்டியுள்ளன. பணம் வசூலிக்கும் சோதனைச் சாவடிகளைக் கடந்து நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன. இவற்றிடமிருந்து உத்தியோகபூர்வமாகவும், மறைமுகமாகவும் தினமும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பணம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. ■

# முன்னாள் தளபதிகளிடம் விசாரணை

## கொழும்பு ஆங்கில ஏடு தகவல்

முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா பதவியிலிருக்கும்போது குடியிருந்த உத்தியோக வாசஸ்தலத்திலிருந்து விலையுயர்ந்த பல பொருட்கள் காணப்படவில்லை என்று தகவல் ஒன்று கூறுகிறது.

1994ல் ஜெரி டி சில்வா இவ்வில்லத்தில் குடியேறினார். இவர் அங்கு குடியிருக்கச் செல்லும்போது அவ்வில்லத்திலிருந்த பொருட்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று தற்போது பாகிஸ்தானில் சிறீலங்காவின் தூதுவராகக் கடமை பார்க்கிறார்.

திரு.ஜெரி டி சில்வா இவ்வில்லத்தைக் காலி செய்தபோது அங்கிருந்த பதிவு செய்யப்பட்ட விலை மதிப்புள்ள பொருட்கள் பல அங்கு காணப்படவில்லை என அவ்வில்லத்துப் பொருட்களைக் கணக்கிடச் சென்ற அதிகாரிகள் கண்டனர்.

பட்டியலிலுள்ள பொருட்கள் எவ்வாறு காணாமற் போயுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு பாகிஸ்தானிலுள்ள முன்னாள் இராணுவத் தளபதிக்கு விளக்கம் கோரி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெரி டி சில்வாவுக்கு முன்னர் இராணுவத் தளபதியாகப் பதவியிலிருந்த லெப்டினண்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, பொதுப் பணத்தை முறை கேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரிகிறது. ■

# செயற்படாத ஆணைக்குழு

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக பொதுஜன முன்னணி அரசு பதவியேற்றதும் அமைக்கப்பட்ட ஆணைக்குழு தற்போது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போலாகிவிட்டது.

இலஞ்ச ஊழல் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் எதுவும் பல மாதங்களாக நடைபெறவில்லை.

இவற்றை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளும் திடீர் திடீரென இடமாற்றம் செய்யப் பட்டுவிட்டமையினால் இந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்டத்தைப் பாதுகாப்பதற்குக்கூட ஒரு பொலிசார் கடமையில் இல்லை என்று தெரிகிறது.

முன்னாள் பொலிஸ் அதிகாரியாக இருந்த உருத்திரா இராஜசிங்கம் அவர்களே ஆணையாளராக கடமையாற்றுகிறார். தமக்கு அளிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவ எவருமே இல்லை என்று தெரிவிக்கிறார். ●

www.padippakam.com

## கடற்படைப் படகுகளுக்கு பெயர் சூட்டல்!
### கொழும்பு ஏடு தரும் தகவல்

சிறிலங்கா கடற்படை பயன்படுத்துவதற்காக வெளிநாடுகளிலிருந்து கொள் முதல் செய்யப்படும் படகுகளுக்குப் பெயர் சூட்டுவதில் தனியானதொரு முறை கடைப் பிடிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. முக்கியமாக இப்படகுகள் கொள்முதல் செய்வதற்கான கட்டளைகள் கொடுக்கப்படும் காலத்தில் நாட்டின் தலைமைப் பதவியிலிருப்பவரின் பெயரை அடிப்படையாக வைத்தே படகுகளுக்கான பெயர்கள் சூட்டப்படுகின்றன.

ஜனதா விமுக்திப் பெரமுன ஆயுதப் போராட்டங்களைத் தொடக்கிய காலத்தில்- 1970ம் ஆண்டின் ஆரம்பத்தில் சீனாவிடமிருந்து 5 படகுகள் பெறப்பட்டன. இவற்றுக்கு முறையே சூரையா, வீரயா, ரணகாமி, தக்ஷயா, பலவதா என்ற பெயர்கள் சூட்டப்பட்டன. இப்பெயர்களின் முதல் எழுத்துக்கள் ஆங்கிலத்தில் S.W.R.D.B. என்று வருகின்றன. பிரதமராக விருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா என்பதை அவை குறிக்கின்றன.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா பதவியிலிருந்தபோது சீனா இரு படகுகளை அன்பளிப்புச் செய்தது. இவை முறையே ஜகதா, ரஷ்ஷுகா என்று அழைக்கப்பட்டன. ஜனாதிபதியின் பெயரின் முன்புறமுள்ள எழுத்துக்களான J.R. ஆகியன இப் பெயர்களில் உள்ளன.

சீனாவிடமிருந்து 1990ம் ஆண்டு 3 பீரங்கிப் படகுகளை கடற்படைக்காகக் கொள் முதல் செய்யப்பட்டன. இப்பெயர்கள் மூன்றும் 'ரண' (Rana) என்ற எழுத்துக்களைக் கொண்டு தொடங்குகின்றன.

ரணவீர, ரணரிசி, ரணசுரு என்றுள்ளன. ஜனாதிபதியின் தந்தையாரான ரணசிங்க என்பதை இப் பெயர்கள் சுட்டுகின்றன. பிரேமதாசா காலத்தில் கொள்முதல் செய்வதற்காகக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட மேலும் மூன்று படகுகளும் இதே முறையில் ரணஜய, ரணதீர, ரணவிக்கிரம என்ற பெயர்களைப் பெற்றுள்ளன.

இத்தகவல்களை 'தி ஐலண்ட்' ஆங்கிலத் தினசரி வெளியிட்டுள்ளது.

## ஆலய பூசகர் கைது!
### புலேந்திரனுடன் தொடர்பாம்

கொழும்பு மருதானைக் குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்ட புலேந்திரனுடன் தொடர்புடையவர்கள் பலர் தொடர்ந்து கைதாகி வருகிறார்கள். மட்டக்களப்பு- செங்கலடி வெள்ளிமலைப் பிள்ளையார் கோயிலின் பூசகரான த. உருத்திரகுமார் (31) கொழும்பிலிருந்து வந்த விஷேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சென்ற 19.03.98 அன்று பகல் கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சித்தாண்டியில் பூசை செய்யவேண்டியிருப்பதாகக் கூறியே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கூட்டிச் சென்றனராம். அவ்வாறு கூட்டிச் சென்றவரை உடனடியாகவே கொழும்புக்குக் கொண்டு சென்னர்.

புலேந்திரன் மேற்படி வெள்ளிமலைப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் தினமும் வந்து தனது பஸ்ஸை நிறுத்தி விட்டுக் கோயிலுக்குள் செல்வது வழக்கமாம். அத்துடன் பஸ்ஸுக்கு நெய் விளக்கேற்றி பஸ்ஸின் டயர்களுக்குத் தேசிக்காய் ஆராதனை நடத்துவதுண்டாம். புலேந்திரன் அங்கு வருவதை எதிரே உள்ள பொலிஸார் தினமும் நோட்டமிட்டிருக்கின்றனர். அதன்படி வழங்கப்பட்ட தகவலிலேயே பூசகர் கைதானார் என்ற விபரமும் வெளியாகியுள்ளது. இந்தக் கோயிலுக்குப் 15 அடி எதிரிலேயே செங்கலடி பொலிஸ் சாவடி உள்ளது.

கடந்த 6 வருடங்களாக இதே கோயிலில் பூசகராக உள்ள உருத்திரகுமார் மிகவறுமையானவர் என்றும் புலேந்திரன் மினி பஸ் கொள்வனவு செய்ததில் இவர் எத்தகைய நிதிப் பங்களிப்பையும் செய்திருக்கவில்லையென்றும் உறவினர்கள் அழுது புலம்புகிறார்கள். புலேந்திரன் பஸ் கொள்வனவு செய்ததற்கு புலி இயக்கத்தினரே முழுப் பணத்தையும் வழங்கினர் என்பது மிக உறுதியான விடயம் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

## வீடியோப் படப்பிடிப்பு —பாதுகாப்பு கெடுபிடி!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வோர், தற்போது மன்னாரில் வைத்து வீடியோ ஒளிப்பதிவு செய்யப்பட்டபின்பே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த நடைமுறை இதுகால வரையிலும், செட்டிகுள பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து மேற்கொள்ளப்பட்டது. கடந்த 26.03.98 முதல் மன்னார் கூட்டுறவு செயலக கட்டடத்தில் வீடியோ எடுக்கப்படுகிறது.

இதன்படி மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள், வன்னிப் பகுதியிலிருந்து வருபவர்கள் ஆகியோர் நாட்டின் தென்பகுதிக்குச் செல்லும்போது வீடியோ எடுப்பது அவசியமாகும். தற்காலிகமாக மன்னாருக்கு வந்து செல்பவர்கள் வீடியோ எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிகிறது.

மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு இராணுவத்தினரால் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதில் காணப்படும் புகைப்படப் பிரதிகளில் இரண்டு இராணுவ முகாமிலும், அவ்வப் பகுதி கிராம அதிகாரிகளிடமும் இருக்கின்றன.

இதனால் இப்பகுதியில் நிரந்தர இராணுவ அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் தாம் எதற்காக வீடியோ எடுக்கப்படுகின்றார்கள் எனத் தெரியாமல் தவிக்கின்றனர். இவ்வாறானவர்கள் ஏதேனும் சம்பவங்களுடன் தொடர்புபட்டால் உடனடியாகவே அவர்களைக் கண்டுபிடித்துவிட முடியும்.

இவ்வாறே அரச ஊழியர்களும் வீடியோ நடை முறையைப் பின்பற்றியே செல்ல வேண்டியுள்ளது. இவ்விடயமாக வன்னி மாவட்ட தமிழ்-முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கண்களை இறுக மூடிக் கொண்டிருப்பதாகவே இங்குள்ள பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் இப்பகுதியில் இடம்பெற்றால் அதனைத்தட்டிக் கேட்க எவருமில்லாத நிலையில் பல மாதங்களுக்குத் தொடர்ந்து நீடிக்கும் என்றே கருதப்படுகிறது.

## "தமிழ்க் குழுக்களே சிந்தியுங்கள்!"
### ஒரு தமிழ் மகனின் குமுறல்

தமிழ்க் குழுக்களே! சிந்தித்துப்பாருங்கள். மூன்று வருடம் ஆட்சிக்கு முண்டு கொடுத்தீர்களே! உங்கள் கோரிக்கைகள் எவைதான் நிறைவேறின? எல்லாமே குப்பைக் கூடைக்குள்தான். அரசியற் தீர்வுப் பொதி, வட-கிழக்கு இணைப்பு எல்லாம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைதான்.

அறிக்கைகள் விடுவதும், கண்டனங்கள் விடுவதும், பாராளுமன்றத்தில் அமர்வதும் தானா உங்கள் அரசியல்?தமிழ் மக்கள் அகதிகளாகி,உண்ண உணவின்றி,உடுக்க உடையின்றி, தங்க இடமின்றி, நோய்க்கு மருந்தின்றி காடுகளிலும் மர நிழல்களிலும், பாடசாலைகளிலும் சொல்லொணாத துன்பத்தை அனுபவிக்கின்றனர். காணாமற் போவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நாடெங்கிலும் தமிழன் என்றால் பயங்கரவாதி, சாவடிச் சோதனை, சுற்றி வளைப்பு, சிறைக் கூடக் கொடுரம், பொருளாதாரத் தடை இவற்றைப் பார்த்தும், கண்டும் காணாதவர்போல் இருக்கிறீர்கள். அரசின் கையாட்களாக நீவிர் இருக்க, உம்மை வைத்துக் கொண்டு அரசு உலகத்தின் கண்களை ஏமாற்றிச் "சமாதானப் போர்" புரிகிறது. உங்களுக்குச் சுகபோக வாழ்க்கை- தமிழர்களுக்கு உயிரோடு போராடும் வாழ்க்கை. ஏன் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? பதவியைத் தூக்கி எறியுங்கள். எல்லோரும் ஒன்று சேருங்கள். ஒரே குரலில் போர்க் குரல் எழுப்புங்கள். உலகமாவது எம்மைத் திரும்பிப் பார்க்கும். தமிழர்களை ஏமாற்றாதீர்கள். ஏமாற்றவும் துணை போகாதீர்கள். உங்களுக்கு மனச்சாட்சி உண்டா? சிந்தித்துப் பாருங்கள்!

நாட்டுக்காக எத்தனை ஆயிரம் போராளிகள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இத் தியாகங்களைக் கொச்சைப் படுத்தி தமிழ் மக்களை ஏன் படுகுழியில் தள்ளுகின்றீர்கள்?

உங்களால் பேரினவாதிகளிடமிருந்து எதனையும் பெறமுடியாது என்பதும், நீங்கள் ஏமாற்றப்படுவீர்கள் என்பதும் உண்மை. பேரினவாதிகளின் கையாட்களாக இராது வீரத் தமிழனாக நிமிர்ந்து நில்லுங்கள்.

மு.செல்வராசா. வவுனியா.

## இந்துக்களை புண்படுத்துகிறார்கள்!

சமீபகாலமாக ரூபவாகினியில் மாலை 7.15 மணியளவில் வாசனா அதிஷ்ட சுவீப் டிக்கட் விளம்பரத்தில் ஒரு விளம்பரம் செய்யும் நபர்,கோட்சூட்,டை உடையணிந்து நெற்றியில் பட்டையாக திருநீறு பூசி பொட்டும் வைத்து நடனமாடி கழுத்தையும் பக்கவாட்டில் இழுத்து காட்சியளிக்கிறாரே! விளம்பரம் தேவைதான். அதுக்காக இந்து சமய பண்பாட்டை இப்படியா அவமானப்படுத்துவது?

தீட்சை பெற்றவர் சூட்டுகள் போட்டு சப்பாத்து அணிவது பொருந்துமா? இந்து மாமன்றங்கள் என்ன செய்கின்றன? சிவராத்திரி விடுமுறை இரத்துப்பற்றி மட்டும் அவ்வப்போது அறிக்கை விட்டுவிட்டு மௌனமாகிவிடுகிறார்கள். இதேபோல் பிற சமய சின்னங்களைத் தொலைக்காட்சியில் கிண்டல் செய்தால் என்னவாகும்?

எதற்கெடுத்தாலும் தமிழர்களும் இந்து மதமும்தான் இவர்கட்கு வசதியாக அகப்பட்டதா? இனியேனும் ரூபவாகினி போன்ற தொலைக்காட்சி நிறுவனங்கள் இப்படி நிகழாது கவனித்துக் கொள்ள வேண்டும். இந்து மக்களின் மனம் புண்படாது நடக்க முயல வேண்டும்.

இ.பாலகிருஷ்ண சர்மா,
கொழும்பு-14.


ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான
BRIGHT வெளியீடுகள்
வெற்றிக்கனிக் களஞ்சியம் - 02

பொதுவிவேகம் பாடநூல்
பொதுவிவேகம் செயல் நூல்

வெற்றிக்கனி (ஏற்கனவே வெளிவந்தவை)
வெற்றிக்கனி - 98
இதழ் 1 முதல் 6 வரை

P. அம்பிகைபாகனின் அனைத்து வெளியீடுகளும்

மேலதிக விபரங்களுக்கு:
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27, First Floor, P.o. Box : 162
Central Super Market Complex
Colombo-11. T.P. 434770, 074 - 718592

அண்மையில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள தாரணீஸ் கொம்யூனிகேஷன் நிறுவனத்தினர் வாடிக்கையாளர்களுக்கும் 'தினமுரசு' வாசகர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.
தாரணீஸ் கொம்யூனிகேஷன்,
120, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
மாற்றுக் குறையாத தங்க நகைகளுக்கான கோரிக்கைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். தரத்துக்கு உத்தரவாதம்!
எவர்சில்வர் பாத்திரங்களுட்பட சகல இந்தியப் பொருட்களும் எம்மிடம் கிடைக்கும்.

கண்டியிலே முன்னணியில்...
வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குதில்
சாஜி இன்டர்நெஷனல் ஏஜன்சி
சவூதி அரேபியா, குவைத், டுபாய் சிங்கப்பூர்
நாடுகளில் உடன் வேலைவாய்ப்பு
மாலைதீவில் மேசன். தச்சன் அவசர வெற்றிடங்கள்
SAAJI International Agency
483 Peradeniya Road, Kandy.
அங்கீகார இல : 1361
☎ 074 - 470944
Royal - 071-35132

தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக தெய்வீக சேவை
THEYVIGA SAKTHY CENTRE — DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES
GOVT REGED NO. HA\04\BT\219
வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.
'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.
பாலுசோதிடர்-S.A.M.P. | BALUSOTHIDAR-S.A.M.P.
தெய்வீக சக்தி நிலையம் | THEYVIGASAKTHY CENTRE,
கல்லடி-அரசவிடுதி வீதி, | BATTICALOA (P.O.)
மட்டக்களப்பு. (P.O). | SRI LANKA.
"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"


காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)

இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.
விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=
ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

ஏ.எஸ். மொஹமட் மவாஹிம் வழங்கும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் அனுபவமுள்ளவர். உங்கள் நம்பிக்கைக்கும். அன்புக்கும் பாத்திரமானவர். உங்கள் கனவை நனவாக்க அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.
சவூதி அரேபியா, குவைத், டுபாய், கட்டார், ஜோர்தான், லெபனான், சிங்கப்பூர்.
◆ ஹவுஸ் மெயிட் ◆ ஹவுஸ் டிரைவர்
◆ ஹவுஸ் மெயிட்/ஹவுஸ் டிரைவர் (ஜோடி)
◆ ஹவுஸ் போய் ◆ குக் ◆ டெயிலர்
நிபந்தனைகளும், சலுகைகளும்
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாமல் பெறலாம்.
- தங்குமிட வசதி, வைத்திய வசதி என்பன இலவசம்.
- ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் திரும்பிவர விமான சீட்டு வழங்கப்படும்.
- ஏனைய சலுகைகள் அந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய வழங்கப்படும்.
சப் ஏஜன்ட்களுக்கு விஷேட சன்மானங்கள் உண்டு
பாஸ்போட், அனுபவச்சான்றிதழ் பிரதிகள், பாஸ்போட் அளவிலான 4 புகைப்படங்கள் சகிதம் நேரடியாக வரவும்.
அரப் விங்ஸ் டிரவல்ஸ்
(Arab Wings Travels)
இல.20/14, புளொக் 8-10, சிமொன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு-10. (சைக்கள் பஸார் / சின்ன பள்ளி அருகில்)
தொலை: 074-715557 பெக்ஸ்: 074-715557, 446535
App No. AL / 1498 / Advt / 01 / 98
GRAYOK

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
வவுனியாவில்
ஏப்ரல் 9,10,11 ம் திகதிகளில்
(2ம் குருக்குத் தெரு) ஞானவைரவர் கோவில் ஒழுங்கை vanni inn இல் சந்திக்கலாம்.
T.P. 024 -22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கொழும்பில்
ஏப்ரல் 19-26 ம் திகதிகளில்
DR.P. ARUMUGAM
BEAUTY LODGE, 65/3, Wolfendhal Street, Colombo-13.
T.P. - 338165, 338166 (உம்புச்சி பிளேஸ் பள்ளிவாசலுக்கு முன்னால்)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072 609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு வைக்கவும்


மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டி தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

சித்தர் மாந்திரீகம்
அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த் துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.
25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

# மூன்று முனையிலும் புலிகளின் அச்சுறுத்தல்!

'ஜயசிக்குறுய்' நின்ற இடத்திலேயே நிற்கிறது. மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் படையினர் நிலைகொண்டுள்ள பகுதியில் இருந்து மாங்குளம் ஏழு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

வவுனியா-யாழ் சாலையில் படையினர் நிலைகொண்டுள்ள புளியங்குளத்தில் இருந்து மாங்குளம் கிட்டத்தட்ட 21 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

நெடுஞ்சாலை வழியாக முன்னெறினால் குறிக்கப்பட்ட பாதையூடாகவே நகரவேண்டும். எனவே, புலிகளுக்கு தடுத்து நிற்பது சுலபம்.

உட்பாதைகள் வழியாக பரந்து முன்னேறினால், படையினர் எந்தப் பாதையால் நகருவர் என்று குறிப்பறிந்து தடுப்பு நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவது கடினம் என்று படையினர் நினைத்தனர்.

**ஆரம்பத்தில் படையினரது திட்டம் கைகொடுப்பது போலவே இருந்தது. உட்பாதைகள் வழியாக முன்னேறி மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் கரிப்பட்ட முறிப்புவரை படையணிகள் செல்ல முடிந்தது.**

அதனை வைத்து படையினர் சற்று மிகையான நம்பிக்கை கொண்டுவிட்டனர். அந்த மிகையான நம்பிக்கைதான் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக தரைப் பாதையைத் திறந்தே தீருவோம் என்று நம்பிக்கையுடன் புதிய காலவரையறையை அறிவிக்கவும் காரணமானது.

வவுனியா யாழ் சாலை வழியாக மாங்குளத்தை அடைய 21 கிலோமீட்டர் இருப்பதால், அம் முயற்சியைக் கைவிட்டு, கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் இருந்து மாங்குளத்தை கைப்பற்றும் முயற்சியில் முழுக்கவனம் செலுத்தப்பட்டது.

கரிப்பட்டமுறிப்பு ஒலுமடுப் பகுதியில் மேலதிக படையணிகள் ஒன்று குவிக்கப்பட்டன. மாங்குளத்தையாவது எப்பாடுபட்டாவது பிடித்துவிட மும்முரமான முயற்சிகள் செய்யப்பட்டன.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையும் கள **முனைக்கு** நேரடியாகச் சென்று படையினருக்கு உற்சாகமளித்தார். இவ்வாறான தருணங்களில் கள முனைக்கு செல்வது அபாயமானது.மோட்டார் ஷெல்கள் எந்நேரமும் எங்கு வேண்டுமானாலும் வந்து விழக்கூடும்.

**ஆனாலும் அரசுக்கு இது கௌரவப் பிரச்சனை. பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் கௌரவப் பிரச்சனை. அதனால் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் நேரடியாக களமுனைக்கு சென்றார்.**

**ஆனாலும் அடிமேல் அடி அடித்தும் இம்மியும் நகர முடியாதளவுக்கு களநிலவரம் இருப்பதுதான் பேராச்சரியம். போர் ஆச்சரியமும் அதுதான்.**

மாங்குளத்தை கைப்பற்றும் முயற்சி ஆரம்பித்து ஒரு மாதம் பூர்த்தியாகிவிட்டது. ஆக, ஏழு கிலோமீட்டர் தூரம்.

மாங்குளத்தை நெருங்கிவிட்டோம் என்று கூறிக்கொண்டிருந்த படைத்தரப்பு, தன் கணிப்புப் பொய்யானதும், பல்டியடித்தது.

**"மாங்குளத்தை பிடிப்பது எமது நோக்கமல்ல, புலிகளை அழிப்பதுதான் நோக்கம்" என்று இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க கூறியிருந்தார்.**

ஜயசிக்குறுய் ஆரம்பிக்கப்பட்டபோதே அதன் நோக்கம் புலிகளை அழிப்பதுதான் என்பது தெரியாதது அல்ல.

**ஆனால், அரசாங்கமும், படைத்தரப்பும் தமது நோக்கம் யாழ் மக்களுக்கான தரைப்பாதை ஒன்றை திறப்பதுதான் என்று பூசிமெழுகிக் கொண்டிருந்தன.**

இப்போது உண்மையை மறைக்க முடியாத நிலையில் அரசும், படைத்தரப்பும் தங்கள் நோக்கத்தை கூறிவிட்டன.

'புலிகளை பலவீனமாக்குவதற்குத்தான் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது' என்று நீதியமைச்சர் பீரிசும் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியிருக்கிறார்.

இவ்வாறு உண்மையைக் கூற நேர்ந்ததுக்கும் புலிகளது இராணுவ பலம்தான் காரணம். தரைப்பாதையை திறக்க பதினொரு மாதம் போரிட்டும் பயனில்லையே? என்ற வியப்பும், அரசின் போர் முழக்கங்கள் குறித்து நம்பிக்கையீனங்களும் சிங்கள மக்களிடம் தோன்றிவிட்டன.

**உலகில் மிக நீண்டகாலம் நடைபெற்ற சமர்களில் ஒன்றாக 'ஜயசிக்குறுய்' மாறிக் கொண்டிருக்கிறது.**

யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் புலிகளின் முதுகெலும்பை முறித்துவிட்டோம் என்று தம் முஷ்டியை உயர்த்திக் காட்டிய அரசும் படைகளும், பதினொரு மாதமாக போரிட்டும் இலக்கை எட்டவில்லை

இந்த போர் அரங்கு ஆச்சரியத்தை மறைப்பதற்கும், தமது கணிப்புக்கள் பொய்யானதை, பூசி மெழுகவுமே பழைய உண்மையை இப்போது சொல்ல வேண்டியதாகியது.

பழைய உண்மை என்று சொல்லக் காரணம் இருக்கிறது. புலிகளை பலவீனமாக்குதல் என்ற நோக்கம் ஜயசிக்குறுய் ஆரம்பமானபோது இருந்ததுதான் உண்மை.

**இப்போது புலிகள் பலவீனமாகிறார்களோ இல்லையோ, எப்படியாவது கிளிநொச்சிவரை ஓடிமுடித்தால் போதும் என்ற கட்டத்தில் 'ஜயசிக்குறுய்' மூச்சுவாங்கு கிறது.**

ஒரு யுத்தம் பல சமர்களைக் கொண்டது. ஒரு சமர் பல சண்டைகளைக் கொண்டது.

**மூன்றாம் கட்ட ஈழ யுத்தத்தில் சூரியக் கதிர், 'சத்ஜய', 'எடிபல','ஜயசிக்குறுய்' ஆகியவையே இன்றுவரையான பாரிய சமர்களாகும்.**

இவற்றில் 'எடிபல'வை புலிகள் எதிர்கொள்ளாமல் தவிர்த்தனர். சூரியக்கதிர், சத்ஜய இரண்டையும் தந்திரோபாயமாக எதிர்கொண்டு சமர் செய்தனர்.

ஆனால், 'ஜயசிக்குறுய்' சமரில் உள் புகுந்த படையணிகளை இறுதியாக அழித்தொழித்தல் என்ற இலக்கோடு புலிகள் பல சண்டைகளை நிகழ்த்தியுள்ளனர்.

**பெரியளவிலான தாக்குதல்கள், சிறியளவிலான தாக்குதல் என்பவை மூலம் 'ஜயசிக்குறுய்' படையணிகளை சேதமாக்கி பலவீனப்படுத்துதல், களைப்படைய வைத்தல், செறிந்த படையணியாக புகுந்தவர்களை மெலிந்த படையணியாக மாற்றிவிட்டு முற்றாக அழித்தொழித்தல் என்ற பாரிய இராணுவ உத்தியோடு புலிகள் வியூகம் அமைத்துள்ளனர்.**

இன்று வன்னி யுத்தத்தின் இரு பிரதான முனைகளாக மாங்குளமும், கிளிநொச்சியும் மாறியுள்ளன.

கிளிநொச்சி நகரின் மத்திவரை புலிகள் நிலைகொண்டுள்ளனர். கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகே தமது முன்னரங்கை அமைத்து படையினர் நிலைகொண்டுள்ளனர்.

படையினரின் நிலைகளுக்கு அண்மையாக புலிகளின் நிலைகளும் அமைந்துள்ளன. இழந்த பகுதிகளை மீட்க இதுவரை பத்துக்கு மேற்பட்ட படை நகர்வுகளை மேற்கொண்டும் படையினரால் முன்னேற முடியவில்லை.

கிளிநொச்சி சண்டை இதுவரை காலச் சண்டைகளில் இருந்து குணாம்ச ரீதியில் மாறுபட்டதாகும்.

படையினர் நிலைகொண்ட பிரதேசம் ஒன்றுக்குள் புகுந்து தாக்கிவிட்டு குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் வெளியேறிவிடுவதுதான் இதுவரை புலிகள் மேற்கொண்ட சண்டை முறையாகும்.

**படையினர் நிலைகொண்டுள்ள பரந்த பிரதேசத்தில் ஒரு பகுதியை கைப்பற்றி அங்கு நிலைகொள்வது என்பது முதன் முதலில் கிளிநொச்சி சண்டையின் பின்னரே ஏற்பட்டுள்ளது.**

முல்லைத்தீவில் முகாமை தாக்கியது மூலம் அந்த நிலப்பகுதி முழுவதும் புலிகளது கட்டுப்பாட்டில் வந்தது.

ஆனால், முல்லைத்தீவில் பாரிய பிரதேசத்தில் படையினர் தொடர்ச்சியாக நிலைகொண்டிருக்கவில்லை. பின்தள வசதிகள் இருக்கவில்லை. முகாம் மட்டுமே இருந்தது.

ஆனால், கிளிநொச்சிப் படையினருக்கு அங்கிருந்து ஆனையிறவுவரை தொடர்ச்சியான பின்தளம் இருக்கிறது. யாழ் குடாநாட்டு படையினரில் ஒரு பிரிவினர்கூட கிளிநொச்சி படையினருக்கு உதவியாக விரைந்தனர்.

அவ்வாறு இருந்தும் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் முயற்சி இன்றுவரை பலிக்கவில்லை.

அதே சமயம் ஆனையிறவு இராணுவ முகாமின் இன்னொரு முனையான பச்சிலைப் பள்ளிப் பகுதியில் இருந்த காவலரண்கள் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன.

**யாழ் குடாநாட்டில் புகுந்துள்ள புலிகளது படையணிகளே தென்மராட்சி ஊடாக ஊடுருவி இத் தாக்குதலை நடத்தியுள்ளன.**

மினிமுகாம் ஒன்றும், ஆறு காவலரண்களும் ஒரே நேரத்தில் தாக்கப்பட்டன. அதிகாலை மூன்று பதினைந்து மணியளவில் காவலரண்கள் நோக்கிய தாக்குதல் ஆரம்பமானபோது, புலிகளது பாய்ந்து செல்லும் அணி மினிமுகாம் நோக்கி ஊடுருவியது.

முதலில் எதிர்ப்பு காட்டிய படையினர் பின்னர் புலிகளின் கைகள் மேலோங்கியதால் பின்வாங்கினர்.

**புயல் வேகத்தில் நடத்தப்பட்ட இத் தாக்குதல் ஐந்து நிமிடம் வரையே நீடித்தது. அதன்பின்னர் 45 நிமிடம் அப் பகுதியில் நின்று, அங்கிருந்த ஆயுத தளபாடங்களை புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். புலிகள் தரப்பில் இருவரும், படையினர் தரப்பில் ஆறுபேரும் இச் சண்டையில் பலியாகினர்.**

வன்னியுத்தத்தின் இருமுனைகளில் ஒன்றான கிளிநொச்சியில் உள்ள கிளிநொச்சி நகர், பரந்தன் மற்றும் ஆனையிறவு படைத்தளங்களும், நிலைகளும் இப்போது புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இதனையடுத்து படை நகர்வுகளுக்கு மட்டுமன்றி, படை நிலைகளை பாதுகாக்கும் பணிக்கும் படையினர் மேலதிகமாக தேவைப்படுகின்றனர்.

படையினர் மாங்குளத்தை கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, புலிகள் மீண்டும் கிளிநொச்சி, ஆனையிறவு படைத் தளங்கள்மீது பாய்ந்துவிடக்கூடும் என்ற சந்தேகமும் இல்லாமல் இல்லை.

இதனால் வேறு வழியின்றி கொழும்பில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்ட படை எண்ணிக்கையில்தான் கைவைத்துள்ளது படைத் தலைமை.

தலதா தாக்குதல், கொம்பனி வீதி குண்டு வெடிப்பு, மருதானைக் குண்டு வெடிப்பு போன்றவற்றின் பின்னர் கொழும்பு தடை அரண்கள் ஒவ்வொன்றிலும் படையினர் எண்ணிக்கை அதிக மாக்கப்பட்டது.

**குண்டு வாகனங்களில் தாக்குதல் அணியும் இணைந்து வருவதால், அதனை எதிர்கொள்ளும் வகையில் தடை அரண் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.**

முக்கியமான பாதுகாப்பு அரண்களில் ஆர்.பி.ஜி ரொக்கட் லோஞ்சருடன் தயார் நிலை காணப்பட்டது.

ஆனால் சமீப நாட்களில் மீண்டும் முன்னர்போல தடை அரண்களில் குறைந்தளவு படையினரே காணப்படுகின்றனர். ஆர்.பி.ஜியுடன் நிற்கும் சிப்பாய்களையும் காணவில்லை.

வன்னிக் களத்துக்கு மேலதிக படையினரை அனுப்பும் அவசியம் கருதி தலைநகர பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த படையினரும் கொண்டு செல்லப்பட்டுவிட்டனர் என்றே ஊகிக்க முடிகிறது.

யாழ் குடாநாட்டிலும் புலிகளது தாக்குதல்கள் வேகம் பிடிக்க ஆரம்பித்துவிட்டன.

**யாழ்ப்பாணம் வடமராட்சியில் புலிகளின் பாரிய அணிகள் நடமாடுகின்றன. ஆனாலும் படையினரால் வடமராட்சி நாகர் கோயிலைத் தாண்டி முன்னேற முடியவில்லை.**

பெரிய எடுப்புடன் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற முயற்சி, புலிகளது மோட்டார் தாக்குதல்களால் பின்னடைந்தது. நாகர் கோவில்வரை சென்றுவிட்டு படையினர் திரும்பியுள்ளனர்.

**படை அதிகாரிகள் பலர் மாற்றப்பட்டனர்.**
**வியூகங்கள் பல முறை மாற்றப்பட்டன.**
**காலவரையறைகள் பலமுறை குறிக்கப்பட்டன.**
**கள நிலவரம் மட்டும் மாறவில்லை!**




கிளிநொச்சியில் புலிகள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

மணல் திட்டுக்களுக்குள்ளும், புதர்களுக்குள்ளும் மறைந்திருந்த புலிகள் முன்னேறும் படையினரை கிட்ட நெருங்கவிடாமல் தாக்கியுள்ளனர்.

படையினர் மேலும் பலத்தை திரட்டிக் கொண்டு முன்னேறினால்கூட புலிகளது அணிகளை முற்றுகையிடமுடியாது. கடற்பகுதியால் சுலபமாகத் தப்பிச் சென்றுவிடுவர்.

கடற்படையினர் உதவியோடுதான் முற்றுகைக்கு திட்டமிடவேண்டும். அவ்வாறு செய்தால் கடற்படையினருக்கும் புலிகள் பொறி வைக்கலாம் என்ற சந்தேகமும் இருக்கிறது.

**தற்போதைய நிலையில் அரசின் முப்படைப் பலம் என்பது ஒரு வரையறைக்கு உட்பட்டதாகவே இருக்கிறது.**

தன்னிடம் உள்ள வான் கலங்களையும், கடற் கலங்களையும் போனால் போகட்டும் என்று பறிகொடுக்கும் அளவு அரசிடம் நிதி வளம் ஒன்றும் கொட்டிக் கிடக்கவில்லை.

**கரணம் தப்பினால் மரணம் என்று நினைக்குமளவுக்கு தரை, கடல், ஆகாயம் மூன்றிலும் புலிகளின் தாக்குதல் பலம் நீண்டுள்ளது.**

யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது புலிகள் காட்டிய போர் ஆற்றலைவிட, யாழ் குடாநாட்டை இழந்தபின்னர் புலிகளின் போர் ஆற்றல், படைக்கலப் பலம், உக்கிரம் என்பன தற்போது அதிகமாகியுள்ளன.

அரசின் தரைப்படையில் அரைப் பங்கு ஆட்பலம் வன்னிப் போர் முனையில் குவிக்கப்பட்டுள்ளது. பதினொரு மாதகாலமாக இத்தகைய பாரிய தொகைப் படையணி முடங்கிக்கிடப்பது என்பது லேசுப்பட்ட ஒன்றல்ல.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு மட்டும் தினமும் 14 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. இது வரை கிட்டத்தட்ட 432 கோடி **ரூபாய்கள் தண்ணீராகக் கரைந்துள்ளன. நூறு கோடி ரூபாய்களுக்கு அதிகமான படைக் கலங்கள் இழக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன என்று ஒரு புள்ளி விபரம் கூறுகிறது.**

ஓயாத அலைகள் முதல் ஜயசிக்குறுய் வரை படையினர் தரப்பில் ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் பலியானதாக புலிகள் கூறுகின்றனர். காயமடைந்தோர் எண்ணிக்கை இதனைவிட பல மடங்காக இருக்கும் என்றே தெரிகிறது.

இந்நிலையில் முன்வைத்த காலை பின்னுக்கும் இழுக்க முடியாமல், தொடர்ந்து முன்னுக்கும் எடுத்து வைக்க முடியாத நிலையில் அரசு தத்தளிக்கிறது.

சமீபத்தில் இராணுவத் தளபதி வன்னிக் கள முனைக்கு திடீர் விஜயம் செய்து நிலவரத்தை பார்வையிட்டார்.

இதுவரை படை அதிகாரிகள் பலர் மாற்றப்பட்டனர். வியூகங்கள் பலமுறை மாற்றப்பட்டன. ஆனால் படை அதிகாரிகளின் கையிலோ, படைக்கல பலத்திலோ வன்னி களநிலவரம் தங்கியிருக்கவில்லை.

எந்த விலை கொடுத்தும் இலக்கை எட்டும் புலிகளின் மன உறுதிதான் கள நிலவரத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கிறது. அதனை உணராவிட்டால் போர் ஆச்சரியங்களின் புதிர் ஒரு நாளும் விடுபடாது.

சித்திரைப் புத்தாண்டின் பின்னர் மறுபடி படைத்தரப்பு முனைப்புக் காட்டும். தெற்கில் வேலை நிறுத்த நெருக்கடிகள், ஐ.தே.கட்சியின் வளர்ந்து வரும் செல்வாக்கு என்பவற்றை எதிர்கொள்ள "ஜயசிக்குறுய்" தொடர்கிறது. 'புலிகளின் கேந்திர நகர் வீழ்ந்தது' என்ற மந்திரத்தை உச்சரிக்க ஆவலாயுள்ளது அரசாங்கம். ஆனால் ஒருவேளை நகர்கள் வீழ்ந்தாலும் கூட சமர் ஓயாது. ◻

**நாரதர்**

## மன்னகுளம் மோதல்

**ம**ன்ன குளத்தில் 4.12.97 அன்று விசேஷ கொமாண்டோக்களுக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் மூண்டதல்லவா. இம் மோதல் பற்றி எக்ஸ்ரே ரிப்போட்டில் விளக்கப்பட்டிருந்தது.

டம்மி முகாம் செய்து வைத்து படையினரை ஏமாற்றினர் என்றும் சில தகவல்கள் அப்போது வெளியாகின. நாம் அதை மறுத்திருந்தோம். அவ்வாறு செய்வது சாத்தியமில்லை என விளக்கி இருந்தோம் அல்லவா.

இப்போது புலிகளே அந்த மோதல் தொடர்பாக உத்தியோகபூர்வமாக விபரித்துள்ளனர். அதில் இருந்து மேலும் சில தகவல்கள்:

பெண்புலிகள் தங்கியிருந்த மாலதி படையணி நிலைகள்மீதே விசேஷ கொமாண்டோக்கள் தாக்குதல் தொடுத்தனர்.

இத் தாக்குதலை முறியடிப்பது தொடர்பாக புலிகளின் கட்டளை மையத்தில் இருந்து கிடைத்த உத்தரவு இதுதான்: "விலை என்னவாக இருந்தாலும் வெற்றி ஒன்றே நோக்கமாக இருக்கட்டும்."

தமது நிலைகளில் நின்று மாலதி படையணி பெண் புலிகள் இறுதிவரை தாக்குதல் தொடுத்தனர்.

ஒரு முனையில் சக பெண் புலிகள் காயமடைந்த நிலையில் நிலாம்பரி என்னும் பெண்புலி கடைசி வரை நின்று சண்டையிட்டார்.

விசேஷ கொமாண்டோ அணியினரை இடைமறித்து வெட்டி புலிகளின் பாய்ந்து செல்லும் அணி தாக்குதல் நடத்தியது. மறிக்கப்பட்டு முற்றிகையிட்டவர்களை மீட்க முடியாத நிலையில் படையினர் பின்வாங்கினர். ◻

## அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்தில் குட்டித் தேர்தல்** நடந்தாலும் நடந்தது-போங்கோ, முன்னான் தலைவர்களுக்கு தூக்கம் போச்சுது. தரையில் கால் படாமல் ஓடித் திரிகினம். இளைஞர்களையும் சேர்க்கப் போகினமாம். 'கி' என்பதற்கு பதிலாக 'இ' என்று உச்சரித்துப் போட்டினமாக்கும். கண்மண் தெரியாமல் ஆடினால், யார் கண் படப்போகுதோ?

**திருவான மலையில்** தமிழ்ச் சனத்தை விரட்டும்போது: 'போய் சம்பந்தமானவரிடம் சொல்லுங்கோ. எங்களை ஒன்றும் பண்ணமுடியாது" என்று சொன்னவையாம்.அதை சம்பந்தமானவருக்கு சனம் சொன்னதாம். அவருக்கு கோபம் வரவே இல்லையாம். ஞானிகளுக்கு கோபம் வராது. முற்றும் துறந்தோரே ஞானிகள். முற்றும் என்பதில் இனப் பற்றும் அடங்கும்!

**திருக்கேதீஸ்வரத்துக்கு** அதிகாரத் தரப்பார் நிதியள்ளிக் கொடுத்ததாக செய்திகள் வந்ததல்லோ! நிதி கொடுத்து என்ன, அங்குள்ள பதியின் கதி யாருக்குத் தெரியும்? சிருடையினர் சகோதர மொழியில் பூசை செய்கிறார்களாம். நிதி கொடுத்ததே தந்திரம்தானே? மந்திரத்தை எந்த மொழியில் ஓதினால் என்ன?

**பக்கத்து நாடு** தலையிடக் கூடாதாம். வெகு தீர்மானமாக மகஜர் குடுத்திருக்கினம் பௌத்த குருமார். இது இந்து அமைப்புக்களுக்கு போட்டியாக தீட்டிய மகஜராக்கும். எல்லாம் சரி பக்கத்து நாட்டில் இருந்துதானே பௌத்தமே வந்தது! அதை மறக்கலாமோ?

**ரூபவாஹினித் தலைவர்** முன்னாள் இடதுசாரி. விட்டால் இனப்பிரச்சனை தீர்வு, தமிழர் தரப்பு நியாயம் பற்றியெல்லாம் மூச்சுவிடாமல் மூன்று மணி நேரம் பேசுவார். ஆனால் தோழரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ரூபவாஹினி, "செந்தமிழை சாகும்வரை விடமாட்டோம்!" என்று திடசங்கற்பம் பூண்டுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் நாடகங்கள் என்ற பெயரில் செந்தமிழ் சிங்களத் தமிழாகிக் கொண்டிருக்கு. தோழர் சோக்காகப் பேசுகிறார். தமிழை மட்டும் ஏன் சாக்காட்டுக்கு அனுப்புவிக்கிறார். தமிழ் பேசும் நடிகர்களுக்கு பஞ்சமோ? அன்றில் வஞ்சமோ? எல்லாம் பேரினவாதத்துக்கு குஞ்சம்தான்.

**கூட்டான கட்சியின்** குழுக்கூட்டத்தில் சிலர் கொதிச்சவையாம். வேறு சிலர் துடிச்சவையாம். சம்பந்தமானவர்தான் கொள்கை விளக்கம் செய்தவராம். "விட்டுக் கொடுத்துத்தான் போகவேண்டும்!" என்றாராம். எல்லைக் காவலர்கள், இனமான சிங்கங்கள் எல்லாம் விட்டுக் கொடுத்துத்தான் திருவான மலையை தாரைவார்த்தவை. இனி எதை விட்டுக் கொடுக்கச் சொல்லுறார்?

**யாழ்ப்பாணத்தில்** சித்திரை வருஷக் கொண்டாட்டங்கள் சீருடையினரால் அமர்க்களமாம். விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்று தடபுடல் பண்ணுகினம். தமிழ்க் கட்சிகள் சலசலப்புக் காட்டேல்லை. எலக்ஷனுக்கு பளபளப்பு காட்டியதில் எக்கச்சக்கமாக கையைக் கடிச்சுப்போட்டுது என்று கேள்வி.

**அவர் ஒரு தமிழ்க் கட்சிப்** பிரமுகர். வேலை வாய்ப்புப் பெற்றுத் தரும்படி கேட்டு ஓர் இளம் பெண் சென்றாராம். பிரமுகரும் உடனடியாகச் சந்தித்தாராம். வேலை கேட்டவரிடம் ஒரே ஒரு நியந்தனை போட்டாராம் பிரமுகர். "ஒரு நாள் மட்டும் நான் அழைக்கும் இடத்துக்கு வந்தால் போதும்," என்றாராம். தப்பினால் போதும் என்று ஓடிவந்து விட்டார் இளம்பெண். பதவி வந்தால் பத்தும் பறக்கும் என்பது சரிதானோ?

**"ரெண்டு எழுத்தாரின்** ஆலோசகர் படுத்த படுக்கையாக இருக்கிறார். பிறநாடு கொண்டுபோக படாதபாடு படுகினம். கடலில்கடும் பாதுகாப்பு ஏற்பாடு செய்திருப்பதால் அசையமுடியவில்லை" என்று தொலைக்காட்சி செய்தி சொன்னதல்லோ? படு ஆரோக்கியமாக யாழ் ஆயரைச் சந்தித்திருக்கிறார் ஆலோசகர். பார்த்தியளோ எப்படியான செய்திகளை எல்லாம் எங்கண் தொலைக்காட்சிக்காரர் சமைச்சுத் தருகினம்?!

**யாழ்ப்பாணத்தில்** பாடசாலை ஒன்றில் சிரமதானத்துக்கு தயாரானது ஒரு கட்சி. பாடசாலை அதிபர் இன்னொரு கட்சிக்கு வேண்டப்பட்டவராம். அதனால் இரவோடு இரவாக அக்கட்சிக்கு தகவல் அனுப்பிப் போட்டார். மறுநாள் காலையில் சிரமதானத்துக்கு முதலில் திட்டமிட்ட கட்சி சென்றபோது கசப்பான அதிர்ச்சி காத்திருந்ததாம். இன்னொரு கட்சியினர் வெகு தீவிரமாக சிரமதானம் செய்துகொண்டிருந்தவையாம். சபாஷ் சரியான சனநாயகப் போட்டி.

**தமிழ்க் கட்சிகள்** தமிழ்ச் சமூகத்துக்கு ஆற்றிவருகிற அரும்பெரும் பணிகளில் ஒன்று 'சமாதான நீதிபதி' பதவி விநியோகம். ஊரைச் சுருட்டி உலையில் போடுகிறவையெல்லாம் சமாதான நீதிவான்களாம். பாதை மட்டுமல்ல, தமிழ்க் கட்சிகளின் பார்வையும் பிழையாய்ப் போச்சு. இல்லையென்றால் சமூக விரோதிகள் சமாதான நீதிபதி பதவிகளுக்கு தகுதி உள்ளவர்களாகத் தெரிவினமோ?

**இந்தியப் பிரதமர்** வாஜ்பேய் ஒரு சிறந்த கவிஞர். அவர் அன்று எழுதிய கவிதை இது. இன்றும் பொருந்துமா பாருங்கள்:

"இறைவா!
இத்தனை உயரம் எனக்கு
ஒரு போதும் கொடுத்துவிடாதே!
சக மனிதனை
தோளோடு அணைக்க இயலாத
இத்தனை உயரம் எனக்கு
ஒருபோதும் கொடுத்துவிடாதே!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது




### மக்கள் முன்னணி

'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்ற பெயரில் தங்கள் அரசியல் கட்சியை பதிவு செய்தனர் புலிகள். ஆங்கிலத்தில் சுருக்கமாக பி.எஃப்.எல்.ரி. என்று அழைக்கப்பட்டது.

இதனை அறிவிக்குமுகமாக கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை பி.எஃப்.எல்.ரி நடத்தியது.

சிவப்பு வர்ணம்ப் பின்னணியில் புலியொன்றின் தலை கட்சியின் சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

புலிகள் விரும்பிக் கேட்ட சின்னத்தையே அரசாங்கம் ஒதுக்கிக் கொடுத்தது.

கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணி செயலாளர் யோகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துக்கள் இவைதான்:

அரசியல், இராணுவ அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரின்கீழ் ஓர் அரசியல் கட்சியாக சிறீலங்கா அரசு அங்கீகரித்துள்ளது.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு தொடர்ந்து இயங்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவராகவும், இராணுவப் பிரிவின் தளபதியாகவும் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனே தொடர்ந்து இயங்குவார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியின் தலைவராக திரு. மகேந்திரராஜா மாத்தையாவும், செயலாளராக திரு.யோகரத்னம் யோகியும் பணிபுரிவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை கூர்ந்து கவனித்தால், பிரபாகரனும், புலிகளும் பிரேமதாசாவை நம்பி தங்கள் கொள்கைகளை கைவிட்டிருக்கவில்லை என்பதும், தேசிய விடுதலை இயக்கத்தை பேச்சு வார்த்தை மாயைகளில் சிக்காமல் தனியாக வைத்திருந்தனர் என்பதும் புரியும்.

இலங்கை அரசுடன் புலிகளும் பேச்சு நடத்தினார்கள்தானே? என்று தங்கள் சரணடைவு கொள்கைகளை நியாயப் படுத்த சில தமிழ்க் கட்சிகள் கேட்பதுண்டு.

புலிகள் அரசுடன் நடத்திய பேச்சையும் தமிழ்க் கட்சிகள் நேற்றும், இன்றும் அரசுடன் நடத்தும் பேச்சையும் ஒப்பிடுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதற்கு ஒப்பானது.

### மாகாணசபைத் தேர்தல்

"வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மீண்டும் நடத்தப்பட்டால் போட்டியிடுவீர்களா?" என்று திரு.அன்ரன் பாலசிங்கத்திடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

மிகக் கவனமாக அக் கேள்விக்கு பதில் கூறினார் அன்ரன் பாலசிங்கம்: "மாகாண சபை அமைப்பை ஓர் இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக் கொண்டு தேர்தலில் பங்கு பற்றுவோம்.

தமிழீழ மக்களின் பூரண ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது. என்பதை நிரூபிக்க மாகாண சபை தேர்தலைப் பயன்படுத்துவோம்."

மேற்கண்டவாறு கூறிவிட்டு மேலும் ஒரு விடயத்தையும் திட்டவட்டமாகக் கூறினார் பாலசிங்கம்:

"இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் நாம் தேர்தலில் போட்டியிடுவோம்."

"என்ன நிபந்தனைகள்?" என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு அன்ரன் பாலசிங்கம் சொன்ன பதிலில் புலிகளின் இராஜதந்திரம் அடங்கியிருந்தது.

"ஒன்று, இந்திய இராணுவம் முழுமையாக தமிழீழ மண்ணைவிட்டு வெளியேற்றப்பட வேண்டும். இரண்டாவது, மோசடித் தேர்தல் மூலம் இந்திய இராணுவத்தால் பதவியில் அமர்த்தப்பட்ட பொம்மை அரசான வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட வேண்டும். அதன் பின்னர்தான் தேர்தலில் போட்டியிடுவோம்" என்றார் அன்ரன் பாலசிங்கம்.

இந்திய, இலங்கை அரசுகள் தங்கள் நலன்களுக்காக செய்த ஒப்பந்தத்தையும், அதன் விளைவான இந்தியப்படை, மாகாண சபை போன்றவற்றையும் இலங்கை அரசு மூலமே ஒரு வழி பண்ணுவதுதான் புலிகளின் இராஜதந்திரம்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டை வைத்து இந்திய அரசு முன்பு காய் நகர்த்தியது.

அதே போலவே, இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையேயான முரண்பாட்டை வைத்து காய் நகர்த்தினர் புலிகள்.

தேர்தலில் போட்டியிடத் தயார் என்று அறிவித்ததும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ததும்கூட ஒரு இராஜதந்திர நடவடிக்கைதான்.

பிரேமதாசா அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தாம் வெறுமனே இராணுவ அமைப்பல்ல, அரசியல் இராணுவ அமைப்பு என்பதை புலிகள் நிரூபித்தனர்.

### கட்டுப்பாடு

மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற மாவட்டங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

அங்கிருந்து இந்தியப் படையினர் வெளியேறி முடிக்க முன்னரே இந்தியப் படையுடன் இணைந்து நின்ற இயக்கங்கள் வெளியேறி விட்டன.

இந்தியப் படை வெளியேறியதும் அப் பகுதிகளில் நடமாடவும், ரோந்தில் ஈடுபடவும் முயன்ற இலங்கை அரசின் பொலிசாரும், இராணுவத்தினரும் புலிகளால் தடுக்கப்பட்டனர்.

இந்தியப் படை வெளி யேறிய இடத்தில் இலங்கைப் படையினரை நிறுத்தி வைக்க அனுமதிக்கக்கூடாது என்பது பிரபாகரனின் கண்டிப்பான உத்தரவு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் சீருடைகளுடனும், ஆயுதங்களுடனும் நடமாடினர். சில பகுதிகளில் புலிகளின் அனுமதி பெற்றுத்தான் பொலிசாரோ, படையினரோ தங்கள் முகாம்களை விட்டு வெளியே நடமாட முடிந்தது.

## ரஜினி படுகொலை சூத்திரதாரிகள் யார்?

அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் நத்தார் பண்டிகைகள் நீண்ட காலத்தின் பின் 1989ல் கலகலப்பாக நடைபெற்றன.

இலங்கை இராணுவமும், பின்னர் இந்தியப் படையினரும் பட்டாசுகள் கொளுத்த கட்டுப்பாடுகள் விதித்திருந்தனர்.

இந்தியப் படையினர் வெளியேறியதால் சிறுவர்கள் பட்டாசுகள் கொளுத்த நத்தார் கொண்டாட்டங்கள் களைகட்டின.

### கலைஞருடன்

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், யோகியும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியைச் சந்திக்க தமிழகம் சென்றனர்.

அச் சந்திப்பின் பின்னர் கலைஞர் கருணாநிதி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

"விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது. அவர்களது வீடியோ கசட் ஒன்றை பார்வையிட்டேன். அவர்கள் நடத்திய கூட்டம் ஒன்றில் பெருந்திரளான மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டிருப்பதை கண்ணுற்றேன்" என்று கூறினார் கருணாநிதி.

"ஒன்றரை மணிநேரம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினேன்.

தமிழீழத்தில் நிலையான அமைதியை ஏற்படுத்தவும், தமிழீழ மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பும் நல்வாழ்வும் அமைவதற்கு வழி வகைகள் காணவேண்டும் என்ற அடிப்படையிலுமே பேச்சு நடந்தது" எனவும் கருணாநிதி கூறினார்.

அப்போது நிருபர் ஒருவர், புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்கள் உங்களுக்கு நம்பிக்கை தருகிறதா? என்று கேட்டார்.

உடனே கலைஞர் கருணாநிதி, "என்னைப் பார்த்தாலே அது உங்களுக்குப் புரியவில்லையா?" என்ற முகமலர்ச்சியுடன் பதில் கேள்வி தொடுத்தார்.

புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் பற்றி புதுடில்லி சென்று பிரதமர் வி.பி.சிங்குக்கு எடுத்துக் கூற உள்ளதாகவும் கருணாநிதி கூறியிருந்தார்.

### ரஜினி திரணகம

1989ம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற படுகொலை நடவடிக்கை ஒன்று இன்றுவரை மர்மமாகவே உள்ளது.

**யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் ரஜினி திரணகமவின் படுகொலையே அதுவாகும்.**

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும், புலிகள் இயக்கத்தில் இருந்து பின்னர் விலகிக் கொண்டவருமான நிர்மலாவின் சகோதரிதான் ரஜினி திரணகம.

மனித உரிமை, பெண் விடுதலை என்பவற்றில் உண்மையான அக்கறை கொண்டவர். . உயிருக்கு ஆபத்து நேரலாம் என்ற சூழலிலும் யாழ் பல்கலைக் கழகத்தை இயங்கவைப்பதற்காக முன்னின்று செயலாற்றியவர்.

இந்தியப் படையினரின் வருகையால் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள், அவலங்கள் தொடர்பாக ரஜினி திரணகம கடும் கோபம் கொண்டிருந்தார்.

"நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை பக்கச் சார்பின்றி எடுத்துரைக்க வேண்டும். இந்த துன்பம் தோய்ந்த வரலாற்றை மக்கள் உணரச் செய்ய வேண்டும்" என்று ரஜினி விரும்பினார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகளுக்கான ஆசிரியர்குழு என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி, தங்கள் சமகால அழிவுகளை வெளிப்படுத்த முன் வந்தவர்களில் ரஜினியும் ஒருவர்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) என்ற பெயரில் மனித உரிமைமீறல்கள் பற்றிய அறிக்கைகள் வெளிவந்தன.

அதனை அடுத்து மிகப்பாரிய முயற்சி ஒன்றில் துணிச்சலுடன் இறங்கினார் ரஜினி திரணமக.

அதுதான் 'முறிந்த பனை' என்னும் ஆவணத்தை உருவாக்கும் முயற்சி. அவரும் அநீதிகளுக்கு எதிரான துணிச்சலான பல்கலைக்கழக ஆசிரியர்களான ராஜன்ஹ்ல், தயா சோமசுந்தரம், கே. ஸ்ரீதரன் ஆகியோரும் இணைந்து அந்த ஆவணத்தை தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.

மனித உரிமை, மனித கௌரவம் என்பவற்றுக்காக குரல் கொடுப்பது என்ற பெயரில் தங்கள் பெயர்களையும், முகங்களையும் பிரபலப்படுத்தும் ஒரு கூட்டம் எப்போதும் இருந்து வரும். இப்போதுகூட இருக்கிறது.

இவர்கள் மனித உரிமைக்கான போராட்டம் நடத்தினால் பத்திரிகையாளர்களுக்குத்தான் தொல்லை. தங்கள் பெயர்களோ, முகங்களோ செய்தியில், புகைப்படத்தில் வரவில்லையென்றால் ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடுவார்கள்.



மலர்வு: 23-02-1954 உதிர்வு: 21-09-1989

> **"என்றாவது ஒருநாள் ஒரு துப்பாக்கி என்னை அமைதியாக்கிவிடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது. மாறாக எனது வரலாற்றை பகிர்ந்து கொள்ளும் இச் சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையில் இருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு புத்திரனால் ஏந்தப்படும் துப்பாக்கியாகவே அது இருக்கும்!"**

இவ்வாறான நபர்களில் சிலர் மனித உரிமை பற்றி பேசினால் தங்கள் உயிருக்கு ஆபத்து நேரும் என்று தெரிந்தால் நாட்டை விட்டே ஓடிவிடுவார்கள். பின்னர் சொகுசாக இருந்து, உல்லாசமாக மனித உரிமை பற்றி பேசக்கூடிய சூழல் தென்பட்டால் நாடு திரும்பி தம்பட்டம் அடித்துத்திரிவர்.

ஆனால் ரஜினி அப்படியானவரல்ல. அவர் ஒரு போராளி. கொலைகள் மிகச் சகஜமாக நடந்துவந்த ஒரு சூழலில் துணிந்து நின்று, தன் உயிரைப் பணயம் வைத்து மனித அவலங்களை வெளிக்கொண்டுவர பாடுபட்ட போராளி. பேசுவதைவிட செயலில் ஈடுபட ஆர்வம் உள்ளவர்.

### படையினர் கோபம்

'முறிந்த பனை' ஆவணத்தை தயாரிப்பதற்காக ரஜினியும் அவருடன் இணைந்து பல்கலைக்கழக ஆசிரியர்களும் பாதிக்கப்பட்ட பலரைச் சந்திக்க வேண்டி இருந்தது.

இந்தியப்படை தன் மனித வேட்டையை நடத்திய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று தகவல்கள் சேகரிக்கவேண்டி இருந்தது.

இத் தகவல்கள் இந்திய படையினருக்கு எட்டியது. தமது மனித உரிமை மீறல்கள் உலகின் முன் அம்பலமாகப் போகின்றனவே என்று அவர்கள் கிலேசமுற்றனர்.

மூன்று தடவைகள் ரஜினி திரணகமவின் வீட்டுக்குச் சென்ற இந்தியப் படையினர் சல்லடைபோட்டு ஆவணங்களைத் தேடினார்கள். எதுவும் கிடைக்க வில்லை.

மறைமுகமான எச்சரிக்கைகள் விடுக்கப் பட்டன. தன்னை யாரோ பின்தொடர்கிறார்கள் என்பது ரஜினிக்கும் தெரிந்தே இருந்தது.

விடுதலைப் புலிகள் பற்றியும் அவர்களது நடைமுறைகள் பற்றியும்கூட ரஜினியும், மனித உரிமைகளுக்கான பல்லைக்கழக ஆசிரியர்களும் விமர்ச்சித்திருந்தனர். புலிகளது தவறான நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தி வந்தனர்.

ஆனாலும் அவர்களது பணி அக் காலகட்டத்தில் புலிகளைவிட இந்தியப் படைக்கும், அதனுடன் இணைந்து நின்ற இயக்கங்களுக்குமே பெரும் பாதகமாக அமைந்தன.

உலகின் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்று இலங்கையில் இரத்தவெறியுடன் செயற்பட்டது. பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டது. யாழ் மருத்துவமனைக்குள் புகுந்து கொலை பாதகவேட்டை நடத்தியது போன்ற கொடூரங்கள் வெளியே அம்பலமாவது இந்தியப் படையினருக்கு என்றும் தீராத இழுக்கை ஏற்படுத்தக்கூடியதே.

அதுவும் - சமூகத்தின் அங்கீகாரம் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் அவ்வாறான ஆவணத்தை வெளியிட்டால் அது நம்பகமான ஆவணமாகக் கருதப்படும் என்றும் அஞ்சினர்.

இவ்வாறான நிலையில்தான் ரஜினி திரணகமவைக் கொலை செய்யும் திட்டம் உருவானது.

இனிமேல் நான் இங்கு தரும் தகவல்கள் ரஜினி கொலை தொடர்பாக இதுவரை கூறப்பட்ட கருத்துக்கள், தகவல்கள் என்பவற்றுக்கு மாறாக இருக்கக்கூடும். ஆயினும் கிடைத்த தகவல்களை அப்படியே தருகிறேன்.

### இரகசியத் திட்டம்

ரஜினி திரணகமவை புலிகள் என்ற போர்வையில் கொலை செய்வது என்று இந்தியப் படைக்குள் ஒரு பிரிவினர் தீர்மானித்தனர்.

இக் கொலைத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு கேர்ணல் சசிகுமார் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கேர்ணல் சசிகுமார் உடனடியாக யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். தளபதியாக இருந்த ராபிக்குடன் தொடர்பு கொண்டார். ராபிக்கின் சொந்தப் பெயர் ரவீந்திரன். யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வசித்தவர்.

இந்தியப் படை வெளியேறப்போகிறது என்பதும், தங்களால் நீண்ட காலத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாது என்பதும் ராபிக்குக்கு தெரியும்.

அதுமட்டுமல்லாமல் தன்னிச்சையாக கொள்ளை நடவடிக்கைகள் பலவற்றின் மூலமும் ராபிக் சொந்தமாக பணம் சேர்க்கத் தொடங்கியிருந்தார்.

தலைமையில் உள்ளவர்கள் இந்தியாவிடம் கிடைக்கும் பணத்தை சுருட்டுகிறார்கள். நாம் என்ன செய்வது. நாளை நடுத்தெருவிலா நிற்பது? என்பது ராபிக் தன் செயல்களுக்கு கூறிய நியாயம்.

பத்மநாபாவின் நம்பகமான ஆளாக இருந்த ராபிக், பத்மநாபாவுக்கும் தெரியாமல் சுருட்டலில் ஈடுபடத் தொடங்கினார். அதேபோல நேரடியாக இந்தியப் படை, மற்றும் இந்தியப் படையின் உளவுப் பிரிவு என்பவற்றுடனும் தொடர்புகளை வைத்திருந்தார். தனிப்பட்ட உறவுகளாக இவை மாற்றமடைந்தன.

### நோட்டம் பார்த்தனர்

கேர்ணல் சசிகுமார் தொடர்புகொண்டு ரஜினி கொலை பற்றி கூறியதும் ராபிக் மறுபேச்சின்றி சம்மதித்தார். அப்போதெல்லாம் 'தட்டுதல்' என்பது சர்வசாதாரணம்.

ஏற்கனவே பொருளியல் ஆசிரியர் கிருஷ்ணானந்தன் உட்பட பல ஆசிரியர்களை கொலை செய்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். ராபிக்கின் பொறுப்பின் கீழ் தான் அக் கொலைகளும் நடத்தப்பட்டன.

எனவே, ரஜினி திரணகமவைக் கொலை செய்வது என்பதையும் சர்வசாதாரணமாகவே எடுத்துக் கொண்டார் ராபிக்.

இவ்விடயம் தொடர்பாக பத்மநாபாவுக்கு தெரிவிக்கப்பட்டதா? இல்லையா? என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

ரஜினியை தீர்த்துக் கட்டுவதற்கான பொறுப்பை கார்த்திக், தோமஸ், ஆகிய இருவரிடம் ஒப்படைத்தார் ராபிக்.

இவர்கள் சில நாட்களாக ரஜினியின் நடமாட்டத்தை கண்காணித்து வந்தனர். பின்தொடர்ந்து திரிந்தனர்.

21.09.1989 அன்று யாழ் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் உள்ள திருநெல்வேலிச் சந்தியில் வைத்து ரஜினியை சுட்டுக் கொன்றனர்.

தோமஸ் என்பவர்தான் ரஜினியை நோக்கிச் சுட்டார். படபடவென்று சுட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்தார் மனித உரிமைக்காக குரல் கொடுத்த துணிச்சலான போராளி ரஜினி.

இவ்விடயத்தை எக்காரணம் கொண்டும் வெளியே கூறக்கூடாது என்பது மேலிடக் கட்டளை என்று கொலையில் சம்பந்தப் பட்டவர்களை ராபிக் எச்சரித்தார்.

### கண்டனம்

கொலை பற்றிய செய்தி வந்ததும் வராததுமாக, 'புலிகளே கொலைக்கு காரணம்' என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் அறிக்கை விட்டிருந்தது. கண்டனமும் தெரிவித்திருந்தது.

ரஜினி திரணகம திருநெல்வேலிச் சந்தியில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டபோது, அந்த வேட்டோசைகள் கேட்ட சமயத்தில் புலிகள் இயக்க முக்கியஸ்தர் ஒருவரும் அவ்வழியே சென்றிருக்கிறார்.

தன்னை கண்டுவிட்டுத்தான் சுடுகிறார்கள் என்று நினைத்தே அவர் பதற்றமடைந்து படுவேகமாகச் சென்றிருக்கிறார்.

அவர் அப்படிச் சென்றதை சிலர் கண்டுள்ளனர். காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையாக, கொலைப்பழி புலிகள் மீது விழ அதுவே காரணமானது.

இத் தகவல்கள் கொலையில் நேரடியாகப் பங்குகொண்ட கார்த்திக் மூலம் வெளியானது.

கார்த்திக், தோமஸ் ஆகியோர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் 'மண்டையன் குழு'வில் இருந்தவர்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்று வெளியே தெரியாமல் தமது விரோதிகளை படுகொலை செய்வதுதான் இக் குழுவின் வேலை. இக் குழு பற்றி முன்னரே விபரித்திருக்கிறேன்.

இந்தியப் படை வெளியேற்றத்தின் பின்னர் கார்த்திக், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் இருந்து பிரிந்து ஈ.பி.டி.பி. யில் இணைந்து கொண்டார். தோமஸ் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு பாதுகாவலராக கொழும்பில் சில காலம் இருந்தார். தற்போது வெளிநாட்டில் இருக்கிறார்.

கார்த்திக், பின்னர் ஈ.பி.டி.பி.யை விட்டும் விலகினர். திருமலையில் தனிப்பட்ட தகராறு ஒன்றில் கார்த்திக் வெட்டிக் கொல்லப்பட்டார்.

ரஜினி திரணகம கொலைக்கு தாம் பொறுப்பல்ல என்று புலிகள் அப்போதே மறுத்திருந்தனர். ஆனால் இன்றுவரை புலிகள்தான் காரணம் என்றே கருதப்பட்டு வருகிறது.

இதற்கிடையே ரஜினி கொலையின் சூத்திரதாரியான கேர்ணல் சசிகுமார் அரியாலை மணியம் தோட்டம் பகுதியில் நடைபெற்ற மோதலில் புலிகளால் கொல்லப்பட்டார்.

தான் கொல்லப்படுவதற்கு சரியாக பதினாலு நாட்களுக்கு முன்பாக ரஜினி தன் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்:

"என்றாவது ஒருநாள் ஒரு துப்பாக்கி என்னை அமைதியாக்கிவிடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது. மாறாக எனது வரலாற்றை பகிர்ந்து கொள்ளும் இச் சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையில் இருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு புத்திரனால் ஏந்தப்படும் துப்பாக்கியாகவே அது இருக்கும்!"

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

**நா**டெங்கும் தமிழ் மக்களுக்கு எதிராக இன ஒடுக்குமுறைகள் பாரியளவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

'பாதுகாப்பு ஏற்பாடு' என்ற பெயரில், முழுத் தமிழ் மக்களையும் முழங்காலில் இருத்தி பணியவைக்கும் நடவடிக்கைகள்தான் இவையாகும்.

**ஆனால், ஆட்சியாளர்களது உள்நோக்கத்தையும், இன்றைய பாதுகாப்பு கெடுபிடிகளின் சுயரூபங்களையும் மூடி மறைக்கும் விதமாக தமிழ்க் கட்சிகள் வெளியிடும் கருத்துக்கள் அமைந்து வருகின்றன.**

தமிழர்கள் சார்பாக பேசுவது போன்ற தோரணையுடன், தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை வெளியுலகின் கண்களில் இருந்து மறைக்கவே தமிழ்க் கட்சிகள் உதவி வருகின்றன.

தமிழ்க் கட்சிகளின் அறிக்கைகளையும், ஆளுந்தரப்போடு சந்திப்புக்கள்

ஜே.ஆர்.ஜெயவர்த்தனே காரணமாக இருக்க மாட்டார் என்றுமே தமிழர்களில் ஒரு பிரிவினர் கருதியிருந்தனர்.

**'சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விசுவாசமான பொலிசார்தான் கலவரத்தை கட்டுப்படுத்த தடையாக இருந்துள்ளனர். நாம் பதவிக்கு வந்த சூட்டோடு கலவரம் நடந்தமையால் கட்டுப்படுத்த இயலவில்லை', என்றே அன்று ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் சமாதானம் கூறினர்.**

ஆனால், போரா சமாதானமா? எது வேண்டும்? என்று ஜே.ஆர்.தமிழர்களை நோக்கி இறுமாப்புடன் கேட்ட போதும், தமிழர்களுக்காகப் பரிந்து பேசிய வெளிநாட்டு இராஜதந்திரிகளை எச்சரித்தபோதும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனேயும் பேரினவாதத்தின் பிரதிநிதிதான் என்பதை தமிழ் மக்கள் மிகத்

காலத் தவறுகள் நிறைந்த வழிமுறைகளை மட்டும் சுவீகரித்துள்ளதையே காணமுடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டுவரும் நிலைப்பாடுகள் தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் அரசியல், இராணுவ அழுத்தங்களுக்கே துணைபோகின்றன.

இன்று தமிழ்க் கட்சிகள் அதிக எண்ணிக்கையில் தேவையாக இருப்பது ஆட்சியாளருக்கே தவிர தமிழ் மக்களுக்கல்ல.

**பல தமிழ்க் கட்சிகள் தமது பக்கம் நிற்பதாக காட்டிக் கொள்வதன் ஊடாகவே, தமிழ் மக்களுக்கு எதிரான அன்றாட கெடுபிடிகள் முதற்கொண்டு, அரை குறையான அரசியல் தீர்வைத் திணிக்கும் இறுதியான நோக்கம் வரை வெளியுலகின் கண்களுக்கு தெரியாமல்**

# பாதுகாப்பு நிலவர மாநாடுகள் ஆட்சியாளர் அரங்கேற்றும் நாடகங்கள்

நடத்திவிட்டு அக் கட்சித் தலைமைகள் கூறும் செய்திகளையும் கேட்கும் சிலருக்கு, தமிழ்க் கட்சிகள் தர்ம நியாயத்தை பேசுவதுபோல தோன்றக்கூடும்.

**ஆனால், இக் கட்சிகள் இன்று வகித்துவரும் பாத்திரமானது, தமிழ் மக்களை ஒடுக்கும் ஆட்சியாளரது கரங்களை உள்நாட்டிலும், உலக அரங்கிலும் வலுப்படுத்தும் பாத்திரமேயாகும்.**

வகைதொகையற்ற கைதுகள் முதல், தமிழ் மக்களை தேசிய அவமானத்துக்கு உள்ளாக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் படையினர் மட்டுமே பொறுப்பாளிகள் என்பது போலவும், ஆட்சியில் உள்ளவர்களுக்கு தெரியாமல் நடக்கும் காரியங்களே இவை என்பது போலவுமே இக் கட்சிகள் சித்தரிக்க முயலுகின்றன.

**ஜனாதிபதியிடம் முறையிடுதல் பற்றிய இக் கட்சிகளது அறிக்கைகளும், தங்களுக்கு ஜனாதிபதி கூறியதாக இக் கட்சிகள் தெரிவிக்கும் உத்தரவாதங்களும் ஜனாதிபதி வேறானவர், தனியானவர் என்பது போன்றும், அவருக்கு தெரியாமலேயே தமிழர்களது தலைகளில் குண்டுகள் விழுந்துவிடுகின்றன என்பது போன்றுமே கருத இடமளிக்கின்றன.**

இவ்வாறுதான் முன்னர் ஒருதடவை 'ஜே.ஆர். நல்லவர், வல்லவர்' என்று கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம் புகழ்ந்துரைத்திருந்தார்.

**1977ல் இனக் கலவரத்தை தூண்டிவிட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனேயை அமிர்தலிங்கம் அவர்கள் பாராட்டியவையே தமிழ் இளைஞர்கள் அவர்மீது தீராத வெறுப்புக் கொள்ள காரணமாயிருந்தது.**

அவ்வாறு வெறுப்புக் கொண்ட இளைஞர்கள் சிலர் இன்றைய தமிழ்க் கட்சிகளுக்குள்ளும் இருக்கக்கூடும். அன்று அமுதர் செய்த அதே தவறையே இன்று தமது தலைமைகளும் செய்கின்றன என்பதை அவர்கள் அறியாமல் இருப்பது வேடிக்கையானதாகவே இருக்கிறது.

1977ம் ஆண்டுக் கலவரத்திற்கு பொலிசாரும் படைகளும், காடையர்களுமே காரணம் எனவும், பெரும் குடியில் பிறந்த கண்ணியவானான

தெளிவாகப் புரிந்து கொண்டனர்.

ஆட்சியில் உள்ள தலைவர்களுடன் தங்களுக்குள்ள தனிப்பட்ட நெருக்கம் காரணமாகவும், அவர்கள் மூலமாக தமது சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அவசியம் கருதியும், அவர்களைப் பாதுகாக்க முற்பட்ட தமிழ்த் தலைமைகள் இறுதியில் வெட்கித் தலை குனிந்து நின்றன.

**சிங்களத் தலைவர்களை தமிழ் மக்களின் அதிருப்திகளில் இருந்து பாதுகாக்க முற்பட்ட ஒவ்வொரு தமிழ் தலைமையும் கடைசியில் அதே சிங்களத் தலைமைகளால் கைவிடப்பட்டது மட்டுமன்றி, தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டே வந்திருக்கின்றன.**

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தூண்களில் ஒருவரான ஜே.ஆரை நல்லவராக சித்தரிக்க முற்பட்டதாலும், ஐ.தே.கட்சி அரசுக்கு முண்டுகொடுக்க முயன்றதாலுமே, ஆயிரக்கணக்கான இளைஞர்களது இதயங்களில் தனக்கென தனி இடத்தைப் பிடித்திருந்த தளபதி



**ஆட்சியாளரால் மறைக்கப்பட்டு வருகிறது.**

சமீபத்தில் கொழும்பில் உள்ள தமிழ் இந்து அமைப்புக்கள் ஒன்றுகூடி இந்தியப் பிரதமருக்கு மகஜர் அனுப்பி இருந்தன.

இலங்கைக்குள் இனப்பிரச்சனையை தீர்க்கும் சூழ்நிலை இல்லை என்பதையும், அன்றாடம் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களையும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டியிருந்தன.

அவ்வப்போது அரங்கேற்றுவர்.

அந்த நாடகங்களில் பங்குபெற்றுவது மூலம், தமிழர்களது துயர்கள் நீங்க தாங்களும் பாடுபடுவதாகவும், குரல் கொடுப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் பாசாங்கு செய்து வருகின்றன.

**முடியுமானவரை தமிழ் மக்களை அவமானப்படுத்திவிட்டு, அதன் பின்னர் மாநாடுகள் நடத்துவது என்பதும், 'இனிமேல் இவ்வாறு நடக்காது' என்று உத்தரவாதம் கொடுப்பதும் இன்றைய ஆட்சியாளரது புத்திச்சாலித்தனமான உத்திகளாக விளங்கி வருகின்றன.**

சமீபத்தில் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்தின் புகாரை அடுத்து, சட்டமா அதிபர் அவர்கள் பாதுகாப்பு தரப்பாருடன் ஒரு மாநாடு நடத்தியிருந்தார்.

அம் மாநாட்டால் தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் கிட்டவில்லை. அன்றாட கெடுபிடிகள் சிறிதளவுகூட தளரவில்லை.

நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள்கூட மாநாடு கூட்டப்போவதாக முன்வந்தார். முன்னரும் பல தடவைகள் அவர் மாநாடு கூட்டி தமிழர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்து, தமிழ்க் கட்சிகளுக்கும் எத்தனையோ உத்தரவாதங்களை வழங்கியிருந்தார்.

ஆனால், சாதாரண தமிழ் மக்களுக்கு இந்த உத்தரவாதங்கள், மாநாட்டு முடிவுகள் அனைத்தும் ஏட்டுச் சுரைக்காய்களாகவே இருந்து வருகின்றன.

கொழும்பு உட்பட நாடெங்கும் தமிழ் மக்கள் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு உள்ளாகின்றனர் என்ற தகவல் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள், இராஜதந்திர வட்டாரங்கள் போன்றவற்றுக்கு எட்டியுள்ளன.

இந்தியப் பிரதமருக்கு இந்து மாமன்றம்

திருப்தி தெரிவித்தல்களும், அரச சார்பான பேச்சாளர்கள் போன்று, அரசு கூறிய உத்தரவாதங்களை தெரிவிக்கும் ஆரவாரமும் வெளியுலகில் சரிந்துவரும் அரசின் செல்வாக்கை தூக்கி நிறுத்தவே உதவி வருகின்றன.

**ஆகவே, அரசுக்கு ஆதரவான தமது அடிப்படை நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாமல், தமிழ்க் கட்சிகள் விடும் அறிக்கைகளும், 'கிளிசரின் கண்ணீரும்' தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் போருக்கான உலக அனுதாபத்தை ஆட்சியாளர்கள் தக்கவைத்துக் கொள்ளவே பயன்பட்டு வருகின்றன.**

அதுமட்டுமன்றி, இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாரதூரமான அன்றாடப் பிரச்சனைகளான நள்ளிரவு கைது முதல் பாஸ் கெடுபிடி உட்பட காணாமல் போதல் வரை **அவசரகால சட்டம்** வழங்கும் அதிகாரத்தை பயன்படுத்தியே நடந்து வருகின்றன.

நாடாளுமன்றத்தில் உள்ள சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு எதிர்த்தால் போதும், மனித உரிமைகளுக்கு அபாயம் விளைவிக்கும் கறுப்புச் சட்டமான அவசரகால சட்டத்தை நிறைவேற்றாமல் செய்துவிடலாம்.

**ஐக்கிய தேசியக் கட்சியினர் அவசரகால சட்டத்தை எதிர்த்து பல தடவைகள் வாக்களித்துள்ளனர். அந்நிலையில் தமிழ்க் கட்சிகளது வாக்குகள்தான் அவசரகால சட்டம் நிறைவேற துணைபோகின்றன.**

எனவே, வெண்கலக் கடைக்குள் யானையை கொண்டுவந்துவிட்டுவிட்டு, பாத்திரங்களை மிதிக்கிறதே என்று குரல் கொடுப்பது போன்ற ஏமாற்றுத்தனம்தான், அவசரகால சட்டம் நிறைவேற ஒத்துழைத்தபடி, அதன் விளைவுகளான கெடுபிடிகளைக் கண்டிப்பதுமாகும்.

**இன்று, அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் இரண்டும் இன ஒடுக்குமுறைக்கான நடவடிக்கைகளை பாதுகாக்கும் கேடயங்களாகவே மாறியுள்ளன.**

ஆனால், முதுமையான கட்சியான கூட்டணி முதற்கொண்டு சகல தமிழ்க் கட்சிகளும் வெறும் பாதுகாப்பு கெடுபிடிகள் என்றளவில்தான் தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

தமிழர் தரப்பை பலவீனமாக்கும் அரசியல், இராணுவ அழுத்தங்களின் ஒரு பகுதிதான் பாதுகாப்பு கெடுபிடிகள் என்பதை இக் கட்சிகள் அறிந்திருந்தாலும்கூட சுட்டிக்காட்ட முடியாத நிலையில் இருந்து விடுகின்றன.

அவ்வாறு சுட்டிக் காட்டினால், கறுப்புச் சட்டங்களுக்கு ஆதரவாக கையுயர்த்துவதையும், அரசுக்கு ஆதரவான நிலைப்பாடுகளையும் தமிழ் கட்சிகள் கைவிட்டாக வேண்டிய கட்டாயம் ஏற்படும்

எனவே, தம்மை தமிழ் பேசும் மக்களது நலன் விரும்பிகள் என்று காட்டிக் கொள்ள அரசின் 'கிளிசரின் கண்ணீர்' நாடகங்களில் தொடர்ந்து பங்கேற்பதும், தாமும் 'கிளிசரின் கண்ணீர்' விடுவதும்தவிர இக்கட்சிகளுக்கு வேறு வழியில்லை என்பது புலனாகின்றது.

# தமிழ்க்கட்சிகளின் 'கிளிசரின் கண்ணீர்'

அமிர்தலிங்கம் அந்த இடத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டிருந்தார்.

இன்னும் அதேபாதையை அடியொற்றியே, தமிழ்க் கட்சிகள் நடை போடத் தொடங்கியுள்ளன.

**அமிர்தலிங்கம் போன்றோர் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக நெஞ்சுரத்துடன் நேர்மையுடன் செயற்பட்ட காலகட்டங்களும் இருந்துள்ளன. குண்டாந்தடியடிபட்டும், இரத்தம் சிந்தியும் துணிந்து நின்று போராடிய வரலாறும் அவர்களுக்கு இருந்துள்ளது.**

அதேசமயம் பின்னர் ஒரு கட்டத்தில் தங்கள் முன்னைய நிலைப்பாடுகளுக்கு மாறாக சமரசப்பாதையில் தடம் மாறிய வரலாறும், ஆட்சியாளரை நம்பி ஏமாந்த வரலாறும் அவர்களுக்கு இருக்கிறது.

இன்றைய தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு முன்பிருந்த தலைமைகளது நல்ல குணாம்சங்களையும் முன்னுதாரணங்களையும் கணக்கில் எடுக்காமல், அவர்களது பின்னைய

**இன்றைய காலகட்டத்தில் தமிழ்க் கட்சிகள் செய்திருக்க வேண்டிய அரசியல் நகர்வு ஒன்றையே இந்து அமைப்புகள் மேற்கொண்டிருந்தன.**

**இங்குள்ள ஆட்சியாளர்கள்மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதை வெளியுலகம் முன்பாக கூறுவதற்கு ஏற்ற தருணம் இதுதான். ஆனால், தமிழ்க் கட்சிகள் அதனைக் கூறப்போவதில்லை.**

அவ்வாறு கூறினால் அரசை சார்ந்து நின்று தாம் பெற்றுவரும் பலன்கள் பாதிக்கப்பட்டுவிடும், ஆட்சியாளரது கோபத்துக்கு உள்ளாகி சலுகைகளை இழக்க வேண்டி ஏற்படும் என்பதால் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் முறையிடுதல் என்ற வரையறைக்குள்ளேயே தமது அரசியலை வைத்திருக்கப் போகின்றன.

பாதுகாப்பு மாநாடுகள், கைதுகள் பற்றி ஆராயும் கூட்டங்கள் என்ற பெயர்களில் அரசாங்கமும், அமைச்சர்களும் கண்துடைப்பு நாடகங்களை

அனுப்பிய மகஜரும் வெளியுலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இலங்கை அரசில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதையே அந்த மகஜரில் தெரிவித்திருந்தனர்.

**இத்தகைய சூழ்நிலையில், தமிழ்க் கட்சிகளின் ஜனாதிபதியிடம் முறையிடுதலும், அமைச்சர்கள் நடத்தும் பாதுகாப்பு நிலவரம் பற்றிய மாநாடுகளில் பங்கு பெற்றுதலும் அரசுக்கே சாதகமாக அமைகின்றன.**

அரசின் உயர் மட்டத்திற்கு தெரியாமல் படையினரில் ஒரு பகுதியினர் அத்துமீறிவிட்டனர், அதனை நிவர்த்தி செய்ய அரசு தீவிரமாக முயல்கிறது, தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களையும் செவிமடுத்துக் கேட்கிறது என்பது போன்ற போலியான கருத்தையே வெளியுலகின் முன் ஏற்படுத்துகின்றன.

அதுமட்டுமன்றி தமிழ்க் கட்சிகள் குறிப்பிட்ட மாநாடுகள், சந்திப்புக்கள் போன்றவற்றின் பின்னர் வெளியிடும்

---

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

**து**ரையப்பா, குமாரசூரியர், அருளம்பலம், ராஜன் செல்வநாயகம் போன்றோருடன் இன்றைய மிதவாத தமிழ்க்கட்சி தலைவர்களை ஒப்பிடலாமா?

சென்றவாரம் இப் பகுதியில் கூறப்பட்ட கருத்துக்களை அடுத்து எழுப்பப்பட்ட கேள்வி அது. கேள்வி தொடுத்த நண்பர்கள், ஒப்பிடலுக்கு எதிராக கூறிய கருத்துக்களை உங்களுக்கும் தெரிவிக்கிறேன்.

துரையப்பா போன்றோர் வாழ்ந்த காலத்தில் இன ஒடுக்குமுறை இந்தளவுக்கு இருக்கவில்லை. தமிழ் மக்களை அவமானப் படுத்தும் விதமாகவும், அவர்களது வாழும் உரிமையையே மறுக்கும் விதமாகவும் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்படவில்லை.

அன்று: தமிழர் இல்லங்கள்மீதும், தேவாலயங்கள்மீதும் குண்டுகள் பொழியவில்லை. இரவோடு இரவாக இளம் பெண்கள் கைதாகி மைதானங்களில் நிறுத்தப்பட்டு இம்சைப்படவில்லை.

அன்றும் தமிழ் இளைஞர்கள் கைதானார்கள். ஆனால் காணாமல் போகவில்லை. இன்று ஒன்றல்ல நூறல்ல எழுநூறு பேர் யாழ்ப்பாணத்தில் மட்டும் கைதாகி பலியாகிவிட்டனர்.

அன்று பெண்கள் சிலர் கைதானார்கள். ஆனாலும் இன்றுபோல பெண் உறுப்புக்குள் கைக்குண்டு வைத்து கொல்லப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் ஊமைப் பெண்ணைக்கூட பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கும் இன்றைய வக்கிரம் அன்றில்லை. இப்படி இன்றைய அநியாயங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆகவே, அன்று துரையப்பா போன்றோர் அரசை ஆதரித்ததுடன், இன்று தமிழ்க் கட்சிகள் அரசை ஆதரிப்பதை ஒப்பிடவே முடியாது.

இறுதியில் தப்பியோடிய எதிரி ஒருவர் நீதிபதிக்கே கடிதம் போடுகிறாராம். "சிறையில் என் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தது. அதுதான் தப்பி ஓடினேன்" என்கிறார்.

ஏப்ரல் பூல் தினத்தன்று கிடைக்கக்

# இங்கே ஆள்வது யார்?

மேற்கண்டவைதான் நண்பர்கள் தெரிவித்த ஆட்சேபனைகள். நியாயமான ஆட்சேபனைகள்தானா? என்று நீங்களும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்களேன்.

★★★

**கி**ருஷாந்தி பாலியல் வல்லுறவில் படுகொலை வழக்கின் எதிரிகள் சிறையில் இருந்து தப்பி ஓடியது நாடறிந்த கதை.

இரவிரவாக தமிழர் வீடுகளில் புலி தேடும் பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் தப்பியோடிய அந்த எதிரிகளை பிடிக்க என்ன முயற்சி செய்தனர்?

அவர்களது உறவினர்கள் கைதானார்களா? அல்லது அவர்கள் வீட்டுப் பெண்களை நள்ளிரவில் தூக்கத்தில் இருந்து தட்டி எழுப்பி எங்காவது மைதானத்திற்கு கொண்டு சென்று விசாரித்தார்களா?

உண்மையில் மகா பயங்கரவாதிகள் அவர்கள்தான். அவசரகால சட்டமும், பயங்கரவாத தடைச் சட்டமும் அந்தப் பயங்கரவாதிகளை விரட்டவில்லையே, ஏன்? ஏன்?



கூடியதாக எழுதப்பட்ட கடிதமா அது என்று தெரியவில்லை.

சிறை அதிகாரிகளது அமோகமான ஒத்துழைப்புடன் தப்பிச் சென்றவர்கள், சிறை அதிகாரிகள் மாட்டிக் கொண்டதால், அவர்களை காப்பாற்ற ஆடும் நாடகம்தான் அது.

தப்பிச் சென்றவர் தமிழராக இருந்தால் திரும்பச் சரணடைந்தால் தும்பு பறக்க சாத்துப்படி நடக்கக்கூடும். கிருஷாந்தி கொலை வழக்கு எதிரிகளை பொறுத்தவரை மீண்டும் சரணடைந்தால்கூட தூசுகூட உடம்பில் விழாது.

நீதிபதிகள் கடும் கோபமுற்றதால் தவிர்க்க முடியாமல் சிறை அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதாகிவிட்டது. ஆனாலும்கூட எதிரிகள் தப்பிச் செல்ல சிறை அதிகாரிகள் ஒத்துழைத்தனர் என்ற உண்மையை வெளிப்படுத்த அரசுகூட அக்கறை காட்டவில்லை. கடமையை ஒழுங்காக செய்யவில்லை என்று கூறித்தான் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறையில் இரண்டு புலிகள் இருந்து இப்படித் தப்பிச் சென்றிருந்தால், சிறை அதிகாரிகளும் தமிழர்களாக இருந்திருந்தால் என்னாகி இருக்கும்?

சிறை அதிகாரிகள் முதற் கொண்டு அவர்களது குடும்பத்தினர்வரை விசாரிக்கப்பட்டு, அனைவருமே புலிகளது அனுதாபிகளாக சித்தரிக்கப்பட்டிருப்பார்களா இல்லையா?

கிருஷாந்தி கொலை வழக்கு எதிரி கொடுத்துள்ள கடிதம் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் போன்றது. மீண்டும் சரணடைந்தால் நாலு சாத்துப் போட்டு தப்பிய விதம் பற்றி யாரும் விசாரிக்கவும் முடியாது. தப்பவைத்த சிறை அதிகாரிகளும் குற்றச்சாட்டில் இருந்து மீண்டுவிடுவர்.

★★★

**த**மிழ்ப் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதை அறிந்து தகவல், தொடர்பு அமைச்சர் மங்களா வருத்தம் தெரிவிக்கிறார். தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைதாவது தொடர்பாக நீதியமைச்சர் பீரிஸ் கவலை தெரிவிக்கிறார். "தமிழ் மக்கள் துன்பப்படுவதை சகியோம்!" என்கிறார் பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை. கடந்த கால ஆட்சியாளர்களது நடவடிக்கைகள்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தக் காரணம் என்கிறார் ஜனாதிபதி.

அப்படியானால் இந்த நாட்டை ஆள்வது யார், ஆளும் தரப்பிடம் பதில் தயாராக இருக்கிறது? யு.என்.பி பொலிசாரும், யு.என்.பி. படையினரும்தான் எல்லாவற்றுக்கும் காரணம்.

முப்படையின் தளபதியே ஜனாதிபதிதான். யாழ் நகரை படையினர் கைப்பற்றிய போது இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? இது நமது படை 'யாப்பா பட்டுன'வை வென்ற படை என்று புகழ்பாட ஜனாதிபதி முதல் ஆளும் கட்சி எம்.பி.கள் வரை போட்டி போட்டனர். அப்போது மட்டும் 'யாப்பாபட்டுன'வை பிடித்தது யு.என்.பி படை என்று ஏன் கூறவில்லை? நன்றாகப் பூச்சுற்றுகிறார்கள்.

தமிழ் கட்சிகளின் தலைவர்களது காதுகள் நீளமாகிக் கொண்டிருக்கின்றன. முழும் முழமாக சுற்றவசதி. அதுதான் நாட்டில் நடக்கும் அட்டூழியங்களை அம்மையார் அறியார் என்பது போல, 'அவரது கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம்' என்று பத்திரிகைகளுக்கு கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் காதுகளை நீட்டத் தயாராக இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

புதிய உண்மைத் தொடர்

அதிர் இடி 3

தருவது ரசிகன்

ஸயார் கிளர்ச்சியாளர்கள் உகண்டாவின் மேற்கு எல்லையில் ஊடுருவி இருந்தனர்.

உகண்டாவின் மேற்கு எல்லையில் இருப்பதுதான் ஸயார் நாடு. அங்கு உள்நாட்டு போர் ஓயாமல் நடந்து கொண்டிருந்தது.

அங்கு கிளர்ச்சியில் ஈடுபடும் குழுக்களில் ஒன்றுதான் உகண்டாவுக்குள்ளும் ஊடுருவி இருந்தது.

கிளர்ச்சியாளர்கள் தங்கியிருந்த எல்லைக் கிராமங்களை முற்றுகையிட்டது அமீனின் படை.

ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களை தீர்க்குமாறு ஆணையிட்டான் அமீன்.

கிளர்ச்சியாளர்கள் எவரும் பதிற் தாக்குதல் நடத்தவில்லை.

அமீனின் குரல் ஒலிபெருக்கியில் இடியென ஒலித்தது.

"நாங்கள் சண்டைக்கு வந்திருக்கிறோம். எங்கே இருக்கிறீர்கள்? தீக்கோழி மாதிரி எந்த மண்ணுக்குள் கொண்டுபோய் தலைகளை புதைத்து வைத்திருக்கிறீர்கள்? எப்படியோ சாகத்தான் போகிறீர்கள். நாங்கள் கொல்லத்தான் போகிறோம். இப்போதே அந்த ருசிகரமான காரியம் நடக்கட்டும். ஏன் தாமதிக்கிறீர்கள்?" இடியென்று சிரித்தான் அமீன்.

அவன் பேசிய தோரணைக்கும், சிரித்த சிரிப்புக்கும் கூடவந்த இராணுவத்தினரே பயந்துதான் போனார்கள்.

திடீரென்று இடி அமீனுக்கும் அவன் படையினருக்கும் முன்பாக அக் காட்சி விரிந்தது.

வெள்ளைக் கொடிகளை ஏந்திய படியும், கைகளை தலைக்கு மேலே உயர்த்திய படியும் கிளர்ச்சியாளர்கள் குழு அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது.

இடி அமீன் தன் கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தி, தம்மை நோக்கி வந்து கொண்டிருந்த கூட்டத்தை நோக்கி குறிபார்த்தான்.

அவர்கள் வந்து கொண்டே இருந்தனர். நெருங்கி வரும்வரை, குறி விலகாமல் துப்பாக்கியை நீட்டிக்கொண்டிருந்தான் அமீன்.

குறியை விலக்காமலேயே "யார் நீங்கள் எல்லாம்?" என்று கேட்ட கேள்வியில் அதட்டல் தொனித்தது.

"ஸயார் கிளர்ச்சியாளர்கள்" என்று அவர்கள் சொன்ன பதிலுக்கு, தன் வழமையான இடிச் சிரிப்பை உதிர்த்தான் அமீன்.

"உங்கள் துப்பாக்கிகள் எல்லாம் எங்கே? அடுப்பு எரிக்க விறகாகப் போட்டுவிட்டீர்களா?" என்ற கேள்விக்கு அவர்கள் சிரிக்கவில்லை.

"உங்களுடன் மோதுவது எங்கள் நோக்கமல்ல" என்று அவர்களில் ஒருவன் கூறியதும், அடுத்து நடந்தது பயங்கரம்.





சொன்னவன் சட்டையை தன் ஒரு கையால் மட்டும் கொத்தாகப் பிடித்து அமீன் தன் தலைக்கு மேல் தூக்கிப்பிடித்த போது, அசல் இராட்சதன்போலவே ஏனையோர் பார்வைக்கு காட்சியளித்தான்.

"என்னடா பையா சொன்னாய்? மோதும் நோக்கம் இல்லையென்றா சொன்னாய்? என் சுண்டுவிரலுக்குக்கூட தாக்குப் பிடிக்கமாட்டீர்கள்" என்று தன் குண்டான சுண்டுவிரலை அவன் கண்களுக்கு நேராக ஆட்டிக் காண்பித்தான்.

பின்னர் பொத்தென்று அவனைக் கீழே போட்டான். "யாரடா உங்களுக்குத் தலைவன்?" என்றான் ஏனையோரைப் பார்த்து.

அவர்கள் நடுக்கத்துடன் அமீனால் தூக்கிப்போடப்பட்டவனை காட்டியதும், அமீனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"ஏனடா தலைவன் ஆக ஒரு தகுதி வேண்டாமா?" தன் புஜத்தை மடக்கிக் காட்டியபடி, "தில் வேண்டும் தில்!" என்றான்.

சற்று நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்த அமீன், சட்டென்று நின்று, "உங்களுக்கு என்ன வேண்டும்? உயிர்ப் பிச்சையா? தரமாட்டேன். ஏன் தெரியுமா? எனக்கு உயிர்கள் என்றால் பிரியம். பிரியமானதை எப்படி பிச்சையிட முடியும்?" என்று கேட்டு விட்டு தன் இராட்சத உடல் குலுங்க சிரித்தான்!

அவர்கள் மிக மெதுவாக, பணிவாக அமீனிடம் சொன்ன பதில், அமீனையும் ஆச்சரியப்பட வைத்தது.

"உங்கள் உதவிதான் தேவை" என்றனர் ஒரே குரலில்.

அமீன் தன் கட்டைவிரலால் தாடையைத் தேய்த்தபடி அவர்களை கூர்ந்து பார்த்தான். "உதவியா? என்ன உதவி என்றான்"

"எங்கள் கிளர்ச்சிக்கு ஆயுத உதவி, ஸயார் அரசை கவிழ்க்க உதவி" என்றனர்.

அமீனுக்கு மூளைக்குள் ஒருபொறி தட்டியது.

தேடிக்கொண்டிருக்கும் வாய்ப்புக்கான திறவுகோல் கைக்கு கிடைக்கப்போகிறது என்று அவனது மனதுக்குள் இருந்து ஒரு பட்சி சொல்வது போல் இருந்தது.

மேற்கொண்டு பேசாமல், தன் படையினரை நோக்கி கட்டளையிட்டான்:

"இவர்களை தனியாக அடைத்து வையுங்கள், மாலையில் பேசிக் கொள்கிறேன்"

படையினர் அனைவர் முன்பாகவும் பேச அவன் பிரியப்படவில்லை.

அன்று மாலைவரை தன் திறந்த ஜீப்பில் மெய்க்காவலர்களுடன் எல்லைக் கிராமங்களை சுற்றிப் பார்வையிட்டான் அமீன்.

எதிர்ப்பட்ட ஆண்களும், பெண்களும் ஒதுங்கி நின்றனர். அவர்கள் யார் என்று தெரியாவிட்டாலும், திறந்த ஜீப்பும், ஆயுதங்களும், சீருடைகளும் இராணுவத்தைச் சேர்ந்த முக்கியமானவர்கள் என்று மக்கள் ஊகிக்க போதுமானதாக இருந்தது.

ஒதுங்கி நின்றவர்களில் பெண்களை மட்டுமே அமீனின் கண்கள் மேய்ந்துகொண்டு சென்றன.

திடீரென்று சாரதியிடம் கூறினான்: "நிறுத்து!" சடாரென்று பிரேக் போட்டதில் ஜீப் குலுங்கி கிரீச்சிட்டு நின்றது.

நின்ற இடத்தில் மூன்று நான்கு பெண்கள் ஒதுங்கி நின்றனர். அவர்களுக்குள் கறுப்பாகவும், வளப்பமாகவும் இருந்த பெண்ணை சுட்டுவிரல் ஆட்டி அழைத்தான் அமீன்.

அந்தப் பெண் மிக இளமையாக இருந்தாள். பதினாறு,பதினேழு வயதுதான் இருப்பாள். கண்களில் மிரட்சி தெரிந்தது. ஓடினால் மான்குட்டியின் சாயல் தெரியலாம்.

அமீனையும், ஜீப்பில் இருந்த இராணுவத்தினரையும் பார்த்து அவள் மிரண்டாள். ஓடிவிடலாமா என்று அவள் யோசிப்பதும் கண்களில் தெரிந்தது.

அமீன் ஜீப்பிலிருந்து கீழே குதித்தான். அவளுக்கு அருகில் நின்ற பெண்கள் பயத்தில் பின்னடைந்தனர். அவளும் பின்னடைந்த போது, தன் இரும்பு போன்ற கரங்களால், அவள் கரத்தை பற்றிக்கொண்டு "பயப்படாதே, உன்னைச் சாப்பிடமாட்டேன்." என்றபடி கண்களால் ஆராய்ந்தான்.

அவள் தேம்பித் தேம்பி பயத்தில் உடல் நடுங்க அழத் தொடங்கிவிட்டாள்.

அவளது மார்பகங்கள் பயத்தில் புறாப் போல துடிப்பதைப் பார்த்தான் அமீன்.

என்ன நினைத்தானோ, சட்டென்று, "போடி" என்று கழுத்தில் பிடித்து தள்ளி விட்டு ஜீப்பில் வந்து ஏறிக்கொண்டான்.

அன்றுமாலையில் ஸயார் கிளர்ச்சியாளர்களை தனியாளாக சந்தித்தான். "தனிமையில் சந்திக்கிறீர்கள். உங்கள் உதவிக்கு.." என்று அமீனின் கீழ் அதிகாரி தயக்கமாக கேட்ட போது, "என் சுண்டுவிரல் போதும்!" என்று அவன் சிரித்த சிரிப்புக்கு வாய்மூடிக் கொண்டான் கீழ் அதிகாரி.

ஸயார் ஆட்சியாளர்கள்தான் தங்களை உகண்டாவுக்குள் துரத்துவதாகவும், உகண்டாவுக்கு சுமையாக இருக்கட்டும் என்று நினைத்தே விரட்டி அடிப்பதாகவும் அவர்கள் அமீனிடம் முறையிட்டனர்.

அவர்கள் சொன்ன பல தகவல்கள் அமீனுக்கு புதுமையாக இருந்தன. "உகண்டாவை என்ன குப்பைதொட்டி என்றா நினைத்து விட்டார்கள்?" என்றான்.

"உங்களுக்கு உதவினால் உகண்டாவுக்கு என்ன இலாபம்? போங்கடா நீங்களே அடிபட்டு செத்துப் போங்கள்" என்று ஒரு கட்டத்தில் அமீன் சலிப்புற்ற போது, அவர்கள் ஆசை வலையை வீசினார்கள்.

"எங்களிடம் போதிய யானைத் தந்தங்கள் இருக்கின்றன. அவற்றையும் தேவையான பணத்தையும் அவ்வப்போது தருவோம்.நீங்கள் ஆயுதங்கள் மட்டும் தந்தால் போதும்" என்று அவர்கள் கூறியபோது, அமீனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுவது போலிருந்தது.

ஆனாலும் 'பிகு' பண்ணிக்கொண்டுதான் இறுதியில் சம்மதித்தான்.

ஸயார் கிளர்ச்சியாளர்களுக்கு உதவினால், இராணுவத்தை பலப்படுத்த போதிய நிதி நமக்கும் கிடைக்கும். தேவைப்பட்டால் உங்கள் எதிரிகளை ஒடுக்கவும் இவர்கள் உதவியையும் பெறலாம். என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் உத்தரவுக்காக காத்திருக்கிறேன். ஒழித்துக் கட்டவா? உதவி செய்யவா?" என்று கேட்டிருந்தான் அமீன்.

ஜனாதிபதியை கவிழ்க்கும் திட்டத் தோடு இருந்த பிரதமர் ஒபொடேக்கு அமீனின் யோசனை பிடித்திருந்தது.

"உதவி செய்ய உத்தரவு" என்று பதில் பறந்தது பிரதமர் ஒபொடேவிடம் இருந்து.

ஸயார் கிளர்ச்சியாளர்களுக்கு அமீன் உதவி செய்த விபரம் பிரதமருக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

இராணுவத் தளபதிக்கோ, ஜனாதிபதிக்கோ அதுபற்றி ஒன்றும் தெரியாது.

பிரதமர் ஒபொடேவுக்கு அவ்வப்போது யானைத் தந்தங்களை அனுப்பிவைத்த இடி அமீன், பெரும்பாலான தந்தங்களை விற்று தன் வங்கிக் கணக்கில் போட்டுக் கொண்டான்.

ஒபொடேவுக்கும் அமீனின் கணக்கு வழக்கில் ஒருமுறை சந்தேகம். தன்னையும் அமீன் ஏமாற்றுகிறானோ? என்று உறுத்தல்.

கணக்குகளுடன் வருமாறு அமீனுக்கு தகவல் கொடுத்தார். அமீன் மூளையை உபயோகித்தான்.

ஒபொடேயைச் சந்திக்க முன்பாக, ஒபொடேயின் மகளை சந்தித்தான் அமீன்.

"தந்தங்களைவிட வழவழப்பாக இருக்கிறது" என்று அவளது தொடைகளை வருடி வர்ணித்துவிட்டு, "யானைத் தந்தங்களை நான் சாப்பிட்டுவிட்டேன் என்று உன் தந்தை நினைக்கிறாரா? நான் படையை விட்டே விலகலாம் என்றிருக்கிறேன்" என்றான் அவளின் மார்பில் சரிந்துகொண்டு.

அமீனை இழக்க அவள் தயாராக இல்லை. அவனை இறுக அணைத்து, அவன் உடலின் திடத்தை உணர்ந்தபடி கூறினாள்: "நான் அவருடன் பேசுகிறேன்"

அமீன் அவளை முரட்டுத்தனமாக ஆக்கிரமித்தான். அந்த முரட்டுத்தனம் அவளை பைத்தியமாக்கியது.

மகளின் அமீன் பைத்தியம் தனது பதவிக்கு ஆபத்தாகப்போகிறது என்பது தந்தைக்கு தெரியவில்லை.

அமீனிடம் அவர் கணக்கு கேட்கவில்லை.

ஆனால் கணக்கு கேட்கப்பட்டது. கேட்கப்பட்ட இடம் உகண்டா பாராளுமன்றம்.

இடி அமீனின் வங்கிக் கணக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒச்சேங் என்பவர் கேட்டார்; "ஒரு இராணுவ அதிகாரியிடம் இத்தனை பணம் எப்படிக் குவிந்தது? ஆராய உடனே தேவை விசாரணைக் கமிஷன்!"

குண்டு வீசப்பட்டதுபோல அதிர்ந்து போன பிரதமர், அடுத்து வகுத்த திட்டத்தில் அமீனுக்கு திருப்பம் காத்திருந்தது.

(இடி தொடரும்)

## பொல்லாத சாமி



அரசியல்வாதிகளை ஆட்டிப் படைத்த சாமியார் சந்திராசாமி.பிரபல அழகி பமீலா போன்றோரின் உதவியுடன் அரசியல்வாதிகளையும்.ஆயுத வியாபாரிகளையும் கைக்குள் போட்டுக்கொண்டு சொகுசாக வாழ்ந்தவர்.

சில காலத்திற்கு முன்னர் சந்திரா சாமியை பிடித்து இந்தியாவில் சிறையில் வைத்திருந்தனர். பிரபல அரசியல்வாதிகள் இவரது சீடர்களாக இருப்பதால் முழுவீச்சில் நடவடிக்கைகள் எடுக்க இயலவில்லை.

சமீபத்தில் சந்திரசாமியின் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டன. இந்திய பண மதிப்பில் மொத்தம் இரண்டாயிரத்து முந்நூறு கோடி ரூபாய் சொத்து சேர்த்துக் வைத்துள்ளார் என்று கண்டுபிடித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்படாமல் இன்னும் எத்தனை கோடி ரூபாய்களுக்கு சொத்து இருக்கிறதோ?

ஆயுத வியாபார தரகு மூலமே ஏராளமான பணம் திரட்டியிருக்கிறார். அழகி பமீலாவைவைத்து சாமி வளைத்துப் போட்டவர்களில் ஒருவர் சர்வதேச ஆயுத வியாபாரிகளில் ஒருவரான கசோகி. அவர் மட்டும் சாமிக்கு இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர்களை கொடுத்துள்ளாராம்.

## மறந்த ஆசை



இன்றைய திகதியில் உலகில் அதிக ஊதியம் வாங்கும் சூப்பர் மொடல் அழகி சிண்டி கிராப்போர்ட்.

இவர்மீது எத்தனையோ பேருக்கு கொள்ளை ஆசை. இவருக்கும் ஆசை ஒன்று இருந்தது. அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதியாகும் ஆசைதான் அது.

ஆனால், தற்போது அந்த ஆசை கிடையவே கிடையாதாம்.

"அதொன்றும் நல்ல வேலை கிடையாது" என்கிறார் சிண்டி.

ஜனாதிபதியானால் தனது ஆண் நண்பர்கள் வழக்குப்போட்டு கிளின்ரனைப் போல தன்னையும் முழிக்க வைத்துவிடுவார்கள் என்று பயப்படுகிறாரோ தெரியவில்லை.

சிண்டி கூறும் தத்துவம் இது:

"நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதைச் செய்யுங்கள். வாழ்க்கை மிகவும் குறுகியது."

## தொடர் இழப்பு



அமெரிக்காவில் ஒரே குடும்பத்தில் பத்துக் குழந்தைகள் அடுத்தடுத்து இறந்துள்ளனர்.

"இந்த மகா மகா சோகத்தை கடந்த 30 ஆண்டுகளாக சுமக்கிறோம். பத்துக் குழந்தைகள் இதுவரை பிறந்தன. ஒரு குழந்தைகூட 15 மாதத்திற்கு மேல் உயிருடன் இருந்ததில்லை" என்று கூறுகின்றனர் பறிகொடுத்த தம்பதி.

ஆர்தர் (78) மேரினோ (68) தம்பதிக்கு 1949ம் ஆண்டு முதல் 1968ம் ஆண்டுவரை அடுத்தடுத்து பத்துக் குழந்தைகள் பிறந்தன. அவற்றில் ஒன்றுகூட பிழைக்கவில்லை.

இவ்விடயம் தற்போதுதான் விவகாரமாகியுள்ளது. குழந்தைகளின் பெயர்களில் காப்புறுதி செய்துவிட்டு, அப் பணத்தை எடுப்பதற்காக குழந்தைகளைக் கொன்றனரா? என்று சந்தேகம் கிளம்பியுள்ளது.

ஏனெனில் இறந்த ஆறு குழந்தைகளுக்கு காப்புறுதிப் பணம் பெற்றுள்ளனர்.

ஆனால் தம்பதியர் அதனை வன்மையாக மறுக்கின்றனர். "எங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது வேதனையாக உள்ளது. எங்கள் கவலையைக் கிளரவேண்டாம்" என்கின்றனர்.

"பிறந்ததும் இறக்கும் அபூர்வநோய் பல ஆயிரம் பேரில் ஒருவருக்கு இருக்கலாம்" என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

## கிளின்ரனின் விடுதலை



அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் குற்றமற்றவர் என்று நீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால் அமெரிக்க மக்கள் நம்புவார்களா என்பதுதான் தெரியவில்லை.

கிளின்ரன்மீது ஒரு பெண்கள் பட்டாளமே அடுத்தடுத்து புகார் கொடுத்துள்ளது. அவர்களில் அழகி பவுலா ஜோன்ஸ் தொடுத்த வழக்கில்தான் கிளின்ரன் தப்பியிருக்கிறார்.

"நீதிமன்றத்திற்கு ஆதாரம் பலமாக இருக்க வேண்டும். இம் மாதிரி சமாச்சாரங்களில் ஆதாரங்கள் போதியளவு இருப்பதில்லை. அதுதவிர கிளின்ரன் புதுவிதமான உறவை நாடுபவர். எனவே பரிசோதனைகளில்கூட நிரூபிக்க முடியாமல் உள்ளது." என்று பவுலாவின் சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.

தீர்ப்பு எப்படி இருந்தாலும் கிளின்ரனின் 'கிளீன் இமேஜ்' அவரது முன்னாள் தோழிகளால் கறைப்பட்டது பட்டதுதான்.

நீதிமன்ற தீர்ப்புக்கள் எல்லாம் வேதங்கள் அல்ல. குற்றவாளிகள் தப்பிக்கொள்வதும் சகஜம்தான்.

## ஆண்டுக்கு ஒன்று



பல்கேரியா நாட்டில் ஒரு பெண்மணி படைத்துள்ள சாதனை அங்கு தலைப்புச் செய்தியாகியுள்ளது.

வேறொன்றும் இல்லை, 38 வயதுக்குள் 22 குழந்தைகள் பெற்று முடித்திருக்கிறார். இது பல்கேரியா நாட்டில் தேசிய சாதனை.

பதினைந்து வயதில் திருமணமானது. அன்று முதல் இன்றுவரை ஆண்டு தவறாமல் பெற்றுக் குவித்துவிட்டார் சீமாட்டி. இவரது பெயர் ஸ்டெபானோவோ.

பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ இன்னொன்றுதான் பாக்கி உள்ளது. சாதனையைத் தொடரும் யோசனை அவருக்கும் கணவருக்கும் இருப்பதாகத்தான் தெரிகிறது.

## "இதுவும் ஒரு தொழில்தான்"



"எங்களை விபச்சாரிகள் என்று அழைக்காதீர்கள். செக்ஸ் தொழிலாளர்கள் என்று அழையுங்கள்" இப்படி குரல் கொடுத்துள்ளனர் இந்தியாவில் கல்கத்தா சிவப்பு விளக்குப் பகுதியில் உள்ள பெண்கள்.

இவர்களது முதலாவது தேசிய மாநாடு சமீபத்தில் கல்கத்தாவில் நடைபெற்றது. ஆயிரத்து ஐநூறு பெண்கள் கலந்துகொண்டனர்.

அந்த மாநாட்டில் முக்கிய தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தனர். "செக்ஸ் ஏனைய தொழில்களைப் போன்ற ஒரு தொழில்தான். எனவே வேலை செய்வதற்கான உரிமை என்ற அடிப்படையில் செக்ஸ் தொழிலாளர்கள் தங்கள் வேலையைச் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்பதுதான் அந்த தீர்மானம்.

செக்ஸ் தொழிலாளர்களையும், அவர்களது குழந்தைகளையும் பாதுகாக்க ஒருமையம் அமைக்கப்பட உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## சுத்தமான காற்று




← **கை**க்குழந்தைகளை தள்ளுவண்டிகளில் அழைத்துப் போவது புதுமையல்லத்தான். தள்ளு வண்டிகளில் குழந்தைகளைக் கொண்டு செல்லும்போது வாகனங்கள் விடும் புகையையும் அசுத்தக் காற்றையும் குழந்தைகள் சுவாசிக்க நேருகிறது.

இதனை எப்படித் தடுக்கலாம் என்று யோசித்து, தீர்வு கண்டுவிட்டனர். தள்ளு வண்டியில் எட்டு கிலோ எடையுள்ள ஒரு சாதனத்தை பொருத்தப்போகிறார்கள். பற்றரி மூலம் இது இயங்கும்.

அச்சாதனத்தின் தொழில் என்ன தெரியுமா? குழந்தை அமர்ந்துள்ள பகுதிக்குள் அசுத்தக் காற்றும், புகையும் புகவிடாமல் தடுத்துவிடும். இந்த சாதனம் மூலம் 98 சதவீதம் சுத்தமான காற்றைத் தரமுடியுமாம். இங்கிலாந்து பொறியிலாளர் ஸ்டிபன் கியூஸ்டெர் என்பவர் இந்த புதியசாதனத்தை கண்டுபிடித்திருக்கிறார். ■

## குட்டிச் சதுரங்கம்



↘ **அ**ழகியின் விரல்களுக் கிடையே இருப்பது என்ன தெரியுமா? உலகிலேயே மிகச் சிறிய சதுரங்க பலகை. கண்ணின் அளவுதான் இருக்கிறது. இதனை வெண்கலத்தால் செய்துள்ளனர்.

தாய்வான் நாட்டைச் சேர்ந்த, 39 வயதான இளைஞர் ஒருவர் இதனை உருவாக்கியுள்ளார். இது ஒரு சென்டி மீட்டர் விட்டம் கொண்டது. 32 காய்கள் உள்ளன. அவற்றின் உயரம் 0.2 மில்லி மீட்டர் மட்டும்தான்.

சதுரங்கத்தில் மூளைக்கு வேலை. இந்தக் குட்டிச் சதுரங்கத்தில் கண்களுக்கும் பயங்கர வேலை. கூர்ந்து பார்த்துத்தான் விளையாட வேண்டும். ■

## தேனீ இசை



**பா**ம்புக்கு மகுடி வாசிப்பதுபோல, இவர் தேனீக்களுக்கு இசைமீட்டி காட்டுகிறார். பாருங்கள் அவர் உடம்பெங்கும் தேனீக்கள் உல்லாசமாக அமர்ந்திருக்கின்றன. ஏனையவை சுற்றிலும் பறந்து திரிகின்றன.

↙ மொத்தம் இருபதினாயிரம் தேனீக்களுடன் கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து வித்தை காட்டுகிறார். இவரது பெயர் மார்க்ஸ் செய். கனடாவைச் சேர்ந்தவர். நாற்பது வயது.

நம்மைக் கண்டால் கொட்டும் தேனீ இவரைக் கண்டால் ஒட்டிக் கொள்ளும் இரகசியம் என்னவோ? ■

**தகவல் பெட்டி**

## அன்புத் தோழன்



↘ கால் ஊனமுற்ற இந்தச் சிறுவன் ரிமோட் கொண்ட்ரோல் மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தில் பாடசாலை சென்று வருகிறான். இன்னொருவர் உதவியை நம்பியிருக்கத் தேவையில்லை. வெளிநாடுகளில் இத்தகைய முச்சக்கர வண்டிகள் பரவலாக பாவனையில் உள்ளன.

உதவிக்கு ஆள் தேவையில்லை என்றாலும், தோழமை மனிதனுக்கு தேவைதானே இந்தச் சிறுவனுக்கு நாய்தான் தோழன். அவனது பாடசாலைப் பையை தானே சுமந்து செல்கிறது பாருங்கள். மனிதர்களிடம் தோழமை குறையக் குறைய ஐந்தறிவுப் பிராணிகளிடம் தோழமை பெருகி வருகிறதோ! ■

## இளமயில் இவள்தானா?



← இது என்ன புதுவிதமான கூந்தல் அலங்காரமோ? என்று தான் சட்டென்று எண்ணத் தோன்றும். அல்ல, அல்ல. அல்ல. இதற்குத் தான் சொல்லுவார்கள், எதையும் தீர ஆராயவேண்டும் என்று.

கலை நயத்துடன் எடுக்கப்பட்ட சூப்பர் புகைப்படம் இது. அழகியை மரம் முன்னால் நிறுத்தி வைத்து கச்சிதமான கிளிக். தோதான மரம் என்பதால் கூந்தல் போன்றே அமைந்துவிட்டது. வித்தியாசமான சிந்தனை.

இப்புகைப்படத்தைப் பார்த்ததும் என்ன பாடல் நினைவுக்கு வரும்? "தோகை இளமயில் ஆடி வருகுது வானில் மழை வருமோ?!"

## பாலத்தில் ஒரு பந்தி



**ஐ**ரோப்பாவிலேயே மிக நீளமான பாலம் இது. போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரின் வடக்கில் இருப்பது டாகஸ் நதி. அந்த நதிக்கு குறுக்காக 11 மைல் நீளம் வரை இப்பாலம் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது. வாஸ்கோடகாமா என்று பெயர் வைத்துள்ளனர்.

இதனை கட்டி முடிக்க இரண்டாயிரத்தி நாறூறு கோடி ரூபா செலவானது. ஆனால் படத்தில் நீங்கள் காண்பது பாலம் அல்ல. பாலத்தின் மேலே அடுக்கிவைக்கப்பட்டுள்ள சாப்பாட்டு மேசைகள். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? பாலத்தின் திறப்பு விழாவை புதுமையாகக் கொண்டாடினார்கள். பாலத்தின் மேல் மூன்று மைல் நீளத்துக்கு மேசைகளை அடுக்கி ஒரே நேரத்தில் 15 ஆயிரம் பேருக்கு விருந்து வைத்து அசத்திவிட்டனர். விருந்து ஏற்பாடு நடக்கும்போது 'கிளிக்' செய்த படம் இது. நீளமான விருந்து. ■

## மிதக்கும் நகரம்
### உருவாகும் உலக ஆச்சரியம்

**ப**டத்தில் இருப்பது பிரமாண்டமான கட்டடத் தொகுதி மாதிரி தெரிகிறதா? அதுதான் இல்லை. மாபெரும் அதிசயமாகத் தயாரிக்கப்பட்டுவரும் கப்பல்தான் இது. இதற்கு புளொட்டிங் மோனாக்கோ என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இந்தக் கப்பலைப் பற்றிய தகவல்களை கேட்டால், வாய்பிளந்து நிற்கப் போகிறீர்கள்.


இதுவரை டைட்டானிக், எலிசபெத் ராணி-02, கார்னிவல் டெஸ்டினி, கிராண்ட் பிரின்சஸ் ஆகிய கப்பல்கள்தான் பலே பலே கப்பல்கள் என்று கூறப்பட்டு வந்தன. இவற்றில் டைட்டானிக் மட்டும் கடலில் மூழ்கியது.

மேற்கண்ட கப்பல்களையெல்லாம் தூசாக புறம்தள்ளும் வகையில் இந்த புளொட்டிங் கப்பல் தயாராகி வருகிறது.

* இதனை உருவாக்கி முடிக்க கிட்டத்தட்ட 41 ஆயிரம் கோடி ரூபாய்கள் செலவாகும்.
* இக் கப்பலில் 65 ஆயிரம் பேர் வசிக்கலாம். உள்ளே 20 ஆயிரம் வீடுகள் இருக்கும். விமான நிலையம், வைத்திய சாலைகள், விளையாட்டு மைதானம், பல்கலைக்கழகம் ஆகியன இருக்கும்.
* இதற்குள் வசிப்பவர்கள் நிரந்தரமாகவே வசிக்கலாம். இங்கிருந்தே தங்கள் சர்வதேச தொழில்களை கவனிக்கலாம்.
* இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இந்தக் கப்பல் உலகை வலம்வரும். பயணம் முடிந்த நாட்களில் இந்த 'மிதக்கும் நகரம்' நியூயோர்க் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.
* கடுமையான புயல் அடித்தாலும் கப்பல் பாதிக்கப்படமாட்டாது. இக்கப்பலுக்குள் உள்ள வீடுகள் ஒவ்வொன்றும் 2 கோடி ரூபாய்க்கு விற்கப்படும்.
* இக் கப்பலில் வசிப்பவர்கள் வரி எதுவும் கட்டத் தேவையில்லை. உள்ளே பொலிஸ் நிலையம் இருக்கும். நீதிமன்றமும் இருக்கும்.

கப்பல் கட்டுவதில் 30 வருட நிபுணத்துவம் உள்ள நோர்மன் நிக்ஸன் (58 வயது) என்பவரது மேற்பார்வையில் 30 பொறியியலாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த உலக ஆச்சரியக் கப்பல் 2002ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தனது பயணத்தை தொடங்கும். இதன் நீளம் 4 ஆயிரத்தி 320 அடி. அகலம் 600 அடி. உயரம் 350 அடி. 3 இலட்சத்து 70 ஆயிரம் குதிரை வலுக் கொண்ட என்ஜின் பயன்படுத்தப்படும். கப்பலின் எடை 2 இலட்சத்து 70 ஆயிரம்.



இக் கப்பல் நகரில் குடியேற விண்ணப்பங்கள் குவிகின்றன. இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட உலக மகா செல்வந்தர்கள் முன்பதிவு செய்துவிட்டனராம். தரையில் வாழ்வது சலித்துவிட்டதால் கடலில் வாழும் ஆசை. ஆனால் பணமும் கடல்போல இருந்தால்தான் ஆசை நிறைவேறும். ■



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 50

# காதலித்து ஏமாற்றிய நடிகர்

## தந்தைக்குப் பயந்த காதலர்

மூன்றெழுத்தில் பெயர் உள்ள குள்ளமான நடிகை அவர். நடிக்க வந்த புதிதில் இன்றைய கதாநாயகர்களில் ஒருவரான 'கா' நடிகரைத்தான் காதலித்தார்.

'கா' நடிகரும் அவரைக் காதலிப்பதாகக் கூறிக்கூறியே தன் இழுப்புக்கெல்லாம் இசைய வைத்தார். நடிப்புத் திறமை உள்ள நடிகையாக இருந்தும் 'கா' நடிகரின் காதலும் நடிப்புத் தான் என்பதை நடிகையால் கண்டுபிடிக்க முடியவில்லை.

### நடிகர் நழுவினார்

தாண்டவேண்டிய எல்லைகளைத் தாண்டிய பின்னர்தான் நடிகரின் சுயரூபம் தெரியவந்தது.

ஏற்கனவே ஸ்ரீபிரியமான நடிகையை காதலித்து ஏமாற்றியவர் 'கா' நடிகர். அதனால் அந்த நடிகை தற்கொலைக்கு முயன்று பின்னர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சையால் காப்பாற்றப்பட்டவர்.

ஸ்ரீ நடிகையின் வீடுவரை சென்று, உரிமையோடு அவருடன் உறவு வைத்திருந்தவர்தான் 'கா' நடிகர். பின்னர் ஒரேயடியாக கை கழுவினார்.

அந்தக் கதையை பொய்யென்று முதலில் நினைத்த மூன்றெழுத்து நடிகைக்கு தனக்கும் அதே அனுபவம் ஏற்பட்டபோதுதான் உண்மை புரிந்தது.

'கா' நடிகரோ எவ்வித கவலையும் இல்லாமல் வேறு சில புதிய நடிகைகளுடன் தொற்றிக் கொண்டார். மூன்றெழுத்து நடிகை தொடர்பு கொண்டால், இருந்தபடியே 'இல்லை' என்று உதவியாளர் மூலம் கூறிவிடுவார்.

அத்தோடு நடிகை ஒதுங்கிக்கொண்டார். அப்போதுதான் நடிகைக்கு பிரபல தயாரிப்பாளரும், நடிகருமான ஒருவரின் மகனுடன் நட்பு ஏற்பட்டது.

காதலில் தோல்விகண்ட நடிகைக்கு புதிய நட்பு இதமளித்தது. பணக்கார வீட்டு கன்றுக் குட்டியான அந்த இளைஞரும் வாய் கொள்ளாமல் காதல் வசனம் பேசினார்.

### ஊட்டிப் பயணம்

நடிகையும் அவரும் இணைந்து ஊட்டிக்குச் சென்றனர். ஏற்கனவே நடிகருடன் ஏற்பட்ட அனுபவத்தால் நடிகை உஷாராகவே இருந்தார்.

ஆனால் காதலர் நடிகையை தன் ஆசைக்கு இணங்க வைப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

ஊட்டியின் குளிரும், தனிமையும் நடிகையையும் தடுமாறச் செய்தது. படிப்படியாக காதலரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானார் நடிகை.

இவர்கள் இருவரும் இணைந்தே ஊட்டி சென்ற விஷயம் காதலரின் தந்தையான தயாரிப்பாளருக்கு தெரிந்து விட்டது. அவர் கடும்கோபத்தில் இருந்தார்.

ஊட்டியில் இருந்து மகன் திரும்பி வந்ததும் வானத்துக்கும் பூமிக்குமாக குதித்தார் தந்தையார்.

இறுதியில் தந்தையின் கோபத்திற்காக காதலைத் தியாகம் செய்ய முன்வந்தார் மகன். தந்தையைப் பகைத்தால் சொத்துக்கள் கைவிட்டுப் போகும் என்பதுதான் முக்கிய காரணம்.

நடிகைக்கு இச் செய்தி எட்டியபோது இடிந்துபோனார். சில நாட்கள் பட்டினி கிடந்தார்.

இவ்விடயத்தை அறிந்த நடிகையின் காதலரது நண்பர் நடிகைக்கு ஆறுதல் கூறினார். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் நடிகையின் காதலருக்கும், காதலரின் அந்த நண்பருக்கும் ஒரே பெயர்தான்.

நடிகையை திருமணம் செய்யத் தயாராக இருப்பதாக தனது விருப்பத்தை ஒருநாள் தெரிவித்தார் அந்த நண்பர். அவரது அமைதியான, அதிர்ந்து பேசாத குணம் நடிகையைக் கவர்ந்தது.

இருவரும் மனம்விட்டுப் பேசினர் இக் கட்டத்தில் தனது மகனை மறந்துவிடும்படி தயாரிப்பாளரிடம் இருந்து ஏராளமான மிரட்டல்களும் நடிகைக்கு வந்தன. அடியாட்களை அனுப்பியும் மிரட்டினார்.

அதனால் நடிகை பயந்து போனார். அவருக்கு பாதுகாப்பும் தேவைப் பட்டது. எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்த நடிகை அந்த நண்பரை திருமணம் செய்ய முன்வந்தார்.

எளிமையாக திருமணம் நடைபெற்றது. பின்னர் அவரும் நடிகரானார். மனைவியான நடிகையுடன் இணைந்தும் நடித்தார். நடிகை இன்றும் புகழோடு இருக்கிறார்.

### அறைந்த நடிகை

இவர் நான்கு எழுத்து நடிகை. இவர் பற்றி முன்னரும் பல தடவைகள் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்த நடிகைக்கும் 'பா' இயக்குநருக்கும் இடையே இருந்த தொடர்பு 'பா' இயக்குநரின் வட்டாரத்தில் பிரபலம். நடிகை ஒருநாள் படப்பிடிப்புக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்துவிட்டார். மேக்-அப் அறைக்கு சென்றுவிட்டு வந்தார்.

நடிகை வருவது தெரியாமல், படப்பிடிப்புக் குழுவில் உள்ள சிலர் அவரைப் பற்றி அந்தரங்கமாக பேசிக்கொண்டிருந்தனர்.

நடிகையின் காதில் அவர்கள் பேசியது விழுந்து விட்டது. பத்ரகாளியாக மாறிவிட்டார். ஆங்...லத்தில் கெட்ட வார்த்தைகளில் திட்டிக் கொண்டே இரண்டு பேரின் கன்னங்களில் மாறி மாறி அறைவிட்டார்.

அவர்கள் பயத்தில் உறைந்து போனார்...கள். அதன் பின்னர் நடிகையைக் ...கண்டாலே மரியாதையாக ஒதுங்கி...கின்றனர்.

---

* செய்யாறு ரவி இயக்கத்தில் கார்த்தி... நடிக்கும் 'அரிச்சந்திரா' படத்தில் இயக்குநரு... போத்தன் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறா...

* கே.டி. குஞ்சுமோன் தயாரிப்பில் விஜய்- ர... 'என்றென்றும் காதல்' படத்தில் பானுப்பிரியா... படத்திற்குப் பிறகு பானுப்பிரியா நடிக்கும் ப...

* 'காதலுக்கு மரியாதை' படத்தை இந்தியில் அ... வைத்து இயக்கி வருகிறார் பிரியதர்ஷன். முத... படத்தில் கதாநாயகனாக நடிக்க இருந்தவர்...

* விஜயகாந்த் நடிக்கும் 'தர்மா' படத்தில் வ...யாக நடிக்க மலையாளத்திலிருந்து ஷில்பா ... வந்திருக்கிறார்கள். ஏற்கனவே ஷில்பா பல மலை... தங்கை வேடத்தில் நடித்துள்ளார்.

* 'காவியத் தலைவன்', 'முற்றுகை', 'ராஜாள...களுக்கு இசையமைத்தவர் அரவிந்த் சித்தா... அண்மையில் 'காதலைக் காதலி' என்ற தனி இசை... வெளியிட்டுள்ளார்.

* இந்தியில் தயாராகும் 'சூர்ய வம்சம்' ... அமிதாப்பச்சன் கதாநாயகனாக நடிப்பது ... செய்தி. தமிழில் ராதிகா, தேவயாணி நடித்த ...களில் இந்தியில் ராதிகாவும், சௌந்தர்யாவும் ...கிறார்கள் என்பது புதிய செய்தி.

* சத்தியராஜை வைத்து 'கல்யாண கலாட்டா' 'பெண் ஒன்று கண்டேன்' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் கே.பி. பிலிம்ஸ் அடுத்து பிரபு நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது.

* தமிழில் ராம்கியுடன் ஜோடியாக 'எல்லாமே என் பொண்டாட்டிதான்' படத்தில் நடித்து வரும் சங்கவி 'ஆல்ரவுண்டர்' என்னும் தெலுங்குப் படத்தில் நடிக்கிறார். இதில் சங்கவிக்கு ஜோடியாக கிருஷ்ணா நடிக்கிறார்.



விஜய்-ரம்பா
படம்: நினைத்தேன் வந்தாய்

### சின்னராஜா

கார்த்திக் நடிக்கும் புதிய படம் 'சின்னராஜா'. இந்தச் சின்னராஜாவுக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் ரோஜா. இன்னொருவர் பிரியாராமன்.

மணிவண்ணன், ஜெய்சங்கர், வையாபுரி, எஸ்.என்.லட்சுமி ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. இயக்கம்: சித்ரா இலட்சமணன்.

### அதிக கோடி

இதுவரை தயாரிக்கப்பட்ட இந்தியப் படங்களில் அதிக பட்ஜெட்டில் தயாரான படம் தங்களுடையது தான் என்கிறார் 'ஜீன்ஸ்' தயாரிப்பாளர்.

மொத்தச் செலவு இந்திய பணமதிப்பில் 24 கோடி ருபாயாம். உலகெங்கும் சுற்றி படமெடுத்தால் பணம் தண்ணீராகப் பாயும்தானே.

### 'சொர்ணமுகி' பார்க்கலாமா?

பார்த்திபன், பிரகாஷ்ராஜ், தேவயாணி, மணிவண்ணன், பாத்திமா பாபு ஆகியோர் ஐக்கிய முன்னணியாக இணைந்து தந்துள்ள படம் 'சொர்ணமுகி'.

இயக்கம்: அதியமான். தன்னை நம்புவதைவிட பார்த்திபனையும் தேவயாணியையும் மலையாக நம்பி படம் எடுத்திருக்கிறார்.

பார்த்திபன் தோன்றும் காட்சிகள் அனைத்துமே கலக்கல். இயல்பான நகைச்சுவையான வசனங்கள். தேவயாணி அருமையாக நடித்திருக்கிறார். பிரகாஷ்ராஜின் நடிப்பில் இயல்பற்ற மனோநிலை கொண்டவர் போன்ற சாயல் எப்போதுதான் விலகுமோ?

தேவயாணியின் அம்மாவாக பாத்திமா பாபு வருகிறார். மணிவண்ணன் வழக்கம் போல வந்து வசனம் பேசுகிறார்.

தேவயாணி தன்னை வெறுக்க வேண்டும் என்பதற்காக பார்த்திபனை அத்தனை மோசமான வார்த்தைப் பிரயோகங்களை பேசவிட்டிருக்க வேண்டுமா? கொஞ்சம் ஓவர். என்றாலும் கதை முடிச்சை நன்றாகப் போட்டிருக்கிறார் அதியமான்.

பார்க்கக்கூடிய படம். குறிப்பாக பார்த்திபன், தேவயாணிக்காக பார்க்கலாம். நம்நாட்டில் வீடியோவில் பார்க்கலாம்.

### தமிழில் மீண்டும் ரவீனா?

'சாது' படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடித்தவர் ரவீனா ராண்டன். அர்ஜுனுடன் ஒட்டிக்கொண்டதால், அல்லது இவரிடம் மயங்கி அர்ஜுன் ஒட்டிக்கொண்டதால் பெரும் பிரச்சனை வெடித்தது பழைய கதை.

இப்போது மறுபடியும் தமிழ்ப் படங்களில் நடிக்க விருப்பம் கொண்டுள்ளார். இந்திப் படவுலகில் இவரது காதலர் அக்ஷய் குமார். இருவரும் திருமணம் செய்யப்போகின்றனர் என்று கதைகள் அடிபட்டன. இப்போது காதலர்கள் 'காய்' விட்டுப் பிரிந்துவிட்டனர்.

இந்தியிலும் குறிப்பிட்டுச் சொல்லும்படியான படங்கள் ரவீனாவுக்கு கிடைக்கவில்லை. அதனால்தான் தமிழில் நடிக்க விரும்புகிறார்.

மாதுரி டிக்ஷித் ஆகியோர் தமிழில் மகத்தான வரவேற்பைப் பெறப்போகிறார்கள். 'என்ஜினியர்' படம் ஹிட்டாகும் என்று இப்போதே கதைக்கிறார்கள்.

அதனால்தான் மாதுரியை துரத்திக்கொண்டு தமிழில் நடிக்க ரவீனாவும் விரும்புகிறார்.

அர்ஜுனின் உதவியை நாட விரும்பவில்லை. காரணம், அர்ஜுன் படங்கள் தற்போது அடிவாங்கிக் கொண்டிருப்பதால் அவருடன் ஜோடி சேரும் யோசனை இல்லையாம்.

### மீனா வருத்தம்

'நாம் இருவர், நமக்கு இருவர்' படத்தின் தோல்விக்கு மீனாவை குற்றம் சாட்டுகிறார்களாம். பாவம் ரொம்ப வருத்தப்படுகிறார்.

"என்னுடைய கவர்ச்சியான உடைகளால் படம் தோல்வி அடைந்தது என்று ஒரேயடியாக கூறிவிடமுடியாது. அதுவும் ஒரு காரணம் என்று வேண்டுமானால் கூறலாம். வழக்கமாக என்னை சேலையில் பார்த்த இரசிகர்கள் கவர்ச்சிகரமான உடைகளில் பார்க்க ஆசைப்படாமல் போவார்களா? அதனால் கவர்ச்சிகரமான உடைகளால் படம் தோல்வி அடைந்தது என்ற காரணத்தை முழுக்காரணமாக ஏற்க முடியாது" என்று கூறுகிறார் மீனா.



ரவீனா ராண்டன்



படிப்பகம்

ா -பிரியா ராமன்
டிகருமான பிரதாப்

ஜோடியாக நடிக்கும்
நடிக்கிறார். 'ஆஹா'

கன்னாவை கதாநாயகனாக
இந்தி 'காதலுக்கு மரியாதை'
பாஸ்.

ாந்திற்குத் தங்கை
வரை அழைத்து
ளப் படங்களில்

ான்ற படங்
ா. இவர்
ல்பத்தை

# மினி சினி

* கமல்-பிரபுதேவா நடிக்கும் 'காதலா காதலா' படத்தைத் தயாரித்து வரும் பி.எல். தேனப்பன் அடுத்து அருண்குமார்-சூர்யா இணைந்து நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்.

* பிரபல மலையாளப்பட இயக்குநர் ஹரிஹரன் இயக்கிய 'சர்கம்' என்ற மலையாளப் படம் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானவர் ரம்பா. இவர் 'சர்கம்' படத்திற்குப் பின் இப்போது மலையாளப் படமொன்றில் நடிக்கிறார்.

# காதோடு சொல்லுகிறோம்

'கௌ' நடிகை மூன்றெழுத்து திலக வாரிசுடன் தொடர்பு கொண்டு சான்ஸ் கேட்டாராம். திலக வாரிசும் 'இனியவளே உனக்கில்லாத வாய்ப்பா? என்று கேட்காத குறையாக தனது படம் ஒன்றில் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்திருக்கிறார். அதற்கு நன்றிக் கடனாக திலக வாரிசுடன் சுற்றிக் கொண்டிருக்கிறார் நடிகை.'

அணியும் ஆடை ஒன்றின் பெயரில் தயாராகியுள்ள பிரமாண்டமான படத்தின் படப்பிடிப்புக்கள் வெளிநாடுகளில் நடந்தன. அப்போது நடந்த பல சமாச்சாரங்கள் இப்போதுதான் மெல்லக் கசியத் தொடங்கியுள்ளன. உலக அழகான கதாநாயகியை தயாரிப்பாளர் மட்டுமல்லாமல், அவருக்கு வேண்டப்பட்ட வெளிநாட்டு பெரும் புள்ளிகள் சிலரும் அன்பாக கடத்திக் கொண்டு போய்விடுவார்களாம். அதனால் சில சமயங்களில் படப்பிடிப்புக்கள் தாமதமானதாம். அதற்கு பழி வாங்கத் தான் பயங்கரமாக செலவழிக்க வைத்தாராம் இயக்குநர்.

மூன்றெழுத்து இளம் நாயகனுடன் 'ரம்ப' நடிகை அதிகம் ஒட்டிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்கிறாராம் நடிகரின் தந்தை. வயதுக்கேற்ற தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளட்டும். மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் சரிதான். கல்யாணம்வரை சென்றால் மார்க்கெட்டும் போச்சு, எல்லாம் போச்சு என்கிறார் தந்தை. நல்ல தத்துவம்.

சௌந்தர்யமான நடிகை சூப்பர் நடிகரின் நளினமான முத்தம் பற்றி சொல்லிச் சொல்லி சிலிர்க்கிறார். எத்தனையோ நடிகர்களுடன் உதட்டோடு உதடு சேரும் விதமாக நடித்திருக்கிறாராம். ஆனாலும் சூப்பர் நடிகரின் நளினம் மாதிரி பார்த்ததில்லையாம். ஆனால் படத்தில் அக்காட்சி இடம்பெறுமா? என்பது மட்டும் தணிக்கையாளர்களுக்குத்தான் வெளிச்சம். அத்தனை கிளு கிளு முத்தமாம்.

சிம்ம நடிகை படப்பிடிப்பு தளத்தில் கதாநாயக நடிகர்களை கட்டிப்பிடித்து 'இச்' கொடுத்து பேசுகிறார். வேடிக்கை காட்டுவது போன்ற பாவனையில் இப்படி செய்கிறாரா? அல்லது வலையை வீசுகிறாரா? என்று புரியாமல் தவித்த ஹீரோ ஒருத்தர், ஆழம் அறிய காலை விட்டுப் பார்த்தாராம். நடிகை முறைத்த முறைப்பில் கப்சிப்பாகிவிட்டார். தோதான ஹீரோக்களுடன் மட்டும்தான் நடிகை அதிகமாக ஒட்டுதல் கொள்வாராம். ஏனையோருடன் வம்பு பண்ணுவதோடு சரி.

சுந்தரமான இயக்குநருக்கு எதிராக 'ரம்ப' நடிகை கொடுத்த புகாரை வாபஸ் பெற வைக்க முயற்சிகள் நடக்கிறது. இயக்குநரே நேரடியாக நடிகையைத் தொடர்பு கொண்டு பழைய நெருக்கத்தை எல்லாம் நினைவு படுத்தி உருக்கமாகப் பேசினாராம். நடிகையோ பிடி கொடுக்காமல் பேசிவிட்டு ஃபோனை வைத்துவிட்டாராம்.




# தேசிய கீதம்

'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' ஆகிய படங்களை அடுத்து சேரன் இயக்கும் படத்திற்கு 'தேசிய கீதம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதை, திரைக்கதை, வசனமும் சேரன்தான்.

'பொற்காலம்' படத்தில் கதாநாயகனாக நடித்த முரளிதான் இதிலும் கதாநாயகன். நாயகி மட்டும் மாற்றம். ரம்பா.

சேரனின் காதலியாக மீனா பெயர் அடிபடுவதால் அவரைத் தவிர்த்துள்ளார் என்று கூறுகிறார்கள். மூன்று படத்திலும் ஒரே நாயகி இருந்தால் வித்தியாசம் தெரியாமல் போகும் என்று சேரன் நினைத்திருக்கலாம்.

இசை: இளையராஜா.

# கள்ளழகர்

தமிழ் நாட்டில் மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழா வெகு பிரசித்தம். அதில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் காட்சி கோலாகலமாக இருக்குமாம்.

இப்போது கள்ளழகர் என்ற பெயரில் படம் தயாராகியது. 'மறுமலர்ச்சி' படத்தை இயக்கிய பாரதி இதனை இயக்கப்போகிறார். தயாரிப்பு: ஹென்றி. இவர் 'பாரதி கண்ணம்மா', 'மறுமலர்ச்சி' படங்களைத் தயாரித்தவர்.

கதாநாயகன் யார் தெரியுமா? மதுரையில் பிறந்த நாயகன்தான். விஜயகாந்த்.

**முகப்பில்** அசாருதீன் மீனா

# பத்துவிதம்

விஜயகாந்த் நடிக்கும் 'தர்மா' படத்தில் பத்து சண்டைக் காட்சிகள் இடம்பெற உள்ளன. பத்தும் பத்துவிதமாக இருக்கும் என்கிறார்கள்.

'தர்மா' படம் விஜயகாந்தின் சொந்தத் தயாரிப்பு. விரைவில் திரைக்கு வரவுள்ளது. படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது. கதாநாயகி மட்டும் இன்னமும் தெரிவாகவில்லை. கதாநாயகி இல்லாத காட்சிகளை முதலில் எடுத்து முடிக்கிறார்கள்.

# 'காதலே வாராயோ இதயத்தை பாராயோ'

ஆளானுக்கு ஆறு, கடல், மலை, வெளிநாட்டு அதிசயங்கள் என்று ஓடி ஓடி படம் எடுக்கிறார்கள். ஆனால் டி. ராஜேந்தர் இருந்த இடத்தில் இருந்து எகிப்திய பிரமிட் போல 'செட்' போட்டு படம் எடுத்து வருகிறார்.

டி. ராஜேந்தரின் படமாக மோனிஷாவுக்கு எகிப்திய பிரமிட், இராட்சத கோட்டைகள், இராட்சத மெழுகுவர்த்திகள் போன்றெல்லாம் 'செட்' போட்டு படமாக்கி வருகிறார்கள்.

இவற்றுக்காக பல இலட்ச ரூபாய்கள் செலவாகியுள்ளன. 'காதலே காதலே வாராயோ, காதலன் இதயத்தைப் பாராயோ' என்று தொடங்கும் பாடல் காட்சிக்காக இப்படி பிரமாண்ட 'செட்' போடப்பட்டுள்ளது.

இப்படத்தில் ராமன் காந்த், மும்தாஜ் ஆகியோர் ஜோடிகளாக நடிக்கின்றனர். இருவரும் புது முகங்கள்.

மும்பாயில் இருந்து ஸ்னேகா, தீப்ஷிகா, சுவாதி பவுடேகர் ஆகிய அழகிகள் பட்டாளத்தையும் இறக்கியுள்ளார் டி. ராஜேந்தர்.

படத்தின் கதை, வசனம், இயக்கம், ஒளிப்பதிவு, பாடல்கள், இசை எல்லாமே டி. ராஜேந்தர்தான்.

# பால் குடிக்கும் கோபாலு

படக்கையில் படுத்திருக்கும் பாண்டியராஜன் நர்ஸ் மயூரியின் மடிமீது சாய்ந்து கொண்டிருக்கிறார். அப்படியே படுத்திருந்து ஃபீடிங் போத்தலில் உள்ள பாலைக்குடிப்பார். அவரையே பார்த்துக் கொண்டு நிற்பார்கள் ஐந்துபேர்.

அவர்களிடம் பாண்டியராஜன் கூறுவார்: "உங்களுக்கெல்லாம் என்னைப் பார்க்க பொறாமையா இருக்கும். நீங்கள் ஐந்து பேரும் வாயிலை விரலை வைத்து சூப்பிக்கிட்டே ஜொள்ளு விடுங்க" ஐந்து பேரும் அப்படியே செய்வார்கள்.

இக் காட்சி 'கும்பகோணம் கோபாலு' படத்திற்காக படமாக்கப்பட்டது. நர்ஸாக புதுமுகம் மயூரி நடித்திருக்கிறார்.

# அப்பா ரகுவரன்

நடிகை ரோகிணியை காதலித்து கல்யாணம் பண்ணியவர் ரகுவரன். மனைவி வந்த ராசியோ என்னவோ, மறுபடி பிஸியாகி விட்டார். தமிழிலும், கன்னடத்திலும் ஏகப்பட்ட படங்கள்.

நடிப்பில் பிஸியாக இருந்தாலும் கணவராகவும் பிஸியாகத்தான் இருந்தார். அதனால் ரோகிணி எட்டு மாத கர்ப்பமாக இருக்கிறார். இன்னமும் இரண்டு மாதத்தில் ரகுவரன் அப்பாவாகிறார்.

'குழந்தை ஆணோ, பெண்ணோ எதுவாக இருந்தாலும் கவலையில்லை. அது எங்கள் குழந்தைதான். பிறக்கிறதுக்கு முன்னாடியே ஆணா, பெண்ணா? என்று தெரிந்தால் நாளைக்கு சஸ்பென்ஸ் இல்லாமல் போயிடும்' என்கிறார் ரகுவரன்.

# ரஜினி—ராஜா

ரஜினியின் அடுத்த படம் பற்றிய செய்திகள், ஊகங்கள் மட்டும் பஞ்சமில்லாமல் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ரஜினியின் அடுத்த படத்தின் இசை இளைய ராஜாதானாம். ரஜினியும் இளையராஜாவும் சமீபத்தில் சந்தித்தபோது முடிவு செய்து கொண்டார்களாம்.

இந்தச் செய்தியும் உண்மையா பொய்யா என்பது ரஜினிக்குத்தான் வெளிச்சம். பாவம், ரஜினி இரசிகர்கள் அடுத்த படத்திற்காக காத்துக் கிடக்கிறார்கள். சித்திரைப் புத்தாண்டுக்கு ரஜினி படம் இல்லாததும் ரசிகர்களுக்கு வருத்தம்.

**சினிவிசிட்**

# ஒரே காதலன்

'நினைத்தேன் வந்தாய்' படத்தில் விஜய் ஜோடிகளாக ரம்பா, தேவயாணி நடிப்பது தெரிந்த செய்தி.

இருவரும் சகோதரிகளாக நடிக்கின்றனர். சொப்னாவாக ரம்பாவும், சாவித்திரியான தேவயாணியும் நடிக்கிறனர். இருவரும் கோகுல கிருஷ்ணனைக் காதலிக்கின்றனர். தாம் இருவரும் ஒருவரையே காதலிக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது.

இருவரும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்து பாடுகின்றனர். இருவர் நினைப்பிலும் கோகுல கிருஷ்ணன் தோன்றி கிளு கிளுப்பை ஏற்படுத்துகிறார். கோகுல கிருஷ்ணனாக நடிப்பவர் விஜய்.

"மல்லிகையே மல்லிகையே மாலையிடும் மன்னவன் யார் சொல்?" என்று சகோதரிகள் பாடுவது போன்ற காட்சி படமாக்கப்பட்டுள்ளது. இயக்கம்: செல்வபாரதி.



கமல்-சௌந்தர்யா
படம்:காதலா காதலா



www.padippakam.com

## பிறந்த ஹஜ்ஜே

பிறந்தது ஹஜ்ஜு-
பூரிப்பில்லை
தியாகத் திருநாள்
தித்திப்பில்லை!
**
முன்னது போல்
மும்முரமிளறி பெருநாள்
ராப்பொழுதுகளின்
அமைதியாய் கிடக்கிறது!
**
போர்க்களமாகிப்போன
இப்பூமியில்
நன்நாளின் மலர்வுகள்
சருகாய்க் கிடக்கிறது!
**
வறுமையாலும்
காலமிதில்
பொன்னாட்களெல்லாம்
புண்ணாட்களாகி
போயின!
**
ஆத்மாக்களின்
அங்கலாய்ப்பெல்லாம்
சமாதான பெருநாளை
காண்பதுதான்!
**
துப்பாக்கியாட்சியில்
அடிமையாக்கப்பட்ட
நமக்கு
குதூகல நாட்களும்
குமுறத்தானே வைக்கிறது!
**
காளலை போல,
புலரும் ஒவ்வொரு
பொழுதுகளும்
ஆகிப்போனது!
**
வேதனைதான்
என்ன செய்வது?
சம்பிரதாயத்துக்காய்
பெருநாட்களின்
அனுஷ்டிப்பு நடக்கிறது!
**
ஹஜ்!
அது தியாகத் திருநாள்
இதிலாவது
நாம் தேடும்
சமாதான மேகம்
கருகட்டல் செய்து
அமைதி பூக்களை
அள்ளியெறியாதா?
**
பிணக்காற்றை
சுவாசிக்கும் நம் நாசிகள்
அமைதிச் சந்தனத்தை
நுகர்சிக்க வழி கிடைக்காதா?
பிறந்த ஹஜ்ஜே
நம் ஏக்க ஏட்டை
படித்துப் பார்!
**
கருணை கொண்ட
நன் நாளே
அவ்வேக்கங்களை
தீர்த்து வை!

எம். ஸாலிஹ் அஸீம்- புத்தளம்.

## துரோகம்

ஒன்றாக இருந்தவனே!
உதைக்க நினைக்கிறான்
எனக்கு...!
யாருமே எதிரியில்லை
இறுமாந்திருந்தேன்!

ஒரு கணம்
கண்ணிமைக்கும் நேரத்துள்
எப்படிச் சாத்தியம்?
நெஞ்சு வெடிக்கிறது-
தாங்க முடியவில்லை!
கண்ணிலிருந்து
கங்கை-
தடுக்கத் தோன்றவில்லை!

ஏன் இப்படிச்
செய்தாய்?
நேற்று வரையில்
நண்பனாகத்தானே
இருந்தாய்?
இன்று மட்டும்-
எப்படியாயிற்று?

என் சோகம்
பார்ப்பவரை
திகைக்க வைக்கிறது!
உனக்கு மட்டும்
வித்தியாசமாகவா?

ஆனாலும்-
உன் பாதிப்பு
எனக்குள் நிறையவே
இல்லாவிட்டால்,
கடிதமே எழுதாதவன்
எப்படி
கவிதை எழுதுவேன்.?

மௌனிகா.

## என் பாட்டில் நான்....

குழம்பிய மனத்தோடு
குத்துக்கல்லில்
குந்திக் கொண்டிருக்கிறேன்!

சந்திர ஒளியை
நீலக் கருமுகில்கள்
மறைத்து மறைத்துத்தான்
வடிகட்டி அனுப்புகின்றன!

யானைப் பசியினை
சோளப் பொரிகளோடு
ஏப்பம் விடுகிறேன்!

எனக்குள்
என்னைப் பற்றியும்
என் தேவைகள் பற்றியும்
எந்தத் தெளிவான
கண்ணோட்டமும் இல்லை!
எதுக்கு வேலை மினக்கெட்டு?

கால வெள்ளம்
என்னைக் கரையொதுக்காமலே
கண்மூடித்தனமாக அடித்துச்
செல்கிறது.

இப்போதெல்லாம்
நீலக்குயிலின் வசந்தராகங்கள்
என் காதில் விழுவதே இல்லை!
என்ன சவத்துக்கு?

சவத்திலே எறிந்த பந்தாய்
திருப்பியடிக்கத் தெரியாதது
என் குறையாகவும் இருக்கலாம்!

பகீரத தவத்துக்கான
பலமோ
இந்திர அலைவுகளில் மனமோ
எனக்கு இல்லை!

அப்புறம் எதுக்கு?
சும்மா விடுங்களேன்-
என் பாட்டில்
இருந்துவிட்டுப்போகிறேன்!

ம.பா. மகாலிங்கசிவம்.

## தேன் கிண்ணம்

## பிரிவின் சுவை

எனக்குப் புரியாமல்
என் பெயரில்
நீ- கரைந்திருந்தது
அதிசயந்தான்!
...
கனவு காணும்,
உன் கடிதங்களுக்காகவே
என் கவிதைகள் விழித்துக்கிடந்தன!
...
இப்போதெல்லாம்-
தபாற்காரனின்
சலங்கை ஒலியெல்லாம்
என் சங்கீதத்தை ஓடித்துப்
போடுகிறது!
...
நீரில் மிதக்கும் கருவிழியில்
துலாம்பரமற்ற உன்
கையெழுத்துக்கள்
முற்றுப்புள்ளி தோறும்
உன் கண்ணீரின் எச்சமாக
ஈரலித்த காகிதத்தை
என் மனசின் வெப்பம்
உலர்த்திப் போடும்!
...
எனக்கும் அழத்தெரியும்
என்பதை,
நீ இல்லை என்றானபோதுதான்
தெரிந்து கொண்டேன்!
...
பாதி!
பிரிவின் சுவை தெரியுமா உனக்கு?
என் கண்களில் வழியும்
அந்த நீரைக் கேட்டுப் பாரேன்!

என். சுஹா, கள்-எலிய.

# இந்திய அணி உள்நாட்டுப் புலிகளா?

## கப்டன் அஸார் பேட்டி



**"சென்னை டெஸ்ட் வெற்றி குறித்து உங்கள் மனநிலை என்ன அஸார்?"**

"டாஸில் வென்றவுடனேயே நமது அணி சென்னையில் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. காரணம், சென்னை போன்ற இடங்களில் ஆட்டத்தின் நான்காவது இன்னிங்ஸில் விளையாடும் அணி, ஆடுவதற்கு ரொம்பவும் கஷ்டப்படும் என்பதுதான். (ஆஸி. அணி கேப்டன் மார்க் டெய்லரும் இதே கருத்தை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது) மேலும் பேட்டிங்கில் நல்ல துவக்கம் கொடுத்து, சித்துவும் மோங்கியாவும் விளையாடினார்கள். என்றாலும் அதை நான், சச்சின், கங்குலி அனைவரும் பயன்படுத்திக் கொண்டு விளையாடாததால் ஆஸி அணி முதல் இன்னிங்ஸில் அதிக ரன்கள் எடுத்து விட்டது. பிறகுதான் வார்னேவை counter attack செய்து விளையாடுவது என்று முடிவு செய்தோம். அதன்படி வார்னேவின் பந்து வீச்சில் ரன்களைக் குவித்தோம். வார்னேவும் சலிக்கவில்லை. பயங்கரமாகத் தமது லெக்ஸ் பின்னைப் போட்டார். இருந்தபோதிலும் நமது அணியின் அதிரடி ஆட்டம் காரணமாக வெற்றியைத் தக்க வைத்துக்கொண்டு விட்டோம்."

**"சென்னை வெற்றிக்கு இன்னார் தான் காரணம் என்று யாரையாவது குறிப்பிட்டுச் சொல்லுவீர்களா?"**

"சச்சினின் பேயாட்டம் காரணமாக ரன்கள் குவிந்தன என்றால், சித்துவும் டிராவிட்டும் பொறுப்பாக ஆடியதை எப்படிக் குறிப்பிடாமல் இருக்க முடியும்? ராஜு, கும்ளே, சௌகான், ஸ்ரீநாத் ஆகியோரின் பந்து வீச்சைத்தான் புறக்கணித்துவிட முடியுமா? அனைவரும்தான் இந்த வெற்றிக்குக் காரணம்."

**"அதெப்படி இந்த மூவர் (ராஜு, சௌகான், கும்ளே) கூட்டணி உங்கள் தலைமையின் கீழ் மட்டும் சிறப்பாகப் பந்து வீசுகிறது?"**

"அதான் எங்கள் வெற்றியின் இரகசியம். (சிரிக்கிறார்). அவர்களின் பிளஸ் மற்றும் மைனஸ் பாயிண்டுகள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அதேபோல் எனது தேவைகள் பற்றியும் அவர்கள் நன்றாக அறிவார்கள் என்பதால் எனக்கு ஏற்ப பந்து வீசுகிறார்கள். நானும் அவர்களில் யாரை எப்போது பந்து வீசச் செய்ய வேண்டும் என்பதை மிக நுணுக்கமாகத் தீர்மானித்துச் செயல்படுவதால் அவர்களின் பந்து வீச்சில் விக்கெட்டுக்கள் விழுகின்றன. இப்படி ஒருவருக்கொருவர் முழுமையாகப் புரிந்து கொண்டு ஆடுவதால்தான் எங்கள் வெற்றி தொடர்கிறது."

**"தேர்வுக் கமிட்டி நீங்கள் விரும்புகிற மாதிரியான அணியையே உங்களுக்குத் தருகிறதே! மற்றவர்களுக்கு இப்படித் தருவதாகத் தெரியவில்லையே?"**

"எந்தக் கேப்டனுக்கும் அவர் விருப்பப்படியான அணியைக் கொடுக்கிற பட்சத்திலேதான் வெற்றி கிடைக்கும். இல்லாவிட்டால் அணி தோற்கவே செய்யும். (பேச்சில் லேசான கோபம் தெரிகிறது.) அது சரி, நான் கேட்டபடி எந்த அணியை எப்போது கொடுத்தார்கள், என்று உங்களால் சொல்ல முடியுமா?"

**"முன்பு ராஜு ஓரங்கட்டப்பட்டிருந்தார். சச்சின் தலைமையில் அவர் ஆடவேயில்லை. இப்போது நீங்கள் கேப்டன். தேர்வுக் கமிட்டி உறுப்பினர் சிவலால் யாதவும் நீங்களும் ஐதராபாத் அணியைச் சேர்ந்தவர்கள். எனவே, ஐதராபாத் அணியிலிருந்து ராஜு, லட்சுமண் ஆகியோர் இப்போது சேர்க்கப்பட்டுள்ளனர். 'நான் கேட்டபடி எனது அணி தரப்படவில்லை' என்று முன்பு சச்சின் கூறியது அனைவரும் அறிந்த விஷயம்தானே!"**

"ஏன், சென்னையில் ராஜு நன்றாகப் பந்து வீசவில்லையா என்ன? (கோபமாகத் தொடர்கிறார்) இரண்டு இன்னிங்ஸிலும் ஆறு விக்கெட்டுக்கள் எடுத்தார். விசாகப் பட்டினத்தில் ஆஸி அணிக்கு எதிராக லட்சுமண் சதம் அடிக்கவில்லையா? அவர்கள் இருவருமே அவர்களின் சொந்தத் திறமையால்தான் அணியில் சேர்க்கப்பட்டார்களே தவிர, என்னுடைய அல்லது சிவலால் யாதவுடைய சிபாரிசால் அல்ல. மேலும் ராஜு, கும்ளே, சௌகான் காம்பினேஷன் என்பது சக்ஸஸ்ஃபுல் காம்பினேஷன். இத்தனை காலம் இவர்களைச் சரியாக உபயோகப்படுத்தாதது என் தவறு அல்ல. நான் முன்பே சொன்ன மாதிரி கேப்டன் விருப்பப்படி ஓர் அணி அமைந்தால்தான் அந்த அணியால் வெற்றி பெற முடியும். சச்சின் தலைமையில் தோற்றதற்கு இதுவே காரணம்."

**"சரி. உங்களையும் உங்கள் அணியையும் உள்நாட்டு புலிகள் என்று சொல்வது பற்றி?"**

"ஓர் அணி உள்ளூரிலேயே ஜெயிக்கவில்லையென்றால் எப்படி? இங்கே தோற்று, வெளிநாடுகளில் மட்டும் ஜெயித்தால் போதுமா? சமீபத்தில் டாக்காவில் பெற்ற வெற்றி, கனடாவில் பெற்ற வெற்றியெல்லாம் வெளிநாடுகளில் பெற்றவைதானே! இடம் எதுவானாலும் வெற்றிதான் லட்சியம். அதை அடைகிறோமா என்பதுதான் முக்கியம்."

**"கோபப்படாமல் இருந்தால் ஒரு கேள்வி..."**

"கேளுங்கள்!"

**"கேப்டன் பதவி வந்தாலே நீங்கள் 'டென்ஷன் பார்ட்டி'யாகி விடுகிறீர்களே, அது ஏன்?"**

"இப்போது நான் டென்ஷனாகவா இருக்கிறேன்? சரி, எப்போது நான் டென்ஷனானேன், நீங்கள்தான் சொல்லுங்களேன்?"

**"இரண்டாண்டுகளுக்கு முன்பு. பெங்களூரில் ஒரு புகைப்படக்காரரை அடித்தது... பீகாரில் ஒட்டு மொத்தமாகத் திட்டி பிறகு மன்னிப்புக் கேட்டது...."**

"சார், நான் பப்ளிக் ஃபிகர்தான், ஒப்புக்கொள்கிறேன். அதற்காக கிரிக்கெட் கிரவுண்டுக்கு வெளியே நானும் என் மனைவியும் (அந்தச் சமயத்தில் சங்கீதா பிஜ்லானி காதலிதான்; மனைவி அல்ல!) சேர்ந்து போவதைத் துரத்தித் துரத்திப் படமெடுத்தால் எப்படி? நான் எச்சரிக்கை செய்தும் கேட்கவில்லையே! எனக்குத் தெரியாமல் எனது தொப்பியை எடுத்துச் சென்றால் நான் சும்மா இருந்து விட முடியுமா? அது அதிர்ஷ்டமான தொப்பி. நான் அதை முதன் முதலில் போட்டுக்கொண்டு இந்தியாவுக்காக ஆடியபோது மூன்று சதம் அடித்த அதிர்ஷ்ட தொப்பி. அதை எடுத்தால் கோபம் வராதா? நானும் கோபதாபங்களுக்கு உட்பட்ட மனிதன் தானே!"

நன்றி: 'கல்கி'

## இந்த வாரம் உங்கள் பலன்

(12.04.1998 தொடக்கம் 18.04.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன், சனி. |
| மேடம் | - செவ்வாய். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - வியாழன், வெள்ளி, கேது. |

சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

14.04.98ல், மேடத்தில் சூரியன் பிரவேசம் புதுவருடப்பிறப்பு

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை (முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- வீண் முயற்சி, பலவித கஷ்டம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- கடன் சுமை, மனப் பயம். | பகல் | 12 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவப் பேறு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- இனசனப் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பிரயாண சுகம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், இனசனப் பகை. | பகல் | 11 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவப் பேறு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, புதிய முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக் கலக்கம், வெளியிட வாழ்க்கை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், வெளியிடப் பயணம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், தொழில் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண்துயர், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| சனி- பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சித் தடை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- செய்தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| புதன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக் கிலேசம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண் துயர், வெளியிடப் பயணம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சித் தடை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், காரியத் தடை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனற்ற செலவு, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், அந்நியர் பகை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4



படிப்பகம்

www.padippakam.com

# உற்சாக உபசரிப்பு

**வி**ருந்தாளிகள் வருவதை முன்னரே கடிதம் அல்லது தொலைபேசி மூலம் தெரிவித்தால், "உங்கள் வருகை மிகவும் சந்தோசம்; என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்!"



என்றும் நிச்சயம் தெரிவிக்க வேண்டும்.

விருந்தினர் வரும் நேரத்தில் நிச்சயம் அவர்களை வரவேற்க வீட்டில் இருக்க வேண்டும். வெளியிடத்திற்குச் செல்வதாக இருந்தால் தவிர்த்து விடவேண்டும்.

விருந்தினரைச் சிரித்த முகத்துடன் வரவேற்று இருக்கையில் உட்காரச் சொல்ல வேண்டும்.

விருந்தினருக்கு முதலில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்.

வந்திருக்கும் விருந்தினரின் நலனையும் சுற்றத்தார் நலனையும் விசாரித்து விட்டு சிறிது நேரம் அவர்களுடன் அமர்ந்து பேச வேண்டும்.

விருந்தினருக்கு உணவு பரிமாறும் போது அவர்கள் போதும் போதும் என்று சொல்லும் வரை அன்பாகப் பரிமாறவேண்டும்.

விருந்தினர் முன்பு எக்காரணத்தைக் கொண்டும்–நமக்கு எத்தனை பிரச்சனை இருந்தாலும்–அதை முகத்தில் காட்டக்கூடாது.

நம் வீட்டுக் கஷ்டங்களை விருந்தினரிடம் கூறி அவர்கள் மனதையும் கஷ்டப்படுத்தக் கூடாது. நம் வருகை அவர்களுக்கு சங்கடம் என்று வருந்த நேரிடும்.

உங்கள் ஊரில் உள்ள பிரபலமான இடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று அவற்றின் பெருமைகளைச் சொல்ல வேண்டும்.

விருந்தினர்கள் உங்கள் வீட்டிலேயே இரவு தங்கினால் தலையணை உறை மெத்தை உறைகளை மாற்றிக் கொடுக்க வேண்டும். இரவில் குடிப்பதற்கென தண்ணீர் எடுத்து வைக்க வேண்டும்.

இவ்வாறு நடந்து கொள்வதால் விருந்தினரிடையே நல்ல மதிப்பைப் பெறுவீர்கள். அவர்களும் மறுமுறை ஆர்வத்துடன் உங்களைத் தேடி வருவார்கள். ■

# அடிக்கடி கிழங்கு சதைப்பிடிப்பு



- ❀ உணவில் உருளைக் கிழங்கினை அடிக்கடி சேர்த்தால் உடல் சதைப்பிடிப்பு அதிகமாகும்.
- ❀ தூதுவளை இலைகளை அடிக்கடி சாப்பிட்டால் நினைவாற்றல் அதிகரிக்கும்.
- ❀ கருணைக் கிழங்கை அடிக்கடி உண்பதால் மூலவியாதி குணமாகும்.
- ❀ வாரம் ஓரிருமுறை வாழைத்தண்டை சமைத்து உண்டால் வயிற்றில் உள்ள அழுக்குகள் அகலும்.
- ❀ வேப்பம் பூ இரசம், துவையல் செய்து உண்டால் பித்தம் தணியும். உடல் வெப்பம் அகலும்.
- ❀ உணவில் அடிக்கடி பாகற்காய் சேர்த்து வந்தால் வயிற்றுப் பூச்சிகள் நீங்கும்.
- ❀ முருங்கைப் பட்டைச் சாற்றைக் கொண்டு பெருங்காயத்தை அரைத்து வாயுப் பிடிப்பு உள்ள பகுதிகளில் தடவினால் வாய்வு குணமாகும்.
- ❀ வல்லாரையை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நினைவாற்றல் பெருகும்.

# சின்னச் சின்ன மருத்துவ யோசனைகள்

**கண்சோர்வு போக...**

பன்னீரில் பஞ்சை நனைத்துக் கண்களை மூடிக் கொண்டு கண் இமைகளின் மீது அழுத்தி வந்தால் சோர்வடைந்த கண்கள் புத்துணர்ச்சி பெறும்.

**பித்த வெடிப்பு நீங்க...**

கடுக்காயை எடுத்து சொரசொரப்பான தரையில் தேய்த்து ஆமணக்கு எண்ணெய். கொஞ்சம், மஞ்சள் தூள் கொஞ்சம் கலந்து இரவில் படுக்கச் செல்லுமுன் கால்களில் தடவி வந்தால் பித்த வெடிப்புபோய்விடும்.



**வயிற்று வலி தீர...**

கொள்ளை வறுத்து ஊற வைத்து பிறகு அந்த நீரைவடிகட்டி அதில் கொஞ்சம் பெருங்காயம் கலந்து குடித்து வந்தால் மாதவிலக்கின்போது உண்டாகும் வலி குணமாகும்.

**வாய்ப்புண் குணமாக...**

பச்சைப் பயிறை ஊற வைத்து முளை வந்ததும் காலை எழும்பியதும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் குணமாகி விடும். □

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 30

புவனா

**1991ம்** ஆண்டு வளைகுடாப் போர் மூண்டது. பிரிட்டிஷ் துருப்புக்களும் போருக்குச் சென்றன.



டயானாவின் நண்பரான ஜேம்ஸ் ஹெவிற்றும் போருக்கு செல்ல வேண்டி இருந்தது. ஹெவிற்றை பிரியப் போவதை நினைத்து டயானா கவலைப்பட்டார்.

டயானாவிடம் பிரியா விடை பெறவிரும்பினார் ஹெவிற். இருவரும் ஜேம்ஸ் ஹெவிற் வீட்டில் சந்தித்தனர்.

அப்போது டயானாவும், ஹெவிற்றும் மட்டுமே தனியாக இருந்தனர். ஹெவிற்றின் பெற்றோர் வெளியே சென்றிருந்தனர்.

டயானாவை கட்டியணைத்து முத்தமழை பொழிந்தார் ஹெவிற். வழமையைவிட அதிகமாகவே அன்று உரிமையும், அதிக சுதந்திரமும் எடுத்துக் கொண்டார் ஹெவிற்.

ஹெவிற்றை பிரிந்திருக்கும் நாட்களை நினைத்து கவலையுற்றிருந்த டயானாவும், வழக்கத்தைவிட சற்றுத் தாராளமாகவே ஹெவிற்றை அனுமதித்தார்.

அதனைச் சாதகமாக எடுத்துக் கொண்ட ஹெவிற், "நாம் ஒருவரை ஒருவர் முழுதாக அறிந்தால் என்ன?" என்று தாபத்துடன் வினவினார்.

## டயானா எழுதிய கடிதங்கள்

அவர் எங்கே வருகிறார் என்பது டயானா அறியாததல்ல. ஆனால் டயானா அதற்கு மட்டும் அனுமதிக்கவில்லை.

டயானா கண்ணீருடன் ஹெவிற்றை முத்தமிட்டு பிரிந்தார். ஹெவிற் மட்டும் நழுவிப் போகும் அருமையான சந்தர்ப்பங்களை நினைத்து சலிப்புற்றபடி சென்றார்.

### காதல் துரோகி

வளைகுடாப் போர் முனைக்கு ஹெவிற் சென்ற நாளில் இருந்தே டயானாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

போர் முனைக்கு கடிதங்கள் எழுதினார். எல்லாமே காதல் ரசம் சொட்டும் கடிதங்கள்.

பிரிவைத் தாங்கிக் கொள்ளும் சக்தி தன்னிடம் இல்லை என்று சில கடிதங்களில் டயானா வேதனையைக் கொட்டியிருந்தார்.

டயானா தனக்கு எழுதிய கடிதங்களை ஹெவிற் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார்.

டயானாவின் ஒவ்வொரு கடிதமும் எதிர்காலத்தில் பொன் முட்டையிடும் வாத்து என்று அப்போதே ஹெவிற்றுக்கு தெரிந்திருந்தது.

காதலை வியாபாரமாக்க நினைத்த ஹெவிற் ஒரு காதல் துரோகி.

ஹெவிற்றின் சுயரூபம் காலம் தாழ்த்தித்தான் டயானாவுக்குத் தெரிந்தது.

தன் காதலை புனிதமாக எண்ணிப் போற்றும் ஒருவராகவே ஹெவிற்றை நினைத்திருந்தார் இளவரசி டயானா.

அதனால்தான் கடிதங்களில் தன் மன உணர்வுகளை ஒளிவுமறைவு இன்றி கொட்டித் தீர்த்தார்.

*'என் அன்பரே! நாம் இறுதியாகச் சந்தித்தபோது நீங்கள் தந்த முத்தத்தின் ஈரம் இன்னமும் இனிக்கிறது.*

*உங்கள் கைகள்–அப்பப்பா அந்தக் கைகளுக்குத்தான் என்ன ஒரு பலம்! பரவிய போது எனக்குள் ஏற்பட்ட உணர்ச்சிகளை எப்படி விபரிப்பேன். ஹெவிற்.. எப்போது திரும்புகிறீர்கள்?"*

இவ்வாறுதான் ஒவ்வொரு கடிதத்திலும் காதலும், காமமும் கைகோர்த்து வாக்கியங்களாக அணிவகுத்தன.

### சாள்ஸ் திட்டம்

இளவரசர் சாள்ஸ்–டயானா பிரச்சனையில் பிரிட்டிஷ் மக்களில் பலர் டயானா சார்பாகவே பேசினர்.

'கமீலாவுடன் உறவு வைத்திருக்கும் சாள்ஸ், அதன் மூலம் இளவரசிக்குத் துரோகம் செய்து விட்டார்.'

'கமீலாவை கழற்றிவிடவேண்டும்; டயானாவை சந்தோசமாக வைத்திருக்க வேண்டும்!' என்றே பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் அபிப்பிராயப்பட்டனர்.

டயானாவுக்கு அனுதாபம் ஏற்படுவதை சாள்ஸ்சும், அவரது கூட்டாளிகளும் விரும்பவில்லை.

டயானாவுக்கு எவ்வாறு கெட்ட பெயர் ஏற்படுத்தலாம் என்று அவர்கள் திட்டமிட்டனர்.

வளைகுடா யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.



டயானாவுக்கும் ஹெவிற்றுக்கும் இடையே உள்ள நெருக்கம் சாள்ஸ் அறிந்ததே.

ஹெவிற் போர்முனைக்குச் சென்ற பின்னர் டயானா 'மூட் அவுட்' ஆகியிருப்பதையும் சாள்ஸ் அவதானித்திருந்தார்.

அந்தச் சமயத்தில்தான் டயானாவின் 30வது பிறந்தநாள் வந்தது.

தன் காதலரைப் பிரிந்து வாட்டமுற்றுள்ள டயானா, பிறந்தநாள் கொண்டாட விரும்பப் போவதில்லை என்பது சாள்ஸ்சுக்குத் தெரியும்.

அதுதான் டயானாவை இக்கட்டில் மாட்டிவைக்க தகுந்த சந்தர்ப்பம் என்று கருதினார் இளவரசர்.

இளவரசி டயானாவின் 30வது பிறந்தநாள் கோலாகலமாகக் கொண்டாடப்படும் என்று சாள்ஸ் வட்டாரம் அறிவித்தது.

டயானாவிடம் அதனைத் தெரிவித்தபோது, கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார்.

"முடியாது, வளைகுடாப் போரில் பிரிட்டிஷ் துருப்புக்கள் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் எனக்கு பிறந்த நாள் கொண்டாட்டமா? நன்றாக இருக்கிறது, உங்கள் யோசனை– நான் ஒரு போதும் இதற்கு சம்மதிக்கமாட்டேன்!" என்று அடித்துச் சொல்லிவிட்டார் டயானா.

அந்தப் பதிலைத்தான் சாள்ஸ்சின் நண்பர்களும் எதிர்பார்த்தனர். டயானாவின் முடிவால் கவலையுற்றவர்கள்போல வெளியே காட்டிக் கொண்டாலும், உள்ளூர சந்தோசப்பட்டனர்.

முன்னரே திட்டமிட்டபடி கதை கட்டி விடப்பட்டது.

"இளவரசர் சாள்ஸ் தன் மனைவி இளவரசி டயானாவின் பிறந்தநாள் விழாவை கொண்டாட விரும்பினார். ஆனால் டயானா அதனை விரும்பவில்லை. உதாசீனம் செய்து விட்டார்" என்று கதை பரப்பப்பட்டது.

### எதிர்பாராத திருப்பம்

டயானாவின் புகழையும், டயானாவிற்கு இருந்த அனுதாபத்தையும் குலைக்க திட்டமிட்டு சாள்ஸ் வட்டாரம் செய்த பிரசாரம் எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தியது.

"பிரிட்டிஷ் துருப்புக்கள் வளைகுடாப் போர்முனையில் தினமும் இறந்துகொண்டிருக்கையில் இளவரசி எப்படி பிறந்த நாள் கொண்டாட முடியும்? இளவரசி செய்த முடிவுதான் சரியானது!" என்று சில பத்திரிகைகள் எழுதின.

அக்கருத்து மக்களால் ஏற்கப்பட்டதுடன், டயானாவின் பொறுப்புணர்ச்சி, நாட்டுப்பற்று என்றெல்லாம் பாராட்டவும் பட்டது.

இதனையடுத்து நடைபெற்ற கருத்துக் கணிப்பு ஒன்றும் பிரிட்டிஷ் அரச குடும்பத்தாரினதும், இளவரசர் சாள்ஸினதும் முகத்தில் கரிபூசுவது போல அமைந்திருந்தது.

'பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் மக்களிடம் அதிக செல்வாக்குள்ளவர் யார்?' என்பதுதான் கருத்துக் கணிப்பு.

கருத்துக் கணிப்பின் ஏகோபித்த முடிவு– 'டயானா'.

'டெய்லி மெயில்' பத்திரிகை மட்டும் டயானா–சாள்ஸ்சின் விருப்பத்தை உதாசீனம் செய்ததை பெரிதுபடுத்தியிருந்தது.

எனினும், பொதுவாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் இளவரசர் சாள்ஸ்மீதே குற்றம் சாட்டின.

'டயானாவின் புகழைக் கெடுக்க தாம் போட்ட திட்டம், டயானாவின் புகழை மேலும் ஒருபடி வளர்த்துவிட்டதே!' என்று கவலைப்பட்டார் இளவரசர் சாள்ஸ்.

மகாராணியும் இளவரசர் சாள்ஸ்சை அழைத்து, டயானாவுடன் அனுசரித்துப்போக முயற்சிக்குமாறு கூறினார்.

டயானாவின் பக்கம் நியாயம் இருப்பதாக பிரிட்டிஷ் மக்கள் கருதுவதாலும், இளவரசர் சாள்ஸ்சை பத்திரிகைக்கும், மக்களின் அபிப்பிராயங்களும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதாலும் டயானாவை விவாகரத்து செய்வதும் புத்திசாலித்தனமாக இருக்காது என்பது மகாராணியின் எண்ணம்.

அதனால் மறுபடி வெளியுலகை ஏமாற்றும் விதமான 'நல்ல கணவன்' வேஷம் போட ஆரம்பித்தார் சாள்ஸ்.

தான் மட்டுமே தனியாக கலந்துகொள்ளத் தீர்மானித்த நிகழ்ச்சிகளை டயானாவும் கலந்து கொள்ளத்தக்கதாக மாற்றி அமைத்தார்.



ஜேம்ஸ் ஹெவிற்

டயானாவும் வேண்டா வெறுப்பாக சாள்ஸ்சுடன் கலந்து கொண்டார்.

இளவரசர் சாள்ஸ்சுடன் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மறுத்தால், டயானாதான் குற்றவாளி என்று நிரூபிப்பதுதான் அரச குடும்பத்தின் திட்டம், என்று டயானாவின் சிநேகிதிகள் எச்சரித்திருந்தனர்.

அதனால் டயானாவும் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்பவர் போல நிகழ்ச்சிகளில் சாள்ஸ்சுடன் கலந்து கொண்டார்.

இத்தகைய போலித்தனமான ஒட்டு தலைக்கூட கமீலாவால் பொறுக்க முடியவில்லை.

கமீலா செய்த சதிகளும், டயானா மகாராணிபற்றி அறிந்த அதிர்ச்சிகரமான இரகசியம் ஒன்றும் அடுத்த வாரம்.

(அடுத்த வாரமும் வரும்)


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** DM

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-04-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? அட்டன் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ **திருமதி கே. கோமதி, நு/ வெலிங்டன் த.வி. அட்டன்.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com






சற்றுன் முகஞ் சிவந்தால்-
மனது
சஞ்சலமாகுதடி!
நெற்றி சுருங்கக்கண்டால்-
எனக்கு
நெஞ்சம் பதைக்குதடி!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## ஓநாயின் ஏமாற்றம்



ஒரு காட்டில் ஓநாய் ஒன்று வசித்து வந்தது. அது நன்றாகக் கொழுத்திருந்தது.

ஒருநாள் அந்த ஓநாய் பசியோடு உணவு தேடி அலைந்தது. அது நன்றாகக் கொழுத்திருந்ததால் அதனால் விரைவாக ஓடமுடியவில்லை. முயல், மான்களைத் தனது பெரிய உடலால் துரத்திப்பிடிக்க முடியாமல் இருந்தது.

மாலையாகியும் அதற்கு எந்த இரையும் மாட்டவில்லை. 'பக்கத்தில் இருக்கும் கிராமத்திற்குச் சென்றால், அங்கே கோழி அல்லது ஆட்டுக்குட்டிகளைப் பிடித்துத் தின்னலாம்' என்று எண்ணி கிராமத்தை நோக்கிப் புறப்பட்டது.

கிராமத்திற்குள் வந்து சேர்ந்த ஓநாய், அடிமேல் அடி வைத்து ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் தனது பார்வையைச் செலுத்தியது.

அப்போது, ஒரு வீட்டிற்குள் இருந்து ஒரு சிறு பையன் அழுது கொண்டிருந்தான். அந்தப் பையனின் பாட்டி அவனை எப்படியெல்லாமோ சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார். அவன் அழுகையை நிறுத்தாமல் தொடர்ந்து அழுது கொண்டிருந்தான்.

உடனே பாட்டி, பையனின் அழுகையை நிறுத்துவதற்காக பொய்யாக,

"நீ அழுகையை நிறுத்தாவிட்டால் நான் உன்னை ஓநாயிடம் தூக்கிப்போட்டு விடுவேன்!" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

இதை வெளியே இருந்து கேட்ட ஓநாய், மேற்கொண்டு அவ்விடத்தை விட்டு நகராமல் வெளியே காத்திருந்தது.

'கிழவி பையனை வெளியே தூக்கிப் போடும்போது, அப்படியே எடுத்துச் சென்று விடலாம்' என்று அது வெளியே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

வெகுநேரமாகி விட்டது. ஓநாய் காத்துக் கொண்டிருந்தது. திடீரென்று அந்த வீட்டிற்குள்ளிருந்து பாட்டியின் குரல் மறுபடி கேட்டது.

"என் கண்ணே! அழாதே. உன்னை ஓநாயிடம் போடமாட்டேன். அந்தக் கிழட்டு ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். அதை அடித்தே கொன்று விடுவோம்!" என்று சொன்னார்.

இதை வெளியே இருந்து கேட்ட ஓநாய், 'இவ்வளவு நேரமும் கிழவியின் பேச்சை நம்பி ஏமாந்து விட்டேனே' என்று நினைத்தது. அப்போது எங்கோ நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. நாய்கள் தன்னைக் கண்டால் கடித்துக் குதறி விடும் என்று எண்ணி பசியுடன் கிராமத்தை விட்டு ஓடியது ஓநாய்.

*பிறரை **நம்பி** எதற்காகவும் நாம் காத்திருக்கக்கூடாது. நாமே நமது முயற்சியால் எதையும் பெற வேண்டும். இல்லாவிட்டால் ஓநாயைப் **போல்** ஏமாந்துபோக வேண்டித்தான் வரும்.*

## அதிசயம்-ஆனால் உண்மை!



**சிலுவையில் இயேசு:**
←ஒஸ்ரியாவில் உள்ள டைரோல் என்ற இடத்தில் ஒரு பட்டுப்போன மரம் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது போல் இயற்கையாகக் காணப்பட்டது. இந்த 6 அடி உயரமுள்ள சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் போல் உள்ள இயற்கையின் படைப்பு அந்த இடத்து மக்களால் வழிபடப்பட்டு வருகிறது.




**குழல் வீடு:** ↑
ஸ்பைரோ பிஸ் எனப்படும் ஒரு வகைப் புழு களிமண்ணால் குழல் போன்ற உருவில் வீடு கட்டும். இது பார்ப்பதற்கு நத்தையின் ஓடுபோல் இருக்கும்.

↓ **நாணயம்:** ஜூலியஸ் சீஸரின் கொலையை நினைவூட்டும் வகையில் கி.மு 43ல் கிரேக்க நாட்டில் வெளியிடப்பட்ட இந்த நாணயத்தில் கொலை நடந்த மார்ச் 15ம் நாளையும் இரண்டு கடாரி (ஆயுதம்) களையும் பொறித்துள்ளனர்.



**'டெட்லீவ்' வண்ணத்துப்பூசி:**
அழகிய வர்ணங்களையுடைய இந்த ↓ வண்ணத்துப் பூச்சியின் இரண்டு இறகுகளையும் ஒன்றோடொன்று சேர்த்து விட்டால் இலை போலத் தோற்றமளிக்கும்.



## வாரம் ஒரு நாடு

### ஈக்வடோரியல் கினியா

தலைநகர்- மலோபா
பரப்பு- 28,051 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 4 இலட்சம்
மொழி- ஸ்பானிஷ், ஃபாங்க், புபி, பிட்கின் மற்றும் ஆங்கிலம்
எழுத்தறிவு- 53%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- ஃபிராங்க்
தனி நபர் வருமானம்- 420 டொலர்.

**அமைவிடம்:**
முன்னர் ஸ்பானிஷ் கினியா என்றழைக்கப்பட்ட ஈக்வடோரியல் கினியா, ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரம் அமைந்துள்ளது.

**வரலாறு:**
ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்த ஈக்வடோரியல் கினியா, 1968ம் ஆண்டு சுதந்திரமடைந்தது. 1975ல் ஜனாதிபதியாகப்



பதவியேற்ற மகியாஸ் நிகுமோ நாட்டின் பெயரை மாற்றினார். 1979ம் மகியாஸ் நிகுமோ அவரது மருமகனாலேயே பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

**பொருளாதாரம்:**
கோப்பி, கொக்கோ பெருமளவில் பயிரிடப்படுகின்றன. தொழிற்துறையில் குறிப்பிடும்படியான வளர்ச்சி இல்லை. வனவளம் மிகுந்த நாடு.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.04.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 240
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 238

பரிசுக்குரியவர்:
பேரின்பராசா ரேகாசலன்,
மட்/உதயபுரம் தமிழ் வித்தியாலயம், கல்லாறு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஆன்தர்ஷினி பிரான்சிஸ், இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. | த. தவக்குமார், மகா வித்தியாலயம், மண்டூர். |
| வை. சியாட், அநு/முஸ்லிம் மகா வித்தியாலயம், நேகம. | எம்.எஸ்.பாத்திமா ஸஹானி, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம். |
| செல்வி சுபதர்ஷனி, பரி சாந்த கிளேயர் மகளிர் மகா வித்., கொழு.-06. | செல்வன் எஸ். சுதாகர், நஸ்ரியா முஸ்லிம் மத்திய கல்லூரி, சிலாபம். |
| ரி. ஷைலஜா, பெண்கள் கல்லூரி, இறம்பைக்குளம், வவுனியா. | சி. சரவணன், இந்து மத்திய கல்லூரி, இராகலை. |
| ச.சர்வவிக்னோபன், உவெஸ்லி கல்லூரி, கொழும்பு-09. | கு. பகீரதன், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |

## ஈஸ்டர் தீவு

**1722ம்** ஆண்டு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளான ஈஸ்டர் திருநாளன்று ரோஜிவின் என்னும் டச்சுக்காரர் கண்டுபிடித்த தீவுக்குப் பெயர் ஈஸ்டர் தீவு. ஈஸ்டர் திருநாளில் கண்டுபிடித்ததால் அத்தீவுக்கு ஈஸ்டர் தீவு என்ற பெயரைச் சூட்டினார்.

அந்தத் தீவின் கரையோரத்தில் சிறியதும் பெரியதுமாகப் பல கற்சிலைகள் காணப்பட்டன. நீண்ட காதுகளை உடைய 230 சிலைகள் இருந்தன. அச்சிலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு திசைகளில் திரும்பிக் கொண்டிருந்தன.

ஒவ்வொரு சிலையும் சுமார் 50 தொன் எடையுள்ளதாக இருந்தன.

## நெருப்பு

**நெ**ருப்பின் உண்மைத் தன்மையை ஆராய்ச்சிபூர்வமாகக் கண்டறிந்து முதலில் கூறியவர் ஃபிரெஞ்சு விஞ்ஞானி அன்டன் லாவோசியர். எரியும் பொருளும் ஒட்சிசனும் சேர்வதால் ஏற்படும் இரசாயனக் கலப்பே நெருப்பு என்பதை இவர் விஞ்ஞானபூர்வமாக வெளிப்படுத்தினார்.



நெருப்பு எரியும்போது பலமாகக் காற்றடித்தால், கொழுந்து விட்டு எரிகிறது. அதற்குக் காரணம் ஒட்சிசன் எரியும் பொருளுக்கு அதிகம் கிடைப்பதாகும். எரியும் பொருளை மூடினால் அது அணைந்து விடும். காரணம் எரியும் நெருப்புக்கு ஒட்சிசன் கிடைக்காததே.

நெருப்பு மூலம் வெளியாகும் வெப்பமானது ஒரு ஆற்றல் மூலம் ஆகும். மோட்டார் இயந்திரத்தில் உள்ள பெட்ரோல் அல்லது டீசல் காற்றோடு கலந்து எரியும்போது உண்டாகும் வெப்ப விசையே இயந்திரங்களை இயக்குகிறது.

இதுபோன்றே எரியும் நெருப்பில் இருந்து பெறும் அனலைக் கொண்டு அனல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

## விடுகதைகளும் விடைகளும்

1. இலையில்லா மரம் அங்குமிங்கும் ஓடுது. அது என்ன?
2. சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம். அது என்ன?
3. அழ வைத்தாலும் அவனால் ஆரோக்கியம் அதிகம். அவன் யார்?
4. நான் பேசியதை எனக்கே திருப்பிச் சொல்வான். அவன் யார்?
5. அருகருகே இருந்தாலும் ஆயுள்வரை சேர்வதில்லை. அது என்ன?
6. உயிரில்லாதவன் ஊர் முழுக்கப் பறக்கிறான். அவன் யார்?
7. ஆயிரம் பேர் கூடி இருந்தாலும் அவன் தனியே தெரிவான். அவன் யார்?
8. வீட்டுக்கு வந்த விருந்தாளி வாசலிலேயே நின்று விடுவார். அவர் யார்?

### விடைகள்

1. பம்பரம் 2. நுளம்பு
3. வெங்காயம் 4. எதிரொலி
5. தண்டவாளம் 6. பட்டம்
7. சந்திரன் 8. செருப்பு.

தொகுப்பு: எஸ். கயல்விழி

## எப்படி வந்தது?

**இ**ன்று பத்திரிகைகளில் வரும் 'காட்டூன்' (கேலிச் சித்திரம்)களுக்கு அப்பெயர் எப்படி வந்தது என்று தெரியுமா?



இத்தாலி மொழியில், 'காட்டூன்' என்பது கெட்டியான காகிதத்தைக் குறிக்கும். இது மாதிரியான காகிதங்களில்தான் அப்போது அங்கே ஓவியங்கள் வரைவார்கள்.

1921ம் ஆண்டு பிரிட்டனின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தை அலங்கரிக்க ஓவியர்களிடையே போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் பல ஓவியங்கள் நிராகரிக்கப்பட்டன.


கேலிச்சித்திரங்கள் போன்று இருந்த நிராகரிக்கப்பட்ட ஓவியங்களை 'பஞ்ச்' என்ற பத்திரிகை ஒன்று, 'பஞ்ச் காட்டூன்' என்ற தலைப்பில் ஒவ்வொன்றாகப் பிரசுரித்தது. காலப்போக்கில் இவ்வித கேலிச்சித்திரங்களுக்கு 'காட்டூன்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.

## பசன்ஜி



**பசன்ஜி** என்பது மத்திய ஆபிரிக்காவில் உள்ள சிறிய வேட்டை நாய் இனம் ஆகும். இந்த நாய்களால் குரைக்க முடியாது. ஆனால் இவை போடும் சத்தம் பயங்கரமாக இருக்கும்.

## தொட்டால் நடுங்கி மரம்



**தொ**ட்டாச்சுருங்கி என்று ஒரு செடி பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தச் செடியின் இலையைத் தொட்டால் போதும், உடனே சுருங்கி விடும்.

தொட்டால் நடுங்கி மரம் என்னும் ஒரு மரம், இந்தியாவில் உள்ள காஷ்மீர் மாநிலத்தில் 200 வருடங்களுக்கு முன்பு இருந்திருக்கிறது. இம்மரத்தின் பெயர் செண்டுகுஜ்.

இந்த மரத்தின் ஒரு சிறிய கிளையை லேசாகக் குலுக்கினால் கூட அடி மரத்தில் இருந்து உச்சாணிக் கிளைவரை மரம் முழுவதும் நடுங்கும்.



படிப்பகம்

www.padippakam.com

ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:

# நந்தினி 440 வோல்ட்

## திக் திக் திக் 06

“உன்னோட அங்கிள் பாண்டுரங்கனுக்குப் ஃபோன் பண்ணி தகவல் சொல்லனும்ன்னு சொல்லிட்டிருந்தியே...!”

“அவர் கூ[illegible]சிட்டேனே!”

“[illegible] லஞ்சை அவர் வீட்ல முடிச்சிக்கிறோம்.”

“ஆமா...”

“கிருஷ்ணன்...!”

காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் கிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான். “என்ன ஸார்...?”

“எங்களை கோயமுத்தூர்ல ஜெயில் சூப்ரிண்டெண்ட் வீட்ல ட்ராப் பண்ணிட்டு நீ உடனே எஸ்டேட்டுக்குத் திரும்பிப் போயிடு. கார் அங்கே வேண்டியிருக்கும்....”

“சரி ஸார்....”

கார் மலைப் பாதையில் ‘எஸ்’ போட்டுக் கொண்டு இறங்க ஆரம்பித்தது. தொலைவில் ஆனைமலைச் சிகரங்கள் அடர்த்தியான நீலநிறத்தில் தெரிய-மேகப் பஞ்சுகள் எதில் போய் ஒட்டிக் கொள்ளலாம், என்று யோசித்து அலைந்து கொண்டிருந்தன. சம்ப மழையை எதிர் பார்த்து அது பெய்யாமல் போகவே-மலையின் இரு மருங்கிலும் இருந்த மரங்கள் கொஞ்சம் சோர்வாய்த் தெரிந்தன. புல் வர்க்கங்கள் காய்ந்து போய்-மலைப்பாதையின் இரண்டு பக்கமும் கூடவே வந்தன.

“என்னங்க...!”

“ம்...”

“ரெண்டு மணி ஃப்ளைட்ல- புறப்பட்டா பாம்பேக்கு எத்தனை மணிக்கு போய்ச் சேருவோம்...?”

“சாயந்தரம் அஞ்சு மணி, ஆறு மணி ஆயிடும்...”

“அப்போ நாளைக்குத்தான் பம்பாயைச் சுத்தி பார்க்கப் போறோம்...”

“ஆமா...”

“மொதல்ல எங்கே போறோம்....?”

“எலிஃபெண்டா கேவ்ஸ்...”

“பம்பாயிலிருந்து ரொம்ப பக்கமா...?”

“தூரம். போட்ல தான் போகணும்...”

“போட்டா...? அப்போ அது ஆத்தைத் தாண்டியா இருக்கு?”

“ஆறு இல்ல. கடல்.... கேட்வே ஆஃப் இண்டியாவிலிருந்து கடல்ல பத்து கிலோ மீட்டர் தூரம் உள்ளே போகணும்...”

“அம்மாடி..... கடலா....? நான் மாட்டேன்....” உடம்பைச் சிலிர்த்துக் கண்களை மூடித் தலையை உதறிக் கொண்டாள் நந்தினி.

“இந்தப் பயம்தானே வேண்டாங்கிறது...?”

“ஊஹூம்... நான் மாட்டேன்.... பம்பாய்ல ரோடு மார்க்கமா என்னென்ன பார்க்க முடியுமோ, அதை மட்டும் பார்க்கலாம். சமுத்திரத்துல போய்ப் பார்க்கிற வேலையே வேண்டாம்....”

பாரி தலையில் நோகாமல் அடித்துக் கொண்டான்.

“இந்த பயம் உன்னை விட்டு எப்போ போகுமோ...?”

கார் வேகமாய்க் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. வளைவுகளில் திரும்பும் போது ‘க்க்ர்ர்ர் க்க்ர்ர்ர்’ என்று டயர்களைத் தேய்த்தது.

நந்தினி நெற்றி வியர்த்தாள்.

“கிருஷ்ணன்! காரைக் கொஞ்சம் மெதுவாவே ஓட்டு....”

“சரிம்மா...”

காரை நிதானத்துக்குக் கொண்டு வந்தான் கிருஷ்ணன்.

●●□□

அல்சேஷனின் உடம்பு இன்னமும் துடித்துக்கொண்டிருக்க- இரத்தம் சொட்டும் அரிவாளோடும் கண்களில் ஏராளமான உக்கிரத்தோடும் பெரிய நாய்க்கரைப் பார்த்துக்கொண்டே முன்னேறினான் வீரபத்ரன்.

பெரிய நாய்க்கரின் முகம் இருட்டித்துப் போயிருந்தது. சிரமமாய் எச்சில் விழுங்கி மெல்ல பின்வாங்கி- திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே சரக்கென்று ஓடி-

கதவைச் சாத்த முயல-

வீரபத்ரன் ஜாக்கிரதையாகக் குபீரென்று தீப்பிடித்த மாதிரி பாய்ந்து- கதவு மூடப்பட்டுக் கொண்டிருந்த அந்த இடைவெளியில் தன் வலுவான புஜத்தைக் கொடுத்து நெம்ப, கதவு அவனுடைய ஆவேசத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் படீரெனத் திறந்து கொள்ள, நாய்க்கர் பங்களாவின் பரந்த ஹாலுக்குள் அலைய குலைய ஓடினார்.

வீரபத்ரன் நொறுங்கிப் போகிற அளவுக்குப் பற்களைக் கடித்தான். “டேய்ய்ய்....” கத்திக் கொண்ட தபதபவென்று பின்னால் துரத்திக்கொண்டு ஓடினான். எதிரே குறுக்கிட்ட நாற்காலிகளையும், சோபாக்களையும் உதைத்து நகர்த்தி விட்டு- நாயின் இரத்தம் தோய்ந்த அரிவாளை உயர்த்திக் கொண்டு நாய்க்கரை சமீபித்தான்.

எட்டிப் பிடித்தான்.

ஒரு மில்லிமீட்டர் நாய்க்கர் முந்திக் கொள்ளவே- அவருடைய ஜிப்பா மட்டும் வீரபத்ரனின் கைக்கு சிக்கி டர்ர்ர்ரென்றது. கிழிந்து தொங்கும் ஜிப்பாவோடு- ஹாலுக்கு வலது கைப் பக்கமாய்- வளைந்து போகும் மாடிப்படிகளில் ‘தட்தட்’ என்று மேலே ஏறி ஓடினார் நாய்க்கர்.

“கிழட்டு நாயே! ஓடுடா! உன்னால் எவ்வளவு தூரம்தான் ஓட முடியும்...? உன்னோட தலையையும்.... உம் மச்சினனோட தலையையும் சீவி- நரசிம்ம நாய்க்கன் பாளையம் பஞ்சாயத்து மேடையில நட்டு வெச்சாத்தாண்டா என் மனசு ஆறும்...!”

வேஷ்டி அவிழ்ந்து தொங்க மரண பயத்தோடு ஓடிக்கொண்டிருக்கும் நாய்க்கரை- மூச்சிரைக்கத் துரத்தி- மாடி வராந்தாவின் ஓரத்தில் மடக்கினான் வீரபத்ரன்.

நாய்க்கர் வராந்தா சுவரோரமாய்-

கை கூப்பிக்கொண்டு உட்கார்ந்தார்.

முகம் பூராவும் வெள்ளமாய் வியர்வை.

கண்களில் சாவு பயம்.

உதடுகளில் உயிர்த் தாகம்.

“வீ...வீ...வீரபத்ரா... எ... என்னை...ஒ....ஒண்ணும் பண்ணிடாதே.... உன் கு....குடிசைக்குத் தீ வைக்க வேண்டாம்ன்னு நான் எவ்வளவோ தூரம் சொல்லிப் பார்த்தேன்... எம்.... மச்சினன் கேட்கலை.... என்னை.... வி... விட்டுடு....”

“என்ன சொன்னே....? உன்னெ விட்டுடறதா...? துண்டு துண்டா வெட்டிப் போடத் தாண்டா வந்திருக்கேன்...!”- சொன்ன வீரபத்ரன் குறுமுயல் மாதிரி சுவரோடு சுவராய் ஒண்டிக் கிடந்த பெரிய நாய்க்கரின் நரைக் கிராப்பைப் பற்றித் தூக்கினான்....

‘ஈய்ய்ய்’ என்று கத்தி அரிவாளை உயர்த்தி நாய்க்கரின் பின்னந் தலையை நோக்கி இறக்கிய அதே விநாடி-

வீரபத்ரனின் மணிக்கட்டில்-

‘நச்’சென்று அந்த அடி விழுந்தது.

அரிவாள் கையினின்றும் நழுவிக் கொள்ள வீரபத்ரன் திடுக்கிட்டுப்போய்த் திரும்பிப் பார்த்தான்.

கையில் கம்புகளோடு-

அரை வட்டம் போட்ட மாதிரி ஏழெட்டுப் பேர் தீர்க்கமாய் நின்றிருந்தார்கள்.

எல்லோருக்கும் முன்னால் பூபதி நாய்க்கன்- கையில் ரிவால்வரோடு நின்றிருந்தான். சிரித்தான். “வீணா குண்டடிபட்டுச் சாகாதே! பெரியவரை விட்டுட்டு இப்படி ஓரமா ஒதுங்கு...!”

வீரபத்ரனின் கை பெரிய நாய்க்கரின் தலை முடியை ஸ்லோமோஷனில் விட்டது. பெரிய நாய்க்கன், கத்திக்குத் தப்பிய ஆடு மாதிரி விழுந்தடித்து ஓடி வந்து ஆட்களோடு சேர்ந்து கொண்டார்.

பூபதி நாய்க்கன் ரிவால்வரை அசைத்தான்.

“ம்.... பின்னாடி போய்... அந்த சுவரோரமா மண்டி போட்டு உட்கார்...! பொலிஸ் வரும். அவங்க கூட போவியாம்...”

கொஞ்சம் தள்ளி- தூரத்தில் விழுந்து கிடந்த அரிவாளைப் பார்த்துக் கொண்டே- எரிகிற மனசோடு சுவரோரமாய்ப் போய் உட்கார்ந்தான் வீரபத்ரன்.



★★

ஜெயில் சூப்பரிண்டெண்ட் பாண்டுரங்கன் ‘எம்’ செல்லை தொட்டபோது, தன் கைச் சங்கிலிகளால் கம்பிகளை ‘ச்சடார் ச்சடார்’ என்று அடித்துக் கொண்டிருந்தான், மாயாண்டி.

செல்லுக்கு முன்னால் போய் நின்றார், பாண்டுரங்கன்.

“மாயாண்டி...!”

நிமிர்ந்தான் ‘ம்ம்ம்’

“என்ன இதெல்லாம்...?” பாண்டுரங்கன் அதட்டலாக கேட்கவும் மாயாண்டி கம்பியருகே வந்தான்.

“அய்யா... நான் நாளைக்கு சாகப் போறவன்... எனக்கு இந்த ஆத்திரமும் கோபமும் வரக் கூடாதுதான்... இருந்தாலும் சில பேர் என் காதுபட ஏதாவது சொல்லிட்டா என்னால் தாங்க முடியறதில்லை.... நான் அடிச்சுக் காயப்படுத்தின அந்த ராமசாமி என்னோட பழைய சகா... அவன் என்ன வார்த்தை பேசினான்னு வார்டன் கிட்டயே கேளுங்கய்யா.”

“நீயே சொல்லு... என்ன சொன்னான்....?”

“டேய் மாயாண்டி! உன்னை எப்படியும் தூக்குல தான் போடப் போறாங்க.... நீ செத்துப்போனப்புறம் உன்னோட மூணாவது செட்டப்பை நான் வெச்சுக்கட்டுமா’ன்னு கேட்கிறான்... அந்த வார்த்தையை கேட்டப்புறம் ஒரு மனுசனுக்குக் கோபம் வருமா வராதா...? நீங்களே சொல்லுங்கய்யா...!” மாயாண்டி பொரிந்தான்.

“அப்படி யாராவது ஏதாவது சொல்லிட்டா வார்டன் கிட்ட கம்ப்ளைண்ட் பண்ணனுமே தவிர-நீயே அவனுக்குத் தண்டனை தந்துடக்கூடாது...”

“என்னால அப்படி இருக்க முடியலையய்யா... என்னோட பார்வைக்கு எது அநியாயமா பட்டாலும் சரி, அந்த நிமிஷமே அதைத் தண்டிச்சாகணும்... என்னோட கண்ணு ரெண்டையும் பாருங்கய்யா...எப்படிச் செவேலென்னு சிவந்து கிடக்கு.இந்தச் சிவப்பு, சாராயத்தை குடிச்சதினாலோ- தூக்கம் விழிச்சதினாலோ வர்ரதில்லை...என்னோட பதினைஞ்சு வயசுலிருந்து இந்த முப்பதாவது வயசு வரைக்கும் என்னைச் சுத்தி நடக்கிற அநியாயங்களைப் பார்த்துப் பார்த்து- அக்கிரமங்களைப் பார்த்துத்தான் கண்ணு ரெண்டும் இப்படி சிவந்து கிடக்குது...”

பாண்டுரங்கன் அவனுடைய கண்களைப் பார்த்தார்.

இரத்தம் கசிகிற மாதிரி தெரிந்த அந்த சிவப்பு விழிகள்- அவர் வயிற்றுக்குள் ஒரு பய ஊசி மாதிரி இறங்கியது. அவனுடைய பார்வையைத் தவிர்த்து விட்டுச் சொன்னார்:

“நாளைக்குத் தூக்குல தொங்கப் போற நீ- உயிரோட இருக்கிற இந்த ஒரு நாள்லேயாவது ஒழுக்கமா இரு...”

சொல்லிவிட்டு திரும்பி நடந்தார் பாண்டுரங்கன்.

சற்று முன் பார்த்த மாயாண்டியின் சிவப்பு விழிகள்- அவருடைய மனசில் உறைந்து போயிருந்தது.

(தொடர்ந்து வரும்)

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

# கியூபா கெரில்லாப்போர் அனுபவத்திலிருந்து...

## கடினமான பயணம்

செப்டெம்பர் 9ம் திகதி சேகுவேராவின் படைப்பிரிவு லாபெடரல் என்ற இடத்தில் எதிரிகளால் வழி மறிக்கப்பட்டது. எதிரிகளில் இரண்டு பேரைக் கொன்று ஐந்து பேரைச் சிறைப் பிடித்தனர். என்றாலும் புரட்சி வீரர்கள் தரப்பில் இரண்டு பேர் இறந்து போயினர். ஐந்து பேர் காயம் பட்டனர். இப்போது கெரில்லாப் படைவீரர்கள், எதிரிகளின் கண்களில் பட்டுவிட்டனர். எனவே அவர்கள் இன்னும் தீவிரமாகக் கெரில்லாக்களைப் பின் தொடர ஆரம்பித்தனர்.

விரைவிலேயே சேகுவேராவின் படைப்பிரிவுக்கு இணையாக முன்னேறிக் கொண்டிருந்த சியன் பயூகோஸின் படை குவேராவின் படையோடு இணைந்தது. இரண்டு படைப்பிரிவுகளும் சேர்ந்து எதிரிகளின் படைகளும், ஆகாய விமானங்களும் தொடுத்த தாக்குதலை எதிர்த்து நின்று, எதிரிகளைப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்தபடி முன்னேறின.

பிறகு, அவர்கள் சதுப்பு நிலத்தின் வழியாகச் சென்றனர். கியூபாவின் சர்வதிகாரியான பாடிஸ்டாவின் வீரர்களை விரட்டியடிக்க முடிந்த அவர்களால் இந்தப் பகுதியில் மொய்த்த கொசுக்களை விரட்டியடிக்க முடியவில்லை.

ஓர் இடத்தில், அவர்கள் வானொலி ஒலிபரப்பைக் கேட்க நேர்ந்தது. அதில், பொது ஊழியர்கள் தலைவனான ஜெனரல் தபெர்னில்லா தனது படைகள், ‘சேகுவேராவின் படைகளை’ நிர்மூலமாக்கி விட்டன என்று அறிவித்தான்.

இவ்விதம் பாடிஸ்டாவின் தளபதிகளில் ஒருவன் தம்பட்டம் அடித்துக் கொண்டது பாடிஸ்டாவின் வீரர்களுக்கு மகிழ்ச்சியளித்தது என்றாலும், அவர்களது உணர்வில் எழுச்சி ஏற்படுத்தவில்லை.

சேகுவேரா எழுதுகிறார்: “வீரர்கள் மத்தியில் சோர்வு அதிகரித்தது. பசி, தாகம், களைப்பு, எதிரிகளை எதிர்த்துப் போராட முடியாத மலட்டுத்தன உணர்ச்சி.

எதிரிகள் தினமும் எங்களைச் சுற்றி வளைத்து நெருங்கிக் கொண்டிருந்தனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, பாதங்களில் மிகக் கடுமையான சேற்றுப் புண்கள். இந்த நோயை விவசாயிகள் ‘மலமொர்ரா’ என்கிறார்கள்- ஒவ்வொரு அடி எடுத்து வைக்கிற போதும் உயிர் போகிற வேதனை. இவை எல்லாவற்றாலும் நாங்கள் சாறு பிழிந்தெடுக்கப்பட்ட சக்கைகளானோம்.

கஷ்டப்பட்டு, மிகக் கஷ்டப்பட்டு நாங்கள் முன்னேறினோம். ஒவ்வொரு நாளும் படைவீரர்களின் உடல்நிலை மிகவும் மோசமாகிக் கொண்டு வந்தது. மிகக் குறைந்த அளவில், உணவு உண்டதால் அவர்களது நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

மிகவும் பலஹீனமான தோழர்களை ஏற்றிக்கொண்டு மலைகளைக் கடப்பதற்கு எங்களுக்கு ஒரு குதிரை கூடக் கிடைக்கவில்லை. கறுத்த உப்புத் தண்ணீரில் ஊறியதால் எங்களது பூட்ஸ்களும் நைந்து கிழிந்து போயின. எங்களது பாதங்களை முட்கள் கீறிப் பதம் பார்த்தன. எங்களது நிலைமை மிகவும் மோசமாய் இருந்தது. இராட்சத முயற்சி மேற்கொண்டு நாங்கள் இந்த நிலையில் இருந்து தப்பி ஜுகாரோவிலிருந்து மோரான் செல்லும் புகழ்பெற்ற சாலையை அடைந்தோம்.

மோரான் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம். கடந்த நூற்றாண்டில் ஸ்பானியப் படைகளுக்கும், கியூபாத்தேச பக்தர்களுக்கும் இடையே நடந்த விடுதலைப் போராட்டத்தின்போது இந்த இடத்தில் இரத்த ஆறு ஓடியது. மழை பெய்து, அதில் நனைந்த போதுதான் நாங்கள் சுய உணர்வு பெற்றோம். ஆனால் எதிரிகள் எங்களைத் தொடர்ந்து துரத்தினர். ஆகவே நாங்கள் மீண்டும் முன்னேற வேண்டியிருந்தது.

சோர்வுக்கு ஆளான வீரர்களிடம் போராட்ட உணர்வு மங்கி மறைந்து கொண்டிருந்தது. மிகவும் மோசமான சூழ்நிலைகளில், திட்டியும், வேண்டியும் இழிவு படுத்தியும்தான் அந்தக் களைத்துப்போன மனிதர்களை முன்னேறச் செய்ய வேண்டி இருந்தது.

இப்படி முன்னேறிக் கொண்டிருந்த போது, தூரத்தில் நாங்கள் கண்ட ஒரு காட்சி எங்களுக்குப் புத்துயிர் அளித்தது:



வலிமை கொடுத்தது. ஆம்! லாஸ் வில்லாஸின் பனிமுடிய மலைச் சிகரங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

கஷ்டமான பயணம் பற்றிக் கூறுகின்ற சே,- தனது வழக்கப்படி அந்தத் துன்பகரமான நாட்களில் தான் பட்ட அல்லல்களைப் பற்றி ஏதும் கூறாமல், மௌனம் சாதிக்கிறார். ஒருமுறை பயணத்தின்போது, சே இறந்தவரைப்போல் கீழே விழுந்தார். உடன் வந்தோர் அவர் அருகே ஓடினர். அவர்கள் சே இறந்துவிட்டார் என்றுதான் கருதினர். உண்மையில் அவர் கடுமையான களைப்பின் காரணமாக ஆழ்ந்த தூக்கத்தில் அமிழ்ந்திருந்தார்.

தனது வீரர்கள் அனுபவித்த எல்லாத் துன்பங்களையும் பகிர்ந்து கொண்ட சே, ஆஸ்துமாவினாலும் அதிகம் அவஸ்தைக்கு ஆளாகினார். ஆனால் அவர் ஒருபோதும் புலம்பியதில்லை. தனது அதிருப்தியைத் தோழர்களிடம் காட்டிக் கொண்டதில்லை.

ஒரு கமாண்டர் என்கிற முறையில் அவர் தனது வீரர்களை ஊக்குவிக்க வேண்டியிருந்தது: துன்பங்களை எதிர்த்து நிற்கும் அவர்களது நெஞ்சுரத்தைப் பலப்படுத்த வேண்டியிருந்தது: வெற்றி பற்றி அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை வளர்க்க வேண்டியிருந்தது. பலஹீனத்தின் ஒரு சிறுகுறி கூட வெளித்தெரிய அவர் அனுமதிக்கமாட்டார். அவரது சீரிய நடத்தையினால் அவரது தோழர்கள் கவரப்பட்டனர்: அவர் மீது மரியாதை வைத்தனர்.

கமாகுவே பகுதியில், எட்டாவது அணியைத் தடுத்து நிறுத்தி நிர்மூலமாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு பாடிஸ்டா தனது படையினருக்கு உத்தரவிட்டான்.

இந்த மாநிலத்தில் கமாண்டராக இருந்தவன், ஒக்டோபர் 6ம் திகதி ஒரு இரகசிய ஆணை பிறப்பித்தான். அதில் குவேராவின் படைகளைத் தடுத்து நிறுத்த, ‘காலை உணவு, இரவு உணவு, தூக்கம் கூட இல்லாமல் தான் ‘நாள் முழுவதும் உழைக்கத் தயாராய் இருப்பதாயும், தனது கீழுள்ளோர் இந்த ‘சிறந்த’ உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும்’ என்றும் அந்த ஆணையில் எழுதி இருந்தான்.

‘அவர்களால் என்னைக் கடக்க முடியாது’ என்று அந்தக் கிழட்டுக் குதிரை ஜம்பம் பேசியது. “ஒன்றுமறியாத விவசாயிகள் புராதன காலத்து ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு புரட்சிக்காரர்கள் என்று வருகிறார்கள். இவர்களை ஒரு பொருட்டெனக் கருதுவது கையில் கத்தி வைத்திருக்கிற சிறுபிள்ளையோடு போராடுவது போன்ற காரியம்தான்” ஆனாலும் அந்தக் கமாண்டர் கூறினார்: “ஏதோ நாமெல்லோரும் அணுக்கதிர் வீச்சுக்கு ஆளானது போல் இந்த அப்பாவிக் கொள்ளைக்காரர்களைக் கண்டுபயப்படுகிறோம்.” இவ்வளவு வாய்ச்சவடால் அடித்தும் இவனால் வீரர்களது பயத்தைப்போக்கி அவர்களைத் தைரியமான நடவடிக்கையில் ஈடுபடுத்த முடியவில்லை.

600 கிலோமீட்டர்களுக்கு அப்பாலுள்ள சியாரா மாய்ஸ்ட்ராவிலிருந்து கிளம்பிய எட்டாவது அணி இறுதியாக ஒக்டோபர் 16ம் திகதி எஸ்கம்பரே மலைகளை அடைந்தது. இந்த மலைகளை அடைய வேண்டும் என்பது அந்த அணியினரது நீண்டகால விருப்பம். இது புரட்சிக்காரர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

பாடிஸ்டாவின் அதிகாரிகளுக்கும், அவனது பெரிய இராணுவத்திற்கும் கிடைத்த தோல்வி, விமானம், இன்னும் பிற நவீன வசதிகள் இருந்தும் பாடிஸ்டாவின் இராணுவத்தால் குவேராவின் படைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளைச் சூத்திரதாரியாக இருந்து இயக்கிவந்த அமெரிக்க இராணுவ ஆலோசகர்களுக்கும் கிடைத்த மிகப் பெரிய அடி இது. ■



படிப்பகம்

www.padippakam.com




25

பட்டுக்கோட்டை பிரபாகர்

கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தாள் நர்ஸ்.

படித்துக் கொண்டிருந்த நாவல் புத்தகத்தை பக்கம் அடையாளம் வைத்து ஓரமாக வைத்த மதுமிதா, "குட்மார்னிங் சிஸ்டர்" என்றாள்.

"குட்மார்னிங்!" என்று சொன்ன நர்ஸின் முகத்தில் வழக்கமான புன்னகை இல்லாததற்குக் காரணம் புரியவில்லை.

நர்ஸ் கொண்டு வந்த ட்ரேயிலிருந்து மௌனமாக இஞ்ஜெக்ஷன் மருந்தை டிஸ்போசபிள் சிரிஞ்சில் ஏற்றத் துவங்கினாள்.

"என்ன சிஸ்டர் ஒரு மாதிரியா இருக்கீங்க?"

"ஒண்ணுமில்லையே..."

"வழக்கமா சிரிச்ச முகமா இருப்பீங்க. மௌனமா இருக்கீங்க. முகமும் சரியில்லையேன்னுதான் கேட்டேன். வீட்ல ஏதாவது பிரச்சனையா?"

"என் வீட்ல எந்தப் பிரச்சனையும் இல்லைங்க."

"பின்ன வேற என்ன? டாக்டர் எதுக்காவது திட்டினாரா?"

"வேணாம் விட்டுடுங்க மேடம். அப்புறம் நான் ஏதாவது சொல்லப் போயி நீங்க வருத்தப்படலாம்."

"நான் வருத்தப்படற மாதிரி அப்படி என்ன விஷயம்?"

"வெளிப்படையா பேசினா கோவிக்க மாட்டீங்கன்னா சொல்றேன்."

"எனக்கு வெளிப்படையாப் பேசறவங்களைத்தான் சிஸ்டர் ரொம்பப் பிடிக்கும்."

"பொதுவா சமுதாயத்தில் உங்களை மாதிரி சினிமா நடிகைகள் மேல ஆர்வம் இருக்கிற அளவுக்கு மரியாதை இருக்கிறதில்லைங்க. ஆனா நீங்க இந்த ஆஸ்பத்திரில சேர்ந்ததிலேர்ந்து உங்க பேச்சும் பழக்கமும் உங்கமேல ஒரு கண்ணியமான மதிப்பை ஏற்படுத்திட்டீங்க. உங்களைப் பத்தி புகழ்ச்சியா நான் என் வீட்டுக்காரர்கிட்டே கூட பல தடவை சொல்லிட்டிருந்தேன். ஆனா இப்ப உங்களைப் பத்திச் சில உண்மைகள் தெரிஞ்சதும், 'நீங்களும் மத்தவங்க மாதிரித்தானா?'ன்னு ஒரு வெறுப்பு வந்திடுச்சிங்க!"

"என்ன உண்மை தெரிஞ்சிட்டீங்க? எதனால வெறுப்பு வந்திச்சு?"

"நான் உங்க அளவுக்குப் படிக்கலை. அந்தஸ்தும் இல்லை. ஆனா பண்பாடுன்னு ஒண்ணு இருக்கு. கலாசாரம்னு ஒண்ணு இருக்கு. அதை எல்லாம் மதிக்கிறவதாங்க நல்ல பொம்பளை. அது யாரா இருந்தாலும் சரிங்க."

"இப்ப நான் ஏன் பண்பாட்டை மதிக்கலைன்னு சொல்றீங்க?"

"கல்யாணம்ங்கிறது விளையாட்டு சமாச்சாரம் இல்லைங்க. ஆயுசுக்கும் மாறாத ஒரு ஜென்ம பந்தத்தை ஏற்படுத்தற புனிதமான விஷயங்க!"

"உண்மைதான். அதுக்கென்ன?"

"மனசுக்குப் பிடிக்காத புருஷன் அமைஞ்சாக்கூட, அந்தப் புருஷனை எப்படி மாத்தி நல்ல வழிக்குக் கொண்டார்றதுன்னு பார்க்கணும். பணம், காசு வந்ததும் புருஷனையே போடான்னு தூக்கி எறியறது என்ன குணங்க?"

"வெய்ட்! வெய்ட்! புருஷனையே அலட்சியப்படுத்தற மாதிரி நான் எப்பவோ ஒரு கேரக்டர்ல நடிச்சது ஞாபகம். படத்தோட பேரு ஞாபகத்தில இல்லை. அந்தப் படத்தை நேத்து டீ.வி.யில பார்த்தீங்களா சிஸ்டர்?"

"நீங்க சினிமால நடிச்சதைப் பத்தி பேசலைங்க. வாழ்க்கைல நடிச்சிக்கிட்டிருக்கிறீங்களே, அதைப்பத்தித்தான் பேசறேன்."

"நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியலை."

"இதைப்பத்தி நீங்க பேச விரும்பலைன்னு எனக்குப் புரியுது. நீங்க யாரோ- நான் யாரோ. உங்களுக்கு அட்வைஸ் பண்றதுக்கு எனக்கு உரிமையில்லை. அதே மாதிரி உங்க வாழ்க்கையைப்பத்தி விமர்சனம் பண்றதுக்கும்கூட உரிமை இல்லை. காலைல சாப்பிட வேண்டிய மூணு மாத்திரையும் சாப்பிட்டீங்களா?"

"சிஸ்டர், பேச்சை மாத்தாதீங்க. வெளிப்படையா கேளுங்க. எதனால என்னைப் பத்தித் தப்பாப் பேசறீங்க?"

"நீங்க ஒரு நடிகையாகணுங்கறதுக்காக உங்கம்மா போட்ட நிபந்தனைக்கெல்லாம் தலையாட்டி உங்களை விட்டு விலகியிருந்த உங்க புருஷனை, உயிரைக் காப்பாத்திக்கோன்னு மிரட்டி அனுப்பிச்சிருக்கீங்களே, இது ஒரு நல்ல பொண்ணு செய்யற காரியமா?"

மதுமிதா வாய்விட்டுச் சிரித்து, "புருஷனா? எனக்கா? இராத்திரி ஏதாச்சும் கனவு கண்டீங்களா?"

"நீங்க ஒத்துக்கலைன்னா என்ன? உங்க புருஷன்தான் ஆதாரத்தோட பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்திருக்காரே...!"

"எந்தப் பத்திரிகைக்கு-யார் பேட்டி கொடுத்திருக்காங்க?"

"இன்னைக்கு வெளிவந்திருக்கிற 'சினிமா புயல்' பத்திரிகைல-நீங்க சினிமாவுக்கு வர்றதுக்கு முன்னாடியே இரகசியமா பண்ணிக்கிட்ட கல்யாணத்தைப் பத்தி-உங்களுக்குத் தாலி கட்டின புருஷன் வெங்கடரெட்டி விபரமா பேட்டி கொடுத்திருக்காரு. ஊரு பூரா இந்த போஸ்டர்தான் தொங்குது. எலெக்ட்ரிக் டிரெய்ன்லயும், பஸ்லயும் இதைப் பத்தித்தான் ஜனங்க பேசிட்டு இருக்காங்க. ஊருக்குத் தெரிஞ்சு போச்சு. நீங்க என்கிட்ட உண்மையை மறைச்சி பேசிட்டிருக்கீங்க. நீங்க எப்படி வாழ்ந்தா எனக்கென்ன மேடம்? நான் வர்றேன்!"

நர்ஸ் வெளியேற, குழப்பமடைந்து குரல் கொடுக்க, டச்-அப் பெண் சுமதி ஓடி வந்தாள்.

"சுமதி, இந்த இஷ்யூ, 'சினிமா புயல்' உடனே வாங்கிட்டு வா!"

பத்து நிமிடத்தில் சுமதி வாங்கி வந்த இதழில் அந்தக் கட்டுரையை பரபரவென்று படித்து முடித்த மதுமிதாவுக்கு ஆத்திரம் பொங்கியது.

உடனே ஃபோனை எடுத்தாள். 'சினிமா புயல்' பத்திரிகையின் அலுவலகத்துக்கு முயன்றாள்.

"எடிட்டர்கிட்ட பேசணும். நான் ஆர்ட்டிஸ்ட் மதுமிதா பேசறேன்," என்றதும் சில வினாடிகளில் எடிட்டர் லைனுக்கு வந்தார்.

"குட் மார்னிங் மேடம். சொல்லுங்க!"

"என்ன சார் இது. இந்த இஷ்யூல இப்படி அபாண்டமா ஒரு கட்டுரை போட்டிருக்கீங்க?"

"அப்படியா? அதெல்லாத்தையும் நீங்க மறுக்கறீங்களா?"

"அத்தனையும் பொய் சார்! முழுக்க கட்டுக்கதை! யாரோ ஒருத்தன் திடீர்னு புகழ் தேடிக்கிறதுக்காக செஞ்சிருக்கிற விஷமத்தனம்."

"அந்த வெங்கடரெட்டி குறிப்பிட்டபடி உங்களுக்கு இரகசியத் திருமணம் நடக்கலைன்னு சொல்றீங்களா?"

"யார் அந்த வெங்கடரெட்டின்னே தெரியாது சார்."

"உங்க கைப்பட எழுதின லெட்டர் கொடுத்திருக்காரே! கல்யாண ஃபோட்டோ வேற இருக்குதே!"

"எல்லாம் ஃபிராடு சார்! செட்-அப் செஞ்சிருக்காங்க! நீங்க என்கிட்ட கேட்காம எப்படி சார் வெளியிடலாம்?"

"உங்ககிட்ட பர்மிஷன் கேக்கறதுக்கு நீங்க என்ன எங்க பத்திரிகையோட சீஃப் எடிட்டரா மேடம்?"

"அலட்சியமாப் பேசாதீங்க. உங்க பத்திரிகை மேல நான் மான நஷ்ட வழக்குப்போடுவேன்!"

"தாராளமாப் போடுங்க. கோர்ட் எங்களுக்குப் புதுசில்லை. ஏற்கனவே நாப்பத்தி ஏழு கேஸ் இருக்கு. உங்களோடது நாப்பத்தி எட்டாவது கேஸா இருந்துட்டுப் போகுது."

"கிண்டலா? ஒரு நடிகைன்னா உங்களுக்கு அவ்வளவு இளக்காரமாப் போச்சா? அவ பர்சனல் வாழ்க்கையைப் பத்தி எதை வேணும்னாலும் எழுதலாம்னு நினைப்பா?"

"மேடம், அதிகமாப் பேசாதீங்க. பப்ளிக் லைஃப்க்கு வந்திட்ட யாரைப் பத்தியும் நாங்க எழுதத்தான் செய்வோம். அந்தப் பேட்டிக் கட்டுரை, கற்பனை இல்லை. உண்மையிலேயே ஒரு வெங்கடரெட்டி இருக்கிறார். அவர்தான் எங்களுக்கு தபால் எழுதி நிருபரை அனுப்பச் சொன்னார். அவர் பேசின தகவல்களை மாத்தாம வெளியிட்டிருக்கோம். பேட்டி முழுக்க டேப் செஞ்சி வெச்சிருக்கோம். அவர் கொடுத்த முதல் பேட்டி இது. கூடிய சீக்கிரம் அவர் ஒரு பிரஸ்மீட் நடத்தி இதே தகவல்களை எல்லாப் பத்திரிகைகளுக்கும் தரப்போறதா சொல்லியிருக்கார். எல்லாப் பத்திரிகைகளும் இதைப்பத்தி எழுதத்தான் போறாங்க. இந்தக் கட்டுரைக்கு நீங்க மறுப்பு சொல்றதா இருந்தா விபரமா ஒரு அறிக்கை தயாரிச்சு அனுப்பி வையுங்க. போடறோம். இல்லை, எங்க நிருபரை அனுப்பி வைக்கிறோம். பேட்டி கொடுங்க. இதுதான் நாகரிகமான வழி. நீங்க கேஸ் போடறதுன்னா வெங்கடரெட்டி மேல கேஸ் போடுங்க. இமோஷனலா பேசாம யதார்த்தமா யோசிச்சு செயல்படுங்க மேடம். வேற ஏதாச்சும் சொல்ல விரும்பறீங்களா?"

எடிட்டரின் பேச்சில் இருந்த கிண்டல் தொனி மதுமிதாவை மேலும் எரிச்சல் படுத்தியது. டக்கென்று ஃபோனை வைத்தாள்.

'என்ன இது? யார் இந்த வெங்கடரெட்டி? திடீரென்று எங்கிருந்து முளைத்தான்? ஏன் இப்படி அப்பட்டமான பொய்களைப் பத்திரிகைக்கு அளித்திருக்கிறான்?

பத்திரிகைகளில் என்னைப்பற்றி கிசுகிசுவாக செய்திகள் வருவது ஒன்றும் புதிதில்லை. எந்தப்படத்தில் நடித்தாலும், அந்தப் பட ஹீரோவுடன் இணைத்து எழுதாவிட்டால் பத்திரிகைகளுக்குத் தலைவெடித்துவிடும்.

ஆனால் இரசியத் திருமணம் நடந்ததாக இத்தனை அபாண்டமாகப் போட்டிருக்கிறார்களே....!'

கல்யாண ஃபோட்டோ! மறுபடி பத்திரிகையைப் புரட்டினாள்.

'இதுதான் வெங்கடரெட்டியா? பாவி! ஏதோ பழைய சினிமா ஸ்டில்லில் விளையாட்டு செய்திருக்கிறான். எத்தனையோ படங்களில் மணப்பெண் அலங்காரத்தில் மணவறையில் அமர்ந்து தாலி கட்டிக் கொண்டிருக்கிறேனே...

ஏதோ ஒரு பழைய சினிமா ஸ்டில்தான் இது.

அப்புறம், இந்தக் கடிதம்!

உற்றுப் பார்த்தபோது, தன் கையெழுத்துத்தான் என்பதும்... அதை எந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் எழுதினோம் என்பதும் அவளுக்கு நினைவுக்கு வந்தன!



இந்தக் கடிதம் அம்மா அல்லவா அப்போது பிடுங்கி வைத்துக்கொண்டிருந்தாள்.

அது எப்படி இப்போது யாரோ ஒரு வெங்கடரெட்டியாம்?

யோசிக்க, யோசிக்க... இது அம்மாவின் புதிய புரட்சித்திட்டம் என்பது விளங்கியது.

ஃபோன் எடுத்தாள். எண்களை ஒற்றினாள்.

"ஹலோ, அம்மாவைப் பேசச் சொல்லுங்க!"

அம்மா விநாடிகளில், "என்ன மதுமிதா?" என்றாள்.

"'சினிமாப் புயல்'ல கட்டுரை படிச்சியா?"

"இப்பதான் படிச்சேம்மா. அதைப் பத்தித்தான் நானும் உன் சித்தப்பாவும் கவலையா பேசிட்டிருந்தோம். ஒரேயடியா உன் வாழ்க்கையை விட்டே விலகிடறதா சொல்லிட்டிருக்கிற அந்த வெங்கடரெட்டி இப்படி உண்மையைப் போட்டு உடைச்சுட்டானே?" என்றாள் துர்க்கா.

(தொடரும்)

> "பணம் திரட்டும் நோக்கம்- மற்ற பல நோக்கங்களில் ஒன்றாகத்தான் இருக்க முடியுமே தவிர-படத்தயாரிப்பாளரின் ஒரே நோக்கமாக, ஏன் முக்கிய நோக்கமாகக் கூட இருக்கக்கூடாது."
>
> டைரக்டர் A.S.A. சாமி- ஒரு பேட்டியில்...,
> 'கலை'- ஜூலை 1949 இதழில்...

# நில்-கவனி-முன்னேறு

## கவியரசு கண்ணதாசன்

இந்தியா முழுவதிலும் பல இசை அமைப்பாளர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

இந்தியாவின் எந்த மொழியிலும் தம்பி விஸ்வநாதனுக்கு இணையான ஓர் இசை அமைப்பாளரை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

"ஆமாம், நீ அடிக்கடி சந்திக்கும் விஸ்வநாதனைப் பற்றி 'இந்த வாரம் சந்தித்தேன்' என்று எழுதுவதில் என்ன பொருள்?" என்று நண்பர்கள் கேட்கக் கூடும்.

காரணம் உண்டு.

தம்பி விஸ்வநாதனை மூன்று வாரங்களாக நான் சந்திக்கவில்லை. இவ்வளவு பெரிய இடைவெளி எங்களுக்குள் விழுந்ததில்லை. தம்பி ஏராளமான ரீ-ரெக்கார்டிங்குகளில் மாட்டிக்கொண்டதால், இந்த வாரம்தான் சந்தித்தேன்.

உலகத்தில் எந்தப் பாகத்தில் என்ன இசை இருக்கிறது என்பது விஸ்வநாதனுக்குத் தெரியும். விஸ்வநாதனுடைய இசைக்கு நான் பாட்டெழுதத் தொடங்கி முப்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த முப்பது ஆண்டுகளில் தம்பியின் திறமையை நான் கண்டு கண்டு வியந்திருக்கிறேன்.

'பட்டத்து ராணி பார்க்கும் பார்வை'யில் எகிப்திய இசையைக் கேட்டேன். 'தென்றல் வந்து வீசாதோ' பாடலில் தென்பாண்டி மண்டலத்தின் மண்வாடையைக் கண்டேன். 'அபூர்வ ராக'த்தில் நளினமான கர்நாடக சங்கீதத்தை அனுபவித்தேன். 'முத்தமிடும் நேரம் எப்போ' என்ற பாடலில் மெக்ஸிகன் ஆர்ப்பாட்டத்தைக் கேட்டேன். சொல்லிக் கொண்டே போனால் இடம் போதாது.

கடுமையான உழைப்பாளி. தூங்குகிற நேரம் மிகவும் குறைவு. நாள் முழுவதும் உழைப்பு, உழைப்பு, உழைப்பு. இசையைத் தவிர வேறு உலகம் தெரியாது.

"ஊமைத்துரையில் 'துரை' என்று வருகிறதே அண்ணே, அவன் வெள்ளைக்காரனா?" என்று ஒருமுறை கேட்டான்.

காபூல் நகரில் தங்கி இருந்தபோது, "இங்கிருந்துதான் கஜினி முகம்மது நம் நாட்டின் மீது படை எடுத்தான்," என்றேன். "யாரண்ணே கஜினி முகம்மது?" என்றான்.

பூகோளம், சரித்திரம், இன்றைய அரசியல் பற்றி அவன் கேட்கும் கேள்விகளை நினைத்தால் சிரிப்பு வரும்.

**கவியரசு கண்ணதாசன்- எம்.எஸ்.விஸ்வநாதன் கூட்டணி தந்த பாடல்கள் காலத்தால் அழியாதவை. மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் பற்றி கவியரசர் எழுதியது...**

ஆனால்- அவனோடு பாட்டெழுத உட்கார்ந்து விட்டால் பொழுது போவதே தெரியாது.

முப்பது வருடங்கள்.

தொழிலில் தளர்ச்சி இல்லாமல், தம்பியும் நானும் கண்ட அந்த எல்லையை, இந்தத் தலைமுறையில் வேறு யாரும் காண முடியாது.

எல்லாருமே விதை போட்ட அறுபது நாளில் அறுவடையாகும் கீரைப்பாத்திகள். இரண்டாண்டுகள் ஆட்டம் போட்டுவிட்டு இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போன இசை அமைப்பாளர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன்.



தம்பிக்கும், மாமா (கே.வி.மகாதேவன்)வுக்கும் அஸ்திவாரம் மிகப்பெரியது.

ஏழு வயதில் இரண்டு ரூபாய் சம்பளத்தில் கம்பெனி நடிகனாக வாழ்க்கையைத் துவங்கிய விஸ்வநாதன், பட்டபாடு கொஞ்சமல்ல. பதினாறு வயதில் வைரம் நாடகக் கம்பனியில் வேலை பார்த்தபோது ஒரு நெக்லஸைத் திருடி விட்டதாகத் தம்பியைப் பொலிஸில் ஒப்படைத்தார்கள். பொலிஸார் அவனை அடித்தும் விட்டார்கள். பிறகு செட்டியாருடைய மெத்தைக்கு அடியிலேயே நெக்லஸ் கிடைத்தது.

ஜூபிடரில் நடிகனாகி, ஆபீஸ் பையனாகி, ஆர்மோனிஸ்ட்டாகி சுப்பராமனுக்கும், சுப்பையா நாயுடுவுக்கும் உதவியாளனாகி, சுப்பராமன் இறந்த பிறகு இசை அமைப்பாளனாகி, எடுத்த எடுப்பிலேயே உச்ச ஸ்தாயியில் பல்லவி பாடியவன் தம்பி.

முன்பெல்லாம் இரவு பதினொரு மணிக்கு டெலிஃபோன் மணி அடித்தால் அது ஏ.எல்.எஸ். (கவிஞரின் அண்ணன் ஏ.எல். சீனிவாசன்) அல்லது விஸ்வநாதனாக இருக்கும். இப்போது விஸ்வநாதன் மட்டுமே.

இசைக்குப் பாட்டா? பாட்டுக்கு இசையா? இரண்டும் பாதிப் பாதி.

'ஆகாயப் பந்தலிலே' இசைக்கு எழுதப் பட்ட பாட்டு. 'சோதனை மேல் சோதனை' பாட்டுக்குப் போடப்பட்ட இசை.

'இது நன்றாக இல்லை' என்று என்னிடம் சொல்லக் கூடிய ஒரே இசை அமைப்பாளர், விஸ்வநாதன்.

'மாலையிட்ட மங்கை' படத்தில் இருந்து தான் எனக்கு மார்க்கெட் ஏறிற்று. காரணம், தம்பி விஸ்வநாதனின் இசை.

ஆயிரம் புகழ் வந்தாலும், யாரையும் எடுத்தெறிந்து பேசாத குணம் தம்பி, மாமா, புகழேந்தி மூவருக்கும் உண்டு.

நானும் தம்பியும் பத்தே நிமிடங்களில் போட்டு முடித்த பாட்டு, 'நெஞ்சில் ஓர் ஆலயத்தில்'வரும் 'முத்தான முத்தல்லவோ'. நான்கு மாதங்கள் உயிரைவிட்ட பாட்டு, 'நெஞ்சம் மறப்பதில்லை' என்ற படத்தில் வரும், 'நெஞ்சம் மறப்பதில்லை' என்ற பாட்டு.

எந்த இரவிலும் நான் போட்டு கேட்பது. நான் எழுதி தம்பி இசை அமைத்து, சரஸ்வதி ஸ்டோர் பதிப்பித்த 'ஸ்ரீ கிருஷ்ண கானமே.' அதைக் கேளாமல் நான் தூங்கியதே இல்லை. இதுவரை அதுபோல் ஒரு பக்திப் பாடல் வந்ததாகவும் எனக்கு ஞாபகம் இல்லை.

எழுத எழுத எவ்வளவோ விஷயங்கள் வந்து குவிகின்றன. எதைச் சொல்வது, எதை விடுவது?

பெங்களூர் உட்லண்ட்ஸ், ரூம் நம்பர் முப்பத்தாறு. 'கர்ணன்', 'பாத காணிக்கை' எல்லாமே அங்கேதான். 'வீடு வரை உறவு' பிறந்த இடமும் அதுதான்.

பம்பாய் ஜன்பத் ஓட்டலில், எழுதி எழுதிப் பார்த்து முடியாமல் திரும்பி விட்டோம்.

நானும் தம்பியும் பாண்டிச்சேரியில் எழுதிக் கொண்டிருந்தபோதுதான், காரைக்குடியில் என் சவீகாரத் தாயார் இறந்துவிட்ட செய்தி வந்தது. தம்பியின் காரை எடுத்துக் கொண்டே போய்ச் சேர்ந்தேன்.

1962-ல் நான் இறந்துவிட்டதாகத் தம்பிக்கு யாரோ தொலைபேசியில் சொன்னார்கள். தம்பி சாரதா ஸ்டுடியோவில் ரெக்கார்டிங்கை நிறுத்திவிட்டு முட்டி மோதிக்கொண்டு ஓடிவந்தான். அது போலவே செய்தி கேட்டு எம்.வி. ராஜம்மா, எம்.ஆர்.ராதா, கிருஷ்ணன்- பஞ்சு, பீம்சிங், ஸ்ரீதர், சம்பத் ஆகியோர் ஓடி வந்தார்கள். எம்.ஜி.ஆர். டெலிஃபோனில் துழாவினார்.

நான் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தேன்.

தொலைபேசியில் வதந்தி பரப்பியது யாருமல்ல; நானேதான்!

தம்பி என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதான்.

இந்த வகையில் அவனை நான் முந்திக் கொள்ள வேண்டும் என்பது என் ஆசை!

**

பி.கு. கவியரசு கண்ணதாசன் ஆசை நிறைவேறிவிட்டது. அவர் முந்திவிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com


# நிபந்தனை

அந்தத் தோட்டத்துப் பாடசாலை வெறிச்சோடிக்கிடந்தது. அதைச் சுற்றியுள்ள திடலில் மாடுகள் வசதியாகப் படுத்துக்கொண்டு அசை போட்டுக் கொண்டிருந்தன. ராமசாமி செல்லமாய் வளர்த்த சிகப்பி நாய், மாடுகள் போட்ட சாணத்தில் புரண்டு விளையாடியது.

சிவராசு மாஸ்டர் அந்தப் பாடசாலையின் மேல் விட்டத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். அவர் சிந்தனையில் சிக்குண்டு பெருமூச்சுக்களை வெளியே விட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென்று என்ன நினைத்துக் கொண்டாரோ சிவராசு மாஸ்டர் மணியைப் பார்த்து நாக்கைக் கடித்துக் கொண்டார். 'பாவம் ஆத்தா சாப்பிடாமக் காத்திருக்கும்' எண்ணிய கணத்தில் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

பள்ளமும் திட்டியும் உள்ள பாதையின் பழக்கம், சிவராசுமாஸ்டருக்குப் பஞ்சு மெத்தையில் நடப்பதுபோலிருந்தது. கன்னத்தில்



ரூபராணி

இருக்கப் பிடிக்காத வியர்வைத் துளிகள் அவர் கழுத்திலே உருண்டு விளையாடின.

"மாஸ்டர் உங்களைப் பாத்தா கமல ஹாசன் போலிருக்கு. யூ ஆர் ஹான்சம்!" சுற்று முற்றும் பார்வையை மேய விட்ட மாஸ்டருக்குச் சிரிப்புத்தான் வந்தது. அங்கு யாருமில்லை. மூன்று மாதங்களுக்கு முன் நடந்த சம்பவம் அவர் முன்னால் வந்து நின்றது.

சிவராசு மாஸ்டர் கண்டியில் உள்ள ரியூட்டரி ஒன்றில் வாரம் இருமுறை வகுப்பு நடத்துவது வழக்கம், அங்குதான் லலிதினியின் பரிச்சயம் அவருக்கு ஏற்பட்டது. அவள் பார்வையில் குமரியாய் இருந்தாலும் பழக்கத்தில் குழந்தையாய் இருப்பது சிவராசு மாஸ்டருக்கு வேடிக்கையாக இருந்தது.

வகுப்பு முடிந்தபோதெல்லாம் தனியாக வந்து, "மாஸ்டர் நீங்க கமலஹாசன் மாதிரி ஹான்சம்" என்று சொல்லிச் சிரிப்பைச் சிந்திவிட்டுப் போவாள்.

மாஸ்டர் மனதில் குளப்பம். லலிதினியின் முகத்தில் சிரிப்பைத் தவிர வேறெதையும் அவரால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒருநாள் மாஸ்டர் கிளாஸ்முடிந்து வீதி வரை வந்துவிட்டார். லலிதினி அவரைத் தொடர்ந்து வந்து, "மாஸ்டர் ஐ லவ் யூ என்டு நான் சொல்ல மாட்டன் யூடோன் லவ் யூ என்று சொல்லத்தான் ஓடி வந்தன். இந்தக் கொப்பியில் உள்ளதக் கொஞ்சம் திருத்தித் தாங்கோ!" கொடுத்த வேகத்தில் அவள் சிட்டாகப் பறந்தாள்.

சிவராசு மாஸ்டர் கொப்பியை அவசரப் பட்டுத் திறந்தார். அதில் சந்தன வாடைய டித்தது. புத்தம் புதிய கொப்பி..

மாஸ்டர்

நான் உங்களைக் கண்டது முதல் நீங்கள்தான் என் கணவன் என்று தீர்த்து விட்டேன் உங்கள் தீர்ப்பு? மாஸ்டர் பிளீஸ் தீர்ப்புகளைத் திருத்தி விடாதீர்கள்.

லலிதினி

சிவராசு மாஸ்டரின் மேனி சிலிர்த்தது. பெயரைப் போல புதுமைப் பெண் இவள். நினைத்தவர், பேனாவை எடுத்து அதனடியில் "தீர்ப்புகளைத் திருத்த மாட்டேன். நான் உன் பக்கம் திரும்பிவிட்டேன்," என்று எழுதி விட்டு பஸ்தரிப்பை நோக்கி நடந்தார்.

"ஆத்தா! அந்தப் பொண்ணு நல்லது, சொத்துக்கு குறைச்சல் இல்ல அவுங்க வீட்டில சம்மதம்...."

நாட்கள் பல நகர்ந்தன.

சிவராசு மாஸ்டர்- லலிதினியின் கடிதங்களும் சந்திப்புகளும் காதலாக மாறி கலியாணத்துக்கனக் கால் கடுக்க நின்றது.

"ஆத்தா!" சிவராசுவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தாள் பூவாயி. "வாப்பா சிவராசு இன்னிக்கி ஒன் பொறந்த நாளு. கோழிக் கொழும்பு வச்சிருக்கேன்; போய்ச் சாப்பிடு. ஒன் தங்கச்சி தவந்தான் நெனவு காட்டிரிச்சி."

சிவராசு நெகிழ்ந்து போனான். "இன்னைக்கி நல்லநாளு நெனச்சதக் கேக்கணும்." அவன் வாய் முணுமுணுத்தது.

"சிவராசு! என்ன ரோசன?" பூவாயி மகனின் தலையைத் தடவினாள்.

"ஆத்தா ஒண்ணு சொல்லணும்!"

"சொல்லுப்பா"

"ரவுண்ல படிக்கிற ஒரு பொண்ணு என்னக் கட்டிக்க ஆசப்படுது."

"ஒனக்கு இதில புடிப்பில்லையாக்கும்!"

"இருக்கு இருக்கு!" சிவராசு அவசரப்பட்டான்.

பூவாயி வாயில் வெற்றிலைச்சாறு வடியச் சிரித்து விட்டாள். "நீ எதுக்கு ரோசிக்கிறே? எப்புடியோ நா ஒன்ன மாஸ்டராக்கிபுட்டன். நீ டவுணுக்குப் போகாம நம்ம தோட்டத்துப் புள்ளங்களப் படிப்பிச்சி ஆளாக்கோணும் எண்டுதான் நீ புறியப்பட்டா. நாம தோட்டத்துல பொறந்து வளந்தவங்க. ஒசத்தியான சம்பந்தம் எப்புடியாகுதோ? அதான்... பொண்ணு எப்புடி?" பூவாயி தனக்குப் பட்டதைச் சொன்னாள்,

"ஆத்தா அந்தப் பொண்ணு நல்லவ, சொத்துக்குக் கொறச்சல் இல்ல. அவுங்க வீட்ல சம்மதம், தங்கச்சிய வச்சிற்று..." சிவராசு கவலையைக் காட்டினான்.

"சிவராசு! இந்தக் கூடையும் கொழுந்தும் இருக்கிறப்ப தவமணியப் பத்தி ரோசிக்காத." பூவாயி உறுதியுடன் சொன்னாள்.

"ஆத்தா நீ வேலய உட்டிடு. நாம ரவுணில ஒண்ணாருப்பம். நா எல்லாம் பாத்துக்குவன்".

"வேணாஞ்சாமி அதமட்டும் சொல்லாத. நா ஒதுங்கிக்கிறன். நீ டவுணுக்குப் போயி ஒம் பொண்டாட்டியோட நல்லாரு. தவமணிய நா பாத்துக்குவன்!" பூவாயி பாசத்துடன் வார்த்தைகளை வரைந்தாள். சிவராசுவின் கண்களில் ஈரம் கசிந்தது.

சிவராசு-லலிதினியின் திருமணம் நகரத்தில் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. தோட்டப் பாடசாலையிலிருந்து நகரப்பாடசாலையொன்றிற்கு இடமாற்றம் பெற்று விட்டான் சிவராசு.

லலிதினியின் வீட்டில் வாழ்க்கை இனிதே தொடங்கிற்று, சிவராசுவின் மனம் தோட்டம், லயம், ஆத்தா, தங்கை என்ற உறவுகளோடு, வளைய வந்தது. ஒருநாள் ஒரு முறை தோட்டத்துக்குப் போய் உறவாட விரும்பினான். லலிதினியின் வெறுப்பு முதன் முறையாகக் கிளம்பியது.

"இந்தா பாருங்க! கலியாணத்துக்கப்புறம் தோட்டம், ஆத்தா, என்டு திரிமிறத நான் விரும்பல்ல. நமக்கென்டு ஒரு ஸ்ரேரஸ் இருக்கு!" லலிதினியின் கோபத்தில் வார்த்தைகள் வெடித்தன.

"லலி, நா தோட்டத்தில பொறந்தவன்; லயத்தில வளந்தவன்; என் ஆத்தா கிள்ளின கொழுந்தில கிடச்சதுதான் இந்த மாஸ்டர் உத்தியோகம். என் ஆத்தா பெரிசு-தங்கச்சி பெரிசு-தோட்டம் லயம் எல்லாமே நான் தொட்டுக் கும்பிடவேண்டிய தெய்வங்கள். என்ன எவ்வளவு வேசா உனக்குத் தாரவாரித் தாங்க. நான் [illegible] நேசிக்கிறன். எப்பிடி மறக்க முடியும்?" சிவராசு படபடத்தான்.

"அப்போ என்ன மறந்திடுங்க!" அந்தச் சிரிப்பு சூறாவளியாகியது. சிவராசு அதிர்ந்து போனான்.

லலிதினி தொடர்ந்தாள், "உங்கலயம், ஆத்தா கூடை, கொழுந்து சீ... நினைச்சாலே வயித்தக்குமட்டுது. அந்தப் பக்கம் நான் தலவச்சுக்கூடப்படுக்கமாட்டன். டிஸ்கிறேஸ்!"

"நா அவங்கபுள்ள, என் ஆத்தா போட்ட பிச்சைதான், இந்த மாஸ்டர் வேலை!" சிவராசு கத்தினான்.

"அது கலியாணத்துக்கு முன் இப்ப நீங்க என் புருஷன்!"

சிவராசுவுக்கு வியர்வை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை பெருக்கெடுத்தது.

"லலி, தயவு செய்து நான் சொல்வதைக் கேள்!" சிவராசு பரிதாபமாகச் சொன்னான்.

"மாட்டேன். உங்களுக்கு நான் வேணுமா? அந்தப் பட்டிக்காட்டுத் தோட்டம் வேணுமா? முடிவு உங்கட கையில." லலிதினியின் வார்த்தைகள் வெட்டொன்று துண்டு இரண்டாய்த் தெறித்து விழுந்தன.

வெல்லமென வாழ்வை நம்பிய சிவராசு கல்லாக மாறினான். அவன் போட்ட மூன்று முடிச்சுகள் அவிழ்ந்தன. ■

# கடும் மோதல்

கிழக்கு இன்னும் நன்றாக வெளுக்கவில்லை. இருள் மூடியே இருந்தது. ஆலயடி வீதியில் வாகன இரைச்சலைத் தொடர்ந்து நாய்கள் குரைக்கும் சத்தமும் கேட்டது. கண் விழித்த ராஜம்மாவின் மனதில் பயம் இலேசாகக் குடியேறிக் கொண்டது.

படுக்கையில் இருந்த மகன் காந்தனை எழுப்பிவிட்டு கையோடு, பக்கத்து வீட்டு உதயனையும் எழுப்பிவிட்டாள். காந்தனும் உதயனும் 'ஏ/எல்' பரீட்சையை எழுதிவிட்டு முடிவை எதிர்பார்த்து இருப்பவர்கள். வறுமையைப் போக்க வயல்களில் கூலியாட்களாக வேலை செய்து வருகிறார்கள்.

காந்தன் அந்த அதிகாலையில் வீட்டுக்குள் இருந்த தனது துவிச்சக்கர வண்டியை வெளியே எடுத்து வேலியோரமாக இருந்த பனை மரத்தடியில் சாத்தினான். டயர்களை அமுத்திப் பார்த்தபோது காற்றுக் குறைந்து காணப்பட்டது. அவன் தாயிடம் 'பம்' (காற்றடிக்கும் உபகரணம்) எடுத்துத் தரச் சொன்னான். சமயல் வேலையில் இருந்த ராஜம்மாவும் 'பம்'ஐ எடுத்துக் கொடுத்தாள். மதிய வேளைச் சாப்பாட்டையும் காலையிலே எடுத்துச் செல்வதால், உணவைத் தயார் பண்ணுவதில் ராஜம்மா கவனம் செலுத்தலானாள்.

பொழுது நன்றாக விடிந்துவிட்டது. நேரம் போய்க் கொண்டிருப்பதால் காந்தன், டயர்களுக்கு காற்றை வேகமாக நிரப்பிக் கொண்டிருந்தான். கால்பகுதி தெரியும் படியாக அதுவும் இராணுவத்தினரின் கட்டளைப்படி கிடுகுகள் கட்டப்பட்ட வேலியாகையால் துவிச்சக்கர வண்டிக்கு காற்று நிரப்பிக் கொண்டிருந்த காந்தனின் கால்பகுதியை பதுங்கு நிலையில் இருந்த இராணுவத்தினர் கண்டு விட்டனர்.

ஏதோ புதுரக ஆயுதத்துடன் யாரோ பனைமரத்தில் பதுங்குவதாக கிலிகொண்ட இராணுவத்தினர் சரமாரியாகச் சுடத் தொடங்கினர்.

வெடிச் சத்தம் கேட்டதும் ராஜம்மா பதறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தாள். "ஐயோ.... என் மகன சுடாதீங்க கடவுளே! என் மகனக் காப்பாற்று" என கத்தியவாறு மகனை அணுக எத்தனித்த ராஜம்மாவின் தலைப்பகுதியை சீறிவந்த சன்னம் ஒன்று பதம் பார்த்தது. அவ்விடத்திலே சுருண்டு விழுந்தாள். அங்கே காந்தன் காலில்



தம்பிலுவில் ரதி

சூட்டுக் காயங்களுடன் முனகியவாறு கிடந்தான்.

அடுத்த நாள் தினசரிப் பத்திரிகையைப் புரட்டிய உதயனுக்கு தலை சுற்றியது. "நேற்றுக் காலை ஆலையடி வீதியில், இராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்குமிடையே இடம்பெற்ற கடும் மோதலில் ஒரு பெண் பயங்கரவாதி கொல்லப்பட்டார். இன்னுமொரு பயங்கரவாதி சூட்டுக் காயங்களுடன் பிடிபட்டார்!" என வெளியான செய்தியை மேற்கொண்டு வாசிக்க திராணியற்றவனாய் பத்திரிகையை அப்படியே மூடி வைத்துவிட்டு நாளைய நிலையை நினைத்தவாறு ஏக்கப் பெருமூச்செறிந்தான். ■

# பருவான்கரை

பருவான்கரை பதினொரு கிராமங்களுக்கும் கேட்கும் கோயில் இரட்டு மேளச் சத்தமும் மணியோசையும் கேட்டு வெகுநேரமாகப் போயிட்டு, இன்னமும் மாவிலங்க முனைத்துறையடிக்கு மீன் பிடிக்கப் போக, கூ...போடும் சத்தத்தக் காணல்லயே' யோசித்தவாறு பாக்கை வெட்டி வெற்றிலைக் குட்டானுக்குள் திணித்தவாறு முற்றத்தில் குந்தி இருந்தான் குறத்தி கந்தன்.

"சாச்சோ.." தூரத்தில் சத்தம் கேட்டதும் வலையைத் தூக்கி தோளில் போட்டவாறு வெளியேறி சந்தியில் நின்று கொண்டிருந்த கும்புறுகந்தனைப் பார்த்து, "என்ன மச்சான் விளாவெட்டுவான் கந்தனும், சலவைக் கந்தனும் வரல்லயா?" கும்புறுகந்தன் மீண்டுமொரு தரம் "சாச்சோ...." வெனக் கூவியதும், தூரத்தே இரண்டு சத்தங்கள் கூ....வெனக் கேட்டன. "ஆ... துறயடில நிக்கிறாங்க போலத் தெரியுது, போவம்...." என்றவாறு மாவிலங்கமுனைத் துறையடிக்குச் சென்றனர்.

நான்கு பேரும் ஆற்றில் இறங்கி கறிக்கு மீன் பிடித்து வீட்டுக்குத் திரும்பினர். "சாச்சா நீங்க முடிஞ்சி தந்த அத்தாங்கு பிஞ்சி போச்சி, புதுசொண்டு முடிஞ்சு தரணும்...."- குறத்திகந்தனைப் பார்த்துக் கேட்டான் கும்புறுகந்தன். "வயலுக்குப் போற வேலயும் இரிக்கி, நேரமிருந்தா செஞ்சிதாறன்."

"வெள்ளாம வட்ட வேலயெல்லாம் முடிஞ்சு போயித்து, மாடுகளைப் பாக்கிற வேலதான் இரிக்கி, முதியான் நாம்பனுகளப் பார்த்து விக்கணும், நாகுகளுக்குக் குறி வெய்க்கவுமில்ல, பஞ்சாங்கத்தில நல்லதா ஒரு நாளப் பாத்து மாட்டுக்கு குறி வெச்சி வந்திரணும், பொறகு மாடுகள் மாறுப்பட்டா ஒண்டுஞ் செய்யேலாது, நான் காலயடிக்குப் போகப்போறன் வாறண்டா வாங்க...." என விளாவெட்டுவான்கந்தன் குறத்திகந்தனையும் கும்புறுகந்தனையும் பார்த்துக் கேட்டான்.

"மாட்டுக்குக் குறி வைக்க நல்ல நாளாம் இண்டைக்கு, பூரண எண்டதால நானும் காலயடிக்குப் போய் மாட்டுக்கு குறி வெய்க்கப் போறன். பால இண்டைக்கு பால்க்காறனிட்ட குடுத்தனுப்புறன், கொண்டு வாற பாலக் காச்சி பெரிய சட்டியில ஊத்தி உறையப் போட்டு வை நாகம்மா; நம்மட ஆசுபத்திரி டாக்குத்தர் மாறிப் போறார், நாமும் நன்றிக் கடனுக்கு ஏதாவது குடுக்கத்தானே வேணும்? தயிர்ச் சட்டிய குடுப்பம்."

"நேற்றய தயிரெல்லாத்தயும் முல்லக் காரண்ட பொஞ்சாதிட்ட குடுத்து காத்தாங்குடியில வித்திட்டு வரச் சொல்லல்லயா...?" என்று குறத்திகந்தன் மனைவியிடம் கேட்கலானான். "... நேற்று ஊர் காவல்படய சுட்டதால அங்கிட்டுப் பக்கம் ஆருமே போகல்ல, அதுதான் தயிரெல்லாம் அப்படியே கிடக்கு," என்றாள் நாகம்மா.

"தலயில வெச்சி காத்தாங்குடிக்கு தூக்கிப் போறண்டா எவ்வளவு கக்கிசம், பாவம் பொன்னம்மா நேத்து களுவாஞ்சிக் குடிக்குப் போய், போகேலாம திரும்பி வந்திட்டாள், பஸ் ஓட்டமும் இல்லயாம்; கடயெல்லாம் அடச்சிக்கிடக்காம்; ரோட்டெல்லாம் ஆமிக்காரண்ட வாகனந்தான் போகுதாம்."

"கொத்தியாவலயில இருந்து மாவிலங்கு முனைத்துறையால அக்கரப்பட்டு மரம் கொண்டு போக நம்மட அகமது காக்காட மகன் இஸ்மாயில் வருவான், அவன் இண்டைக்கு கும்புறுகந்தன்ட ஊட்டுக்குப் போவான். அவனக் கூப்பிட்டு இரிக்கிற தயிரெல்லாத்தையும் குடுத்துவிடு. அவன் வராட்டி ஏறாவூரில இருந்து பல் புடுங்க இந்தப் பக்கம் வாற முஸ்லீம் பொண்டுகளிட்ட குடுத்துவிடு நாகம்மா. பாவம் அதுகள் கொண்டு சாப்பிடட்டும், நம்மட ஆக்களுக்கு குடுத்தா வாங்கவுமாட்டாங்க, அது தான் அவயளிட்ட இருக்கிதே!"

"துறையடிப்பக்கம் வெடிச்சத்தம் கேக்குது? தண்ணிச் சோத்தையும் தயிரையும் எடு நாகம்மா சாப்பிடுவம்." தண்ணிச் செம்பையெடுத்து கையையும் வாயையும் கழுவியவாறு, "சாப்பிட்டுத்து என்ன வெடிச் சத்தமெண்டு பாத்திட்டு வாறன் புள்ள." சோற்றைப் பிசைந்து உண்டு கொண்டிருந்தார் குறத்திகந்தன்.

"சாச்சா இரிக்காரா?" கும்புறுகந்தனின் சத்தம் வேலியோரப் பக்கம் கேட்க, "படலையில இரிக்கிற உழலைய எடுத்து ஓரமா வெச்சிற்று உள்ள வாவன்!" பதட்டமடைந்தவனாக உள்ளே வந்த கும்புறுகந்தன் "மண் முனைத்துறையடியில ஊராக்கள்ற உடுப்புகளத் தோய்த்துக் கொண்டிருந்த சலவைக் கந்தன சந்தேகத்தில சுட்டுட்டாங்களாம், ஆஸ்பத்திரிக்கு ஜீப்பில கொண்டு போறாங்க; நாமளும் போய் பாத்திட்டு நேரத்துக்கு வந்திடுவம்." ●



வீரமுனை வானவர்கோன்

# காதலும் இளமையும்

வாழ்க்கையின் விடியற் பொழுதில், ஓர் இளைஞன் தன்னந்தனி வீட்டில் தன் மேசையருகில் அமர்ந்திருந்தான்.

அவன், ஒளிமயமான விண்மீன்கள் பதிக்கப்பட்ட வானத்தை, சாளரத்தின் வழியாகப் பார்ப்பதும், அவ்வப்போது உள்ளே பார்வையைத் திருப்பி, தான் கையைப் பிடித்தபடி நிற்கும் பெண் படத்தைப் பார்ப்பதுமாக இருந்தான்.

அந்த ஓவியத்தின் கோடுகளும், வண்ணங்களும், தேர்ந்த ஓவியனின் திறமையைக் காட்டின. அவை அந்த இளைஞனின் மனதில் பிரதிபலித்து, உலகின் இரகசியங்களையும், நிரந்தரத்தின் மர்மங்களையும் திறந்து காட்டின.

ஓவியத்தில் இருந்த பெண், அந்த இளைஞனை அழைத்தாள். அப்போது அந்த இளைஞன் தன் கண்களைக் காதுகளாக மாற்றிக் கொண்டான், அந்த அறையில் உலவும் உயிரின் மொழியைப் புரிந்து கொள்வதற்காக. அவன் இதயம் காதலால் எரிந்தது.

இவ்வாறு, மணி நேரங்கள், அழகிய கனவின் ஒரு நொடிப் பொழுது போலவும், நிரந்தரத்தின் வாழ்வில் ஓர் ஆண்டு போலவும் கடந்து சென்றன. பிறகு, அவன் அந்த ஓவியத்தைத் தன் முன்னே எடுத்து வைத்தான்; தன் பேனாவை எடுத்தான்; தன் இதயத்தின் உணர்வுகளை எல்லாம் காகிதத்தில் வடித்தெடுத்தான்:

"என் ஆருயிரே, இயற்கை தரும், மனித அறிவுக்கு அப்பாற்பட்ட மாபெரும் உண்மை, ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பேச்சு மூலம் கடந்து செல்வதில்லை. உண்மை, தன் பொருளை, காதல் இதயங்களுக்கு, மௌனத்தின் மூலமே வெளிப்படுத்துகிறது.

இரு இதயங்களுக்கிடையில், இரவின் மௌனம்தான் சிறந்த தூது ஆகும். அது, காதலின் செய்தியை எடுத்துச் சென்று, இதயங்களின் தேவ கீதங்களை ஓதுகின்றது.

கடவுள் நமது உயிர்களை உடலின் கைதிகளாகப் படைத்திருப்பது போல, காதல் என்னைச் சொற்கள், பேச்சு ஆகியவற்றின் கைதியாக வைத்துள்ளது.

என் அன்பே, காதல், மனித இதயத்தைப் பற்றி எரியும் நெருப்பு என்று சொல்கிறார்கள். உன்னை முதன் முதலாக நான் சந்தித்தபோது, எத்தனையோ யுகங்களாக உன்னை அறிந்திருப்பதாக உணர்ந்தேன். உன்னைப் பிரியும் நேரத்திலும், நம்மைப் பிரிக்க எந்த சக்தியாலும் முடியாது என்பதை உணர்ந்தேன்.

"நான் உன்னைப் பார்த்த முதல் பார்வை, உண்மையில் முதல் பார்வை அல்ல. நமது இதயங்கள் சந்தித்துக் கொண்ட நேரம், நிரந்தரத்திலும், ஆன்மாவின் அழியாமையிலும் நம்பிக்கை கொள்ள உறுதிப்படுத்தியது.

அந்த நேரத்தில்தான்,இயற்கை, அடிமையின் திரையை விலக்கித் தன் எல்லையற்ற நீதியை ஒருவனுக்குக் காட்டுகிறது.

அன்பே, நாம் அமர்ந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தோமே, அந்த நீரோடை உன் நினைவிற்கு வருகிறதா? அப்போது,உன் விழிகள்-உன் காதல் கருணையால் பிறக்கவில்லை, நீதியால் பிறந்தது என்று தெரிவித்தது, உனக்குத் தெரியுமா?

தருமத்தால் எனக்குக் கிடைத்தவற்றைவிட, நீதியால் கிடைத்த பரிசுகள் மேலானவை என்று இப்போது நான் பிரகடனப்படுத்துகிறேன்.

வாய்ப்பின் குழந்தையாகிய காதல், சதுப்பு நிலங்களில் தேங்கிய நீர் போன்றது என்றும் கூடச் சொல்வேன்.

அன்பே, நமது முதல் சந்திப்பில் தொடங்கியதும், நிரந்தரத்தில் கலந்துவிடப் போவதுமான வாழ்க்கை, என் முன் விரிந்து கிடக்கிறது. இதைப் பெருமையும் அழகும் மிக்கதாக என்னால் உருவாக்க முடியும்.

இறைவன் எனக்கு அருள் செய்த சக்தியை,உன்னிலிருந்துதான் வெளிக் கொண்டு வர முடியும். அது சொல்லிலும் செயலிலும் உருவெடுத்துள்ளது;தோட்டத்து நறுமண மலர்களுக்கு இறைவன் உயிர் கொடுப்பது போல.

என் அன்பே, இவ்வாறு நீ என்றென்றும் இருப்பாய்!"

அந்த இளைஞன் மெல்ல எழுந்து, அந்த அறையின் குறுக்கே, மரியாதையுடன் நடந்தான். சாளரத்தின் வழியே வெளியே பார்த்தான். அடி வானத்தில் எழுந்த நிலா, அகன்ற வானத்தில் தன் மென் கதிர்களை நிறைத்துக் கொண்டிருந்தது.

பிறகு, அவன், தன் மேசைக்குத் திரும்பி, கீழ் வருமாறு எழுதினான்:

"என் அன்பே, என்னை மன்னித்து விடு, உன்னை இன்னொருவராகப் பேசுவதற்காக. நீ என்னுடைய அழகிய மறுபாதி. கடவுளின் புனித கரங்களிலிருந்து வெளிவந்த நாள் முதலாக எனக்குக் கிடைக்காத மறுபாதி. என்னை மன்னித்து விடு, அன்பே!" ■



கலீல் ஜிப்ரான்



படிப்பகம்

www.padippakam.com

# வீரமும் காதலும்

இலக்கிய நயம்

தருவது ரசிகன்



மணமான பின்னர் வந்த
முதல் புத்தாண்டு!

அவளுக்கும் இனித்தது.
அவனுக்கும் இனித்தது!

"நம்மை நாமே
ஆண்டு கொண்டதும் புதிது!
நம்மை நாடி வரும்
இந்த ஆண்டும் புதிது!"
என்றவன் இயம்பினான்.

"நான் எங்கே
உம்மை ஆண்டேன்?
ஆண்டதும் நீர்தான்
ஆட்டுவித்ததும் நீர்தான்!"
என்றவள் உரைத்தாள்.

"செங்கோல் ஆட்சி
என்னதாய் இருக்கலாம்.
கொடுங்கோல் ஆட்சி
உன்னதுதானே!"
என்றவன் சீண்டினான்.

"கொடுங்கோலாட்சியா?
கூறுங்கள் விளக்கமாக?"
வியப்புடன் வினா விழுந்தது.

எத்தனை இரவுகள்
வாட வைத்தாய்?
எத்தனை பகல்கள்
இரங்கவைத்தாய்?

இதழ் முத்திரைகூட
இல்லாமல்
நித்திரை இன்றி
தவிக்க வைத்தாய்!"
என்றவன் நடித்தான் மெய்போலே.

"அப்பப்பா,
எத்தனை அபாண்டம்!
இப்போதே
இத்தனை பொய் சொன்னால்
போகப் போக
பொய் மழை பொழியாதோ?"
வாய்பொத்தி மலைத்தாள்.

"இந்த புத்தாண்டை
முத்தாண்டாய் மாற்றிவிடு
சித்தம் இனிக்க
திரட்டிக் கொடு!
மெய் எல்லாம் சிலிர்க்க
பொய் மறப்பேன்!"
நிபந்தனை போட்டான்.

"முத்தாண்டாய் எப்படி
மாற்றுவதாம்?
முத்து குவியல்
கொட்டிக் கிடக்கிறதோ?"
தெரியாதது போல் வினா.

"முத்திலும் இனியது
உன் முத்தம்!
மொத்தமாய் கொடு
முழு நாளும்!"
என்று போட்டான்
இன்பமான விண்ணப்பம்.

"முத்தும் இல்லை
சொத்தும் இல்லை
பித்துத்தான் உண்டு
உமக்கு!" என்றாள்.

"பத்திரை மாற்று
சித்திரை நிலவே,
வார்த்தைகளாலே
குத்துகிறாயே!"

கன்னம் வருடி
காதினை வருடி
கிண்ணம் போன்ற
எழிலினைப் பருகி
பிண்ணிக் கொண்டான்
மின்னல் கொடியை!

கொடியும் இசைந்தது
தழுவிக் கிடந்தது!
கொட்டிக் கொடுத்தது
கோதி எடுத்தது!

இதுதான் மாயமா?
தினமும் மாயமா?
தேகம் முழுவதும்
தெப்பம் ஆகுமா?
இன்பக் கடலினில்
மிதந்து போகுமா?

"இத்தனை ஆசையா
இன்று நமக்கென்ன
புதிதா?"
என்றாள் வெட்கமாய்.

"ஆண்டும் புதிதுதான்
அனைத்தும் புதிதுதான்
ஆசை புதிதுதான்
ஆர்வம் புதிதுதான்"
என்றான் இன்பமாய்.

"என்றும் புதிதுதானோ?"
என்றாள்.

"நேற்றும் புதிதுதான்
இன்றும் புதிதுதான்
நாளையும் புதிதுதான்
ஆயுள் முழுவதும்
காதல் வாழ்க்கையில்
என்றும் புதிதுதான்!"
என்றவன் இயம்பினான்.

அவன் உரைத்தது
அவளுக்கு இனித்தது!
அவள் கால் எழுந்து
அவனை வளைத்தது!
காலும் காலும் கட்டிக்கொள்ள
இதழ்கள் மெல்ல
ஒட்டிக்கொண்டன!

அப்போதுதான் கேட்டது
போர் முரசம்!

பூவில் கிடந்த வண்டு
புரண்டது, எழுந்தது!

மதம் கொண்ட
யானையால் முறிக்கப்பட்டு
உண்ணப்படாத
கரும்பாய் கிடந்தாள்
கட்டழகி!

காதலில்
பித்தாகிக் கிடந்தவன்
வீரத்தில்
சத்தேறி நின்றான்!

கண்ணிமைக்கும் நேரத்தில்
கவச உடை தரித்து.
உடைவாள் அணிந்து
போர்ப் புயலானான்!

விரகத்தை
அவள் புதைத்தாள்!
தாபத்தை
அவள் புதைத்தாள்!

அழைப்பது தாயகம்,
அவனை
எப்படித் தடுப்பது?

பகைவந்து
வாசலில் நிற்கையில்
படுக்கையில் இன்பம்
எப்படித் துய்ப்பது?

அவசரம் இல்லையென்றால்
முரசம் ஒலிக்காது!

"புறப்படுங்கள்!"
என்றாள்!

அவனுக்கு
மகிழ்ச்சி ஓர் புறம்!
அவளை எண்ணி
வியப்பு மறு புறம்!

எட்டி வந்து
கட்டி அணைத்தாள்!
நெற்றி உரச
முகத்தோடு முகம்
பதித்தாள்!

நெற்றிகள் உரசியதில்
அவள் குங்குமத்திலகம்
அவன் நெற்றியில் சிரித்தது!

"வெற்றித் திலகம்
இட்டேன் பாரும்!
வாகை சூடி
வாரும் இங்கே!"

முத்தம் கொடுத்தவள்
மந்திரம் சொன்னாள்!

களத்தில் நிற்கையில்
அவள் சொன்னதே
காதினில் ஒலித்தது!

'வெற்றி, வெற்றி, வெற்றி'
புயலாய் பொருதினான்.

களத்து மேட்டில்
ஓய்வாய் இருந்த பொழுதில்
நண்பன் கேட்டான்:
"முத்தம் இல்லா
யுத்தம் இனிக்குமா
உனக்கு?"

"போடா முட்டாள்!
காதலனுக்கு
முத்தம் வாங்காத
நாள் மோசம்!
வீரனுக்கு
விழுப்புண் படாத
நாள் விரயம்!"

"நீ வீரனா காதலனா?"
அவன் கேட்டான்.

முதலில் வீரன்
பின்னர்தான் காதலன்!
தவிர.."
என்று நிறுத்தினான்.

"என்ன தவிர?"
என்றான் நண்பன்!

வீரர்களைத்தான்
எங்கள் பெண்களும்
காதலிக்கிறார்கள்!
நான் வீரனாயிருப்பதால்தான்
காதலனாயிருக்கிறேன்!"
என்றான் பெருமையாக!

விழுப்புண்படாத நாளை
விரயமாக எண்ணும் வீரனை
திருவள்ளுவரும் காட்டுகிறார் பாரீர்

"விழுப்புண் படாதநாள் எல்லாம்
—வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து"

அதிகாரம் 78- குறள்:776

ஸ்போர்ட்ஸ்

## ரணதுங்கவுக்கு விருது

"நான் எனது தனிப்பட்ட பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்படவில்லை. எங்கள் அணியிலுள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து- நாங்கள் ஒரு பெரிய குடும்பம். எனக்களிக்கப்படும் மதிப்பு நான் சார்ந்த அணியினர் ஒவ்வொருவருக்குமே உரித்தானதாகும்."



இவ்வாறு 'சென்ற வருடத்தின் சிறந்த மனிதன்' என்ற விருதினைப் பெற்ற அர்ச்சுன ரணதுங்க கூறியிருந்தார். 'மிட் வீக் மிரர்' என்ற ஆங்கில வார ஏடே திரு. ரணதுங்கவுக்கு இவ்வரிய விருதினை வழங்கியது.

"உலகக் கோப்பைக்காக நாங்கள் விளையாடுவதற்கு ஒரு தோதான அணியை எமது கிரிக்கெட் சபையே அமைத்துத் தந்தது. அணியிலுள்ள அனைவரும் சிறப்புக் குறையாமல் ஆடினர். ஆகவே 'இவ்வருடத்துக்கான மனிதர்கள்' என்று எங்கள் அணியினர் அனைவரையுமே கூறலாம்!" என்றும் ரணதுங்க தெரிவித்திருக்கிறார்.

## 'பந்தாட்டம் பார்க்கவேண்டும்!'

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் 200 பாடசாலை மாணவர்கள் சென்ற மாத இறுதியில் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

வரும் ஜூன் மாதம் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி தொடங்குகிறது. பங்களாதேஷில் மே மாதம் இறுதி முதல் ஜூன் வரை 12ம் வகுப்பு மாணவர்களுக்கான வருடாந்தரப் பரீட்சைகள் ஒரு மாதம் நடக்கின்றன.

இந்த நேரத்தில் கால்பந்துப் போட்டிகளை தொலைக்காட்சி மூலம் பார்க்க முடியாது என்பதால், "உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் முடிவடைந்த பின்னர் பரீட்சைகளை நடத்த வேண்டும்!" என்று கோரி போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தின்போது டாக்கா நகரில் 20 கார்களை மாணவர்கள் சேதப்படுத்தியுள்ளனர்.

பங்களாதேஷில் கால்பந்து ஒரு பிரபலமான விளையாட்டு. இருப்பினும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளில் பங்களாதேஷ் அணி விளையாடத் தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பகல் இரவுப் போட்டிகள்

இந்தியா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகள் பங்குகொள்ளும் 'கொக்கோ கோலா' கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் ஷார்ஜாவில் இம் மாதம் 17ம் திகதி முதல் 24ம் திகதி வரை பகல்-இரவுப் போட்டிகளாக நடைபெறவுள்ளன.

லீக் முறையில் நடக்கும் இந்தப் போட்டியில் அதிக புள்ளிகள் பெறும் இரண்டு அணிகள் இறுதியாட்டத்தில் பங்கேற்கும். இப்போட்டியில் கோப்பையை வெல்லும் அணிக்கு 25 இலட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கும்.

இரண்டாவதாக வரும் அணிக்கு 15 இலட்சம் ரூபாயும், மூன்றாவதாக வரும் அணிக்கு 10 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

இவற்றைவிட ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவாகும் வீரருக்கு 65 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இறுதி ஆட்டத்தில் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவாகும் வீரருக்கு 95 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

இது தவிர சிறந்த துடுப்பாட்டக்காரர், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

இப்போட்டியில் பங்கேற்க நியூஸிலாந்து அணி 13ம் திகதி ஷார்ஜா செல்கிறது. அவுஸ்திரேலிய அணி 15ம் திகதியும், இந்திய அணி 16ம் திகதியும் ஷார்ஜா செல்கின்றன.

இப்போட்டிகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

ஏப்ரல் 17- இந்தியா எதிர் நியூஸிலாந்து
ஏப்ரல் 18- அவுஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து
ஏப்ரல் 19- இந்தியா எதிர் அவுஸ்திரேலியா
ஏப்ரல் 20- இந்தியா எதிர் நியூஸிலாந்து
ஏப்ரல் 21- அவுஸ்திரேலியா எதிர் நியூஸிலாந்து
ஏப்ரல் 22- இந்தியா எதிர் அவுஸ்திரேலியா
ஏப்ரல் 23- ஓய்வு நாள்
ஏப்ரல் 24- இறுதிப்போட்டி.

## சிந்தியா பதில்கள்

* கொழும்பு கைதுகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளுடன் பேசவுள்ளார்களாமே?

இ. ராஜேஸ்வரன், கொழும்பு-09.

இருக்கும்வரை செருப்பால் அடித்துவிட்டு போகும்போது வாழைப்பழம் கொடுப்பது மாதிரியானதுதான் இந்தப் பேச்சுக்கள். முடியுமானவரை அவமானப்படுத்திவிட்டு மாநாடாம்..... பரிசீலனையாம்! இன்னொரு அவமானப்படுத்தலுக்கு பின்னர் மீண்டும் ஒரு மாநாடு: மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை!

* சிந்தியா! கூட்டணியினர் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவர உள்ளார்களாமே?

என். பிரகாஷ், திருமலை.

"அரசு புலிகளுடன் பேசாவிட்டால் அரசைக் கவிழ்க்கவும் தயங்கோம்!" என்றார் ஜோசப் பரராஜசிங்கம். தடையே போட்டுவிட்டது அரசாங்கம், பரா என்ன செய்தார்? பாராமுகமாகத்தானே இருக்கிறார்! அப்படியொரு வெத்து வேட்டுத்தான் இதுவும்! பேசாமல் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளலாமே? தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவானேன்?

* இன்றுகூட அரச விருந்துகள், விழாக்களில் தமிழ் அரசியல் கட்சிகள் கலந்து கொள்வது ஏன்?

திருமதி தங்கா கிருஷ்ணன், மட்டக்களப்பு.

பெயரில் மட்டும் தமிழ்க் கட்சிகளாக இருப்பதால்!

* பணக்காரர்களுக்கு நிம்மதியான தூக்கம் வராது என்று சொல்வது ஏன் சிந்தியா?

கி. ரகுராம், கொழும்பு-11.

ஒரு பெரிய ராஜா இருந்தார். சகல வசதிகள் இருந்தும், ஆள், அம்பு, சேனை இருந்தும் நிம்மதி மட்டும் கிடைக்கவில்லை.

நிம்மதி எங்கே கிடைக்கும்? என்று தேடினார். ஊரில் உள்ள மேதைகளையெல்லாம் அழைத்துக் கேட்டார். சரியான பதில் கிடைக்கவில்லை.

ஒருநாள் மாளிகை உப்பரிக்கையில் அவர் நின்று கொண்டிருந்தபோது, தெருவிலே ஒரு பிச்சைக்காரன் உல்லாசமாகப் பாடிக்கொண்டு சென்றான். அவனிடம் கொஞ்சம் கூட கவலை இருந்ததாகத் தெரியவில்லை.

ஏவல் ஆட்களைவிட்டு பிச்சைக்காரனை அழைத்தார். "நீ பாடிக்கொண்டு கவலைப்படாமல் சந்தோஷமாகப் போகிறாயே, உன்னால் எப்படி முடிகிறது?" என்று கேட்டார்.

பிச்சைக்காரன் கடகடவென்று சிரித்தான். "மகிழ்ச்சிக்கும் உங்களுக்கும் தடையாக இருக்கிறது இந்த மாளிகைதான். இதை விட்டு வெளியே வந்தால் நிம்மதி உங்களைத் தேடிவரும்!" என்றான்.

"நான் அரசன் எனக்கென்று கடமைகள் இருக்கின்றன. அதையெல்லாம் விட்டு எப்படி வரமுடியும்?" என்றார் ராஜா.

"இரண்டும் ஒரே நேரத்தில் கிடைக்க வேண்டும் என்றால் அது முடியாத காரியம். உங்கள் சுகபோகத்துக்கு விலையாகத்தான் உங்கள் நிம்மதியைக் கொடுத்துள்ளீர்கள். என்னைப் பாருங்கள். என்னிடம் எதுவும் இல்லை. அதனால் எதுவும் போய்விடுமோ என்ற பயமும் இல்லை. நிம்மதியாக இருக்கிறேன்!" என்றான்.

ராஜா உடனே சந்தோசப்பட்டு தன்னுடைய மேலங்கியை எடுத்து பரிசாகக் கொடுத்தார்; அவன் மறுத்துவிட்டான்.

"இதை நீங்கள் எனக்குக் கொடுத்தால் எந்தப் பயனும் இல்லை. அதே நேரத்தில் இதனைப் பெற்றேன் என்றால், அடுத்த விநாடி முதல் இதை எப்படிப் பாதுகாப்பது என்ற கவலை வந்துவிடும். பின்னர் தூக்கம் வராது. நிம்மதி போய்விடும்!" என்று சொல்லிவிட்டு பாடிக்கொண்டே நடையைக் கட்டினான்.

* இந்திய அணி அசார் தலைமையில் அசத்துகிறதே?

பி. ஸ்ரீதர், கண்டி.

ஆனால் இந்திய சஞ்சிகை ஒன்று என்ன சொல்கிறது தெரியுமா? 'அசார் ஆரம்பத்தில் வெற்றிக் கனியாக பறித்துத் தருவார். பின்னர் போகப்போக காய்தான்,' என்கிறது. எதற்கும் பொறுத்திருந்து பார்க்கலாம். ஆயினும் இந்திய அணியில் இளரத்தங்கள் சூடாக இருப்பதாகத்தான் தெரிகிறது. உதாரணம்; கனிஷ்டர்.

* தமிழ்க் கட்சிகளை நம்பி வாக்களித்த மக்களைப் பற்றி உமது அபிப்பிராயம்?

சி. குலசேகரம், யாழ்ப்பாணம்.

ஓர் இடத்தில் பல இன மக்களுடைய மூளைகளை ஒரு போத்தலில் போட்டு வைத்திருந்தார்கள். விலையும் போடப்பட்டிருந்தது.

'இது இந்த இன மூளை, விலை நூறு டொலர்', 'இது அந்த இன மூளை விலை இருநூறு டொலர்' இப்படியே போடப்பட்டிருந்தது.

ஒரே ஒரு போத்தலில் மட்டும் விலை ஆயிரம் டொலர் என்று போட்டிருந்தது.

உடனே நம்ம ஊர்க்காரர் அதன் அருகே போய், "இது எந்த இன மூளை?" என்று கேட்டார்.

"இது உங்க இன மூளைதான்!" என்றார். நம்ம ஊர்க்காரருக்கு ஒரே ஆச்சரியம். "ஏன் இத்தனை விலை?" என்று கேட்டார்.

கடைக்காரர் சொன்னார்:

"உங்கள் இன மூளைதான் அதிகமாக உபயோகப்படுத்தாத மூளை!"

* மனிதன் தெய்வமாகினால், தெய்வத்துக்கு என்ன வேலை?

க. புவனேஸ்வரி, வவுனியா.

மனிதனாகி கெட்டுப்போகிற வேலை!



'ஆனந்தம் ஆனந்தம்' படத்தில் அம்சவிர்தன்-ரேஷ்மா

* சிந்தியா! இலஞ்சத்தை ஒழிக்கவே முடியாதா?

வி. தேவிகா, மாத்தளை.

அரச அலுவலகம் ஒன்றில் புதிதாக வேலைக்கு சேர்ந்தார் ஒருத்தர். முதல்நாள், முதன் முதலாக நாற்காலியில் அமர முன்பாக ஒரு சபதம் எடுத்துக் கொண்டார்.

"நான் இலஞ்சம் வாங்கமாட்டேன்!"

சபதத்துடன் அவர் நாற்காலியில் அமரச் சென்றபோது, "அமராதே அமராதே!" என்று கத்தியது நாற்காலி.

"ஏன்?" என்று கேட்டார். உடனே நாற்காலி சொன்னது:

"ஏனென்றால் நானே இந்த அலுவலகத்துக்கு இலஞ்சமாக வந்து சேர்ந்த நாற்காலிதான்!"

* ரூபவாஹினியில் 'ரேவதி' நாடகம் மீண்டும் ஒளிபரப்பாகிறதா?

ஆர். சத்யரூபி, தெகிவளை.

ஆம்! ஆனால் எல்லோரும் கண்டு இரசிக்கக்கூடிய ஞாயிறு நாளில் அல்ல. முன்னர் 'ரேவதி' ஒளிபரப்பான நேரத்தில் மட்டமான அறுவையால் தமிழ்பேசும் மக்களது பொறுமையைச் சோதிக்கிறார்கள்.

* தமிழ்த் திரையுலகில் புது நடிகர்களின் வரவு மட்டும் குறைவாக உள்ளதே ஏன்?

எஸ். ஜெரோம், சிலாபம்.

வரவு உண்டு: நிலைப்பதுதான் அரிது. ஆயினும் 'மொழு மொழு' என்று புது இளம் நடிகர்கள் இப்போது புகுந்திருக்கிறார்கள். அம்சவிர்தன் (ரவிச்சந்திரன் வாரிசு) எபி, மனோஜ் என்று பட்டியல் நீள்கிறது.

* பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தால் என்ன?

ஏ. தர்ஷிகா, நுவரெலியா.

அக் கட்சிகளுக்கு அரச தரப்பு விருந்துக்கு அழைப்பு இருக்காது!

* அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து கூட்டணி வாக்களிக்கிறது; ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏன் எதிர்க்கவில்லை?

ஆ. சாம்பசிவம், யாழ்ப்பாணம்.

கூட்டணி அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கிறது. ஆனால் ஏனைய வாக்களிப்புக்களில் அரசை ஆதரிக்கிறது. எனினும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் ஒப்பிடும்போது, கூட்டணி அதையாவது செய்கிறதே! என்று நினைக்கத் தோன்றுகிறது.

* 'ஆச்சி இண்டர் நாஷனல்'லில் மனோரமாவின் நடிப்பு?

எல். பவானி, கொழும்பு-11.

எப்போதுமே அவர் பொம்பளை சிவாஜிதான்!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் போது நெறி 4

## யாக்கோபின் மகன் யோசேப்பு

ஆண்டவரின் பேரன்புக்குப் பாத்திரரான ஆபிராமுக்கு ஆண்டவரே ஆபிரகாம் என்று பெயரிட்டழைத்தார். அவரின் மனைவி சாரா காலமானதும், அவருடைய சடலத்தை, கானான் தேசத்தில் வாழ்ந்த இத்தியர் சமூகத்தைச் சேர்ந்த எப்ரோனுக்குச் சொந்தமான மக்பேலா குகையை விலைக்கு வாங்கி அதில் அடக்கம் செய்தார், ஆபிரகாம்.

ஆபிரகாம் தனது மகனான ஈசாக்குக்கு கானானியர் சமூகத்தில் பெண் எடுக்க விரும்பவில்லை. தனது உறவினர்கள் வாழ்ந்த நாகோர் நகருக்கு தனது வேலையாள் ஒருவனை அனுப்பி வைத்தார். அங்கு பெத்துவேல் என்பவரின் மகளான பேரழகி ரெபேக்காவை ஆபிரகாம் அனுப்பிய வேலையாள் தெரிவு செய்து அழைத்து வந்தார். ஈசாக் ரெபேக்காவை மணம் முடித்து இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

ஆண்டவரின் அருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்ற ஆபிரகாம் முதுமையடைந்தார். அவர் இறந்ததும் அவருடைய மனைவி சாரா அடக்கம் செய்யப்பட்ட மக்பேலா குகையில் அடக்கம் செய்யப்பட்டார்.

ஈசாக்கின் மனைவி ரெபேக்காவும் நீண்ட காலம் குழந்தைப் பேறில்லாமல் துயரடைந்தார். இருவரும் ஆண்டவரை இடைவிடாது துதித்ததன்பேரில் ரெபேக்கா கருவுற்று இருபுதல்வர்களை ஈன்றெடுத்தார். இரட்டையர்களாகப் பிறந்த இவர்களுக்கு ஏசா, யாக்கோபு என்று பெயரிட்டனர். இவர்களில் ஏசாமீது தந்தையாகிய ஈசாக்கும் யாக்கோபின் மீது, தயாராகிய ரெபேக்காவும் அதிக அன்பு செலுத்திவந்தனர்.

இருபுதல்வர்களும் வளர்ந்து வாலிப வயதை அடைந்ததும் ஏசா- ஈசாக்குக்கும் ரெபேக்காவுக்கும் பிடித்தமில்லாத இரு பெண்களை மணந்தார். இதனால் இருவரும் ஏசாவை வெறுத்தனர். யாக்கோபை அழைத்த ஈசாக்கு, அவரை அவருடைய தாய் வழிப் பாட்டனாரான பெத்துவேலிடம் அனுப்பி வைத்தார். ரெபேக்காவுக்கு லாபான் என்றொரு சகோதரனும் இருந்தார். லாபானுடைய புத்திரிகளான லேயா மற்றும் ராகேல் ஆகிய இருவரையும் யாக்கோபு மணந்து கொண்டார்.

### யாக்கோபின் புதல்வர்கள்

யாக்கோபு தனது மனைவியர் இருவரில் இளையவளும் அழகியுமான ராகேலிடம் அதிக அன்பு பாராட்டினார். ஆனால் அவளுக்குக் குழந்தைச் செல்வம் கிட்டவில்லை. லேயா ஆண்டவரைத் தொழுது தன் கணவர் தன்னை வெறுப்பதைப்பற்றி முறையிட்டு அவருடைய அன்பைப்பெற அருளுமாறு வேண்டினாள். ஆண்டவரின் அருளினால் லேயா கருவுற்றாள். பிறந்த முதல் குழந்தைக்கு ரூபன் என்று பெயரிட்டாள். தொடர்ந்து மேலும் இரு ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். அவர்களுக்கு முறையே சிமியோன் என்றும் லேவி என்றும் பெயர் சூட்டினாள். இதுமட்டுமல்லாமல் ராகேலின் பணிப்பெண் மூலமும் யாக்கோபு பல பிள்ளைகளுக்குத் தந்தையானார். தனது குடும்பத்தாரையும், வேலையாட்களையும், கால்நடைகளையும் அழைத்துக் கொண்டு தனது தந்தையாரான ஈசாக் வாழ்ந்த கானான் நாட்டுக்கு வந்து சேர்ந்தார். இவருக்கு ஆண்டவர் இஸ்ரயேல் என்ற பெயரைச் சூட்டினார்.



இஸ்ரயேல் முதியவராக இருந்தபோது யோசேப்பு என்றொரு மகன் பிறந்தான். இம்மகன்மீது இஸ்ரயேல் என்ற யாக்கோபு அளவற்ற அன்பு கொண்டிருந்தார். யோசேப்பு மீது தங்கள் தந்தை மிகுந்த அன்பு வைத்திருந்தமையால் அவருடைய ஏனைய பதினொரு பிள்ளைகளும் யோசேப்புமீது பொறாமை கொண்டிருந்தனர். இஸ்ரயேல் பல வண்ணமுள்ள அழகான ஆடை ஒன்றையும் தயாரித்து யோசேப்புக்குக் கொடுத்தார். இத்தகைய செயல்களால் யோசேப்புக்கு பலதரப்பட்ட தீங்குகளையும் சகோதரர்கள் விளைவித்தனர். சகோதரர்கள் பன்னிருவரும் ஒன்றாக ஒரே இடத்தில் மந்தைகளை மேய்க்கச் சென்றாலும் யோசேப் மீது ஏனையவர்கள் பாரபட்சமாகவே நடந்தனர்.

### யோசேப்பு கண்ட கனவுகள்

ஒரு நாள் யோசேப்பு தான் கண்ட கனவைப் பற்றி தனது சகோதரர்களிடம் கூறினார். "வயல் வெளியில் கதிர்களை நாம் அனைவரும் அறுத்துக் கட்டுக்களாகக் கட்டிக் கொண்டிருந்தோம். அப்போது நான் அறுத்துக் கட்டிய கதிர் கட்டு மட்டும் எழுந்து நின்றது. நீங்கள் அறுத்துக் கட்டிய பதினொரு கட்டுக்களும் எனது கட்டுக்கு முன் தரையில் வீழ்ந்து வணக்கம் செலுத்தின," என்று தனது கனவைப் பற்றிக் கூறியதைக் கேட்ட அவனுடைய சகோதரர்களுக்கு யோசேப் மீது கடுங்கோபம் உண்டாயிற்று.

"அவ்வாறானால் நீ எங்களெல்லோரையும் உன் அடிமைகளாக்கி அதிகாரம் செலுத்தப் போகிறாயோ?" என்று யோசேப்புவைத் திட்ட ஆரம்பித்தனர். தான் கண்ட மற்றுமொரு கனவைப் பற்றியும் யோசேப் மற்றொரு தடவை தெரிவித்தார்.

"கதிரவனும் நிலவும் பதினொரு விண்மீன்களும் என்னைச் சுற்றி நின்று வணங்குவது போல் அக்கனவு அமைந்தது," என்றார். இதைப்பற்றி தனது தந்தையாராகிய யாக்கோப்பிடமும் யோசேப்புக் கூறினார்.

யாக்கோபு இதனைக் கேட்டு மகனைக் கண்டித்தார். "அவ்வாறானால் உன் தாயாரும் நானும் உன் சகோதரர்களும் உன் தாள் பணிந்து வணங்கப் போகிறோமா?" என்று சற்றுக் கோபத்துடனே கேட்டார்.

யோசேப்பின் சகோதரர்கள் செக்கேமில் என்ற இடத்தில் ஆடுகளை மேய்க்கச்சென்றிருந்தனர். அவர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வரும்படி இஸ்ரயேல் யோசேப்பை அனுப்பி வைத்தார். யோசேப்பு தங்களை நோக்கி வருவதைக் கண்ட சகோதரர்கள் யோசேப்பைக் கொன்றுவிடத்திட்டமிட்டனர். ஆனால் இவர்களில் மூத்தவனான ரூபன், தன் இளைய தம்பியைக் கொல்வதை விரும்பவில்லை. "அவனைக் கொல்லாமல் ஒரு பள்ளத்துள் போட்டுவிடுவோம்; அப்பாவிடம் போய் யோசேப்பை ஒரு கொடிய விலங்கு தின்றுவிட்டது என்று கூறிவிடலாம்," என்றார். மற்றவர்களும் அதற்கு ஒப்புக்கொள்ளவே யோசேப்பின் பல வண்ணச் சட்டையை உருவி எடுத்துவிட்டு பள்ளத்துள் தூக்கிப் போட்டுவிட்டனர்.

இதேவேளை மிதியான் நாட்டு வணிகர்கள் ஒட்டகங்களில் ஏராளமான பொருட்களை ஏற்றிக்கொண்டு போவதைக் கண்டனர். அவர்களிடம் தங்கள் தம்பியான யோசேப்பை விற்றுவிடலாம், என்று திட்டமிட்டனர். ஓடிச் சென்று அவர்களை வழிமறித்து அழைத்து வந்து யோசேப்பைக் குழிக்குள்ளிருந்து தூக்கி எடுத்து இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுவிட்டனர். வணிகர்கள் தங்கள் ஒட்டகம் ஒன்றில் யோசேப்பை ஏற்றிக்கொண்டு எகிப்து நோக்கிப்பயணத்தைத் தொடர்ந்தனர்.

### சகோதரர்கள் கூறிய பொய்

யோசேப்பைக் குழிக்குள்ளிருந்து எடுத்து வணிகர்களுக்கு விற்றுவிட்ட சம்பவம் ரூபனுக்குத் தெரியாது. தனது தம்பியைக் காப்பாற்றுவதற்காக குழிக்குள்சென்ற ரூபன் தம்பியைக் காணாது கவலைப்பட்டார்.

ஏனைய சகோதரர்கள் யோசேப்பின் உடையில் ஒரு ஆட்டின் இரத்தத்தைத் தடவி எடுத்துக்கொண்டு போய் தந்தையாகிய இஸ்ரயேலிடம் காண்பித்தனர். யோசேப்பை ஒரு கொடிய மிருகம் தாக்கிக்கொன்றுவிட்டதாகவும், அவன் அணிந்திருந்த உடை இரத்தக்கறையுடன் வழியில் கிடந்ததாகவும் பொய் கூறிவிட்டனர்.

இஸ்ரயேல் தனது அன்புக்குப் பாத்திரமான மகன் யோசேப்பு இறந்து விட்டதை நினைத்து மிகவும் துன்பப்பட்டு அழுது புரண்டார்.

மிதியானிய வணிகர்கள் அழைத்துக் சென்று யோசேப்பை எகிப்து நாட்டு மன்னன் பார்வோ னின் தளபதிகளுள் ஒருவரான போத்திபார் என்பவருக்கு விற்றுவிட்டனர்.

எகிப்து நாட்டுக்குச் செல்லும்போது யோசேப்புக்கு வயது பதினேழுதான்.

குற்றங்கள் எதுவுமே செய்யாத இளைஞனான யோசேப்பு தனது சகோதரர்களின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டார். தந்தை இஸ்ரயேலரின் பேரன்புக்குப் பாத்திரவாளியாக இருந்தமையினால், பொறாமை பிடித்தவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உடல் ரீதியான துன்பங்களுக்கும் உட்படுத்தப்பட்டார். ஆனால் ஆண்டவர் அவரைக் கை விடவில்லை.

மிதியானியருடன் பாலைவனத்தினூடாகச் செல்லும்போது,யோசேப் அந்தப் பிரதேசத்தின் கொடிய வெப்பத்தையும் அனுபவிக்க வேண்டியதாயிற்று. ஆனால் எகிப்து நாட்டைப் போய் அடைந்த யோசேப்புக்கு குளிர்ச்சியும் மகிழ்ச்சியும் காத்திருந்தன.

யோசேப்பை மிதியானிய வர்த்தகர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்ட போத்திபார் யோசேப்பை ஓர் அடிமை போல் நடத்தவில்லை. தனது இல்லத்திலேயே தனது குடும்ப உறுப்பினரைப்போல நடத்தலானார். இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. யோசேப்பு அந்த இல்லத்துக்கு வந்து சேர்ந்த நாளிலிருந்து அவ்வில்லம் பல வழிகளிலும் சிறப்புற்றது. ஆண்டவர் யோசேப்பின் ஒவ்வொரு செயலிலும் துணைபுரிந்தார். இதனால் யோசேப்பு தொட்டதெல்லாம் துலங்கிற்று. அந்த இல்லத்தில் எந்தத் துன்பமும் தலைகாட்டவில்லை.

போத்திபாரின் வயல்கள் அமோக விளைச்சலைக் கண்டன. ஆடு மாடு முதலான கால்நடைகளும் பெருகின. செல்வவளம் சிறப்புற்றது. போத்திபாரின் செல்வாக்கும் உயர்ந்தது. ஆண்டவரின் ஆசீர்வாதத்தினால் இத்தகைய வளமெல்லாம் பெருகின. யோசேப்பின் வருகையினைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களைக் கண்ட போத்திபார், சாதாரண வேலையாளாக இருந்த யோசேப்பை, தனதுடமைகள் எல்லாவற்றையும் நிர்வகிக்கும் பொறுப்பாளராக நியமித்தார்.

அந்த இல்லத்திலும் போத்திபாரின் தோட்டம், வயல் மற்றும் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுழைத்த பணியாட்கள் யோசேப்பின் அறிவுரைகளைக் கேட்டுக் கீழ்ப்படிந்து நடந்தனர். அவர்கள் மத்தியில் எந்தத் தகராறுகளும் தோன்றாமல், ஒற்றுமையுடன் அவர்கள் செயலாற்றினார்கள்.

ஆண்டவர்மீது பக்தி செலுத்தி, நிறைந்த மனத்துடனும் கள்ளங்கபடமில்லாமலும் வாழ்ந்த யோசேப்பு நல்ல ஆரோக்கியமான- அழகான வாலிபனாக வளரலானார்.

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும், உயர்வும் தாழ்வும், நன்மையும் தீமையும், மாறிமாறி வருவது இயல்பு. மாற்றுக் குறையாத தங்கமேயானாலும் அதனை எரியும் நெருப்பில் போட்டுத்தான் மென்மேலும் தூய்மைப்படுத்துவார்கள். இது உலக நியதி. இதற்கேற்ப யோசேப்புக்கும் சில தவிர்க்க முடியாத சோதனைகள் குறுக்கிட்டன.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரி

**திருமறை ② விடை: சேம், காம், எப்பேத்து.**

**பரிசு பெறுவோர்:**

1. மா. கொட்வின், டயகம மேற்கு, 3ம் பிரிவு, டயகம.
2. ஆர். விஜயகுமாரி, மாநெலி தோட்டம், சாமிமலை.
3. கௌரி சங்கர், 79, யாழ்வீதி, வவுனியா.
4. ஏ.எச். யசீர், அஸ்ஸலம் மகா வித்தியாலயம், றக்வானை.
5. டிமரோன் க்ஷ்வாலோ, 17வது ஒழுங்கை, கல்லூரி வீதி, கொழும்பு-13.

**திருமறை 04 வினா:-** யாக்கோபின் பிள்ளைகள் எத்தனைபேர்?

ஏப்ரல். 18க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 04 —தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

**ப**த்திரிகையாளர்: ஐயா! வணக்கம்!

தலைவர்: வணக்கம். வணக்கம்.

பத்: விஷயம் கேள்விப்பட்டீர்களா?

தலை: என்ன எங்கேயாவது குண்டு கிண்டு வெடித்துவிட்டதோ?

பத்: இல்லையில்லை, முன்னூறு பேர் கைதாம். இரவு உடையுடன் பெண்பிரசுகளைப் பிடித்து மைதானத்திலே நிறுத்தி வைச்ச வேடிக்கை பார்க்கினம்.

தலை: படம்பிடிச்சவையோ?

பத்: வீடியோ கமராவில் பிடிச்சிருக்கினம்.

தலை: (சிரிக்கிறார்) பார்த்தீரோ முந்தி சும்மா சாதாரண கமராக்களில் பிடிச்சவையல்லோ. நான் மேலிடத்தோடு கதைச்சனான். அதுதான் இந்தமுறை வீடியோக் கமராவில் பிடிச்சிருக்கினம்.

பத்: அண்ணே, அப்படியானால் இதைப் பற்றியும் கதையுங்கோ. அடுத்தமுறை ஹொலிவூட்டில் படம் எடுக்கிற கமராவில் எடுக்கட்டும். சரி, ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களோ?

தலை: எதைப்பற்றி?

பத்: ஆட்கள் கைதானது பற்றி?

தலை: எத்தனை பேரை பிடிச்சவை என்று சொன்னனீர்?

பத்: (சலிப்பாகி) முன்னூறுபேரை.

தலை: சரி, எழுதிக் கொள்ளும்: இதனை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். கைதான அனைவரையும் விடுதலை செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று ஃபக்ஸ் ஒன்றும், பத்துப் பக்க காட்டமான அறிக்கை ஒன்றும் உடனடியாக அனுப்பப்பட்டுள்ளது.

மேலதிகாரிகளுடனும் இன்று அதிகாலையிலேயே தொடர்பு கொண்டு பேசியிருக்கிறேன். முன்னூறுபேரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு கூறியிருக்கிறேன்.



பத்: கைதான முன்னூறுபேரில் முப்பது பேரை விடுதலை செய்து போட்டினம்.

தலை: முப்பது பேரைத்தானே. அது எனக்கும் தெரியும். நான் மேலிடத்தோடு பேசித்தான் உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



பத்: ஐயா!

தலை: என்ன?

பத்: தகவலைச் சொன்னவனே நான் தானே. எனக்கே அல்வா கொடுக்கிறீர்களே? நீங்கள் எங்கேயோ போய் விட்டீர்கள்!

தலை: நாங்கள் எங்கேயோதான் போய் நிற்கிறோம். இன்னமும் போய்க் கொண்டேடேடேடே இருப்போம். ஹி.ஹி.ஹி. வணக்கம். வேறு ஏதாவது செய்தி இருந்தால் அவ்வப்போது தெரிவியுங்கள். அப்பதான் அபிப்பிராயம் சொல்ல வசதியாக இருக்கும்.

***

பத்திரிகையாளர்: அண்ணே! வணக்கம் அண்ணே!

அண்ணர்: அடடே.. என்ன நேற்று ஒரு அறிக்கை அனுப்பியிருந்தோம், தூக்கி கிடாசிப் போட்டியள். இந்துக் கோயில்கள் கட்ட ஒரு கோடி தருவதாக உறுதி தந்திருக்கினம், எத்தனை பெரிய விஷயம் தெரியுமோ?

பத்: அது கிடக்கட்டும், கோயில்களுக்குள் சப்பாத்துக்களுடன் புகுந்துள்ளது பற்றி உங்கள் கருத்து என்ன?

அண்: அடுத்தவாரம் அம்மாவைப் பார்க்கும்போது கட்டாயம் சொல்லத்தான் போகிறேன்.

பத்: அடடே சூடான நியூஸ்தான், சொல்லுங்கோ, சொல்லுங்கோ, என்ன சொல்லப்போகிறீர்கள்.

அண்: சப்பாத்தை கழற்றி வைத்துவிட்டு கோயிலுக்குள் புகுந்து ஐயர்மாரை கைது செய்வதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் சப்பாத்துடன் புகுந்தது நாகரிகமில்லை என்று சொல்லப் போகிறேன்.

பத்: சப்பாத்துடன் சென்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்பியளோ?

அண்: கேட்கலாம். கேட்போம். கேட்டாச்சு என்றே செய்தி போடலாம். போடுங்கோ.

பத்: நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் என்ன செய்வீர்கள்?

அண்: இன்னொரு முறை கேட்போம்.

பத்: அப்போதும் மறுத்தால்?

அண்: எப்போதும் இதுதான் பிரச்சனையா? அப்போது வேறு புதிய பிரச்சனை வராமலோ இருக்கும்? மக்கள் இதனை மறந்துவிடுவார்கள். நாமும் எங்கள் கோரிக்கையை துறந்துவிடுவோம். இது ஓஃப் த ரெக்கோட். பேப்பரில் போட்டுத் தொலைக்க வேண்டாம்.

பத்: உங்கள் கொள்கையென்ன?

அண்: இப்படியெல்லாம் திடீரென்று கேட்டால் பதில் சொல்ல முடியாது. தீர யோசித்து நிதானமாகத்தான் கூற வேண்டும். ஜப்பான் தூதரை சந்தித்து கொள்கை விளக்கம் அளிக்க இருப்பதால் உங்களுடன் தொடர்ந்து பேச முடியாமல் இருக்கிறது, வைக்கட்டுமா? (டொக்)

***



## ரெடிமேட் அறிக்கைகள்

பத்: வணக்கம் நண்பரே! இரவு உடையுடன் பெண்களை கைது செய்வது தொடர்கிறதே? உங்கள் கட்சி என்ன செய்யப் போகிறது?

நண்: பகலுடையுடன் கைது செய்யுமாறு மகஜர் அனுப்பியிருக்கிறோம்.

பத்: நள்ளிரவில் கைது செய்கிறார்களே?

நண்: நள்ளிரவுக்கு முன்னரும், நள்ளிரவுக்கு பின்னரும் கைது செய்யுமாறு தந்தி அனுப்பியிருக்கிறோம்.

பத்: யாழ் குடாநாட்டிலும் கைதுகள் அதிகரித்து வருகிறதாமே?

நண்: கண்டபடி கைது செய்யாமல், ஒழுங்கு முறைப்படி கைது செய்யுமாறு கூறியிருக்கிறோம்.

பத்: கைதிகள் கொழும்புக்கு கொண்டு வரப்படுகிறார்களே?

நண்: யாழ்ப்பாணத்திலேயே பெரிய சிறையாகக் கட்டி எத்தனை மாதம் வேண்டுமானாலும் வைத்திருங்கள், ஆனால் கொழும்புக்கு கொண்டுவரவேண்டாம் என்று கூறியிருக்கிறோம்.

பத்: இதே கோரிக்கையை இன்னொரு கட்சியும் விடுத்திருந்ததே?

நண்: அவர்கள் கோரிக்கை விடுத்ததோடு நிறுத்திக் கொண்டனர். நாங்கள் கையில் எடுத்துச் சென்றே கொடுத்திருக்கிறோம்.

பத்: பால் கெடுபிடிகள் அதிகரித்து வருகிறதே?

நண்: அதிகரிக்காமல் அப்படியே வைத்திருக்குமாறு ஃபக்ஸ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.



பத்: யாழ்-கொழும்பு போக்குவரத்தில் நிறைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறதே?

நண்: நிறையக் கட்டுப்பாடு விதிக்காமல், நியாயமான கட்டுப்பாடுகள் விதிக்குமாறு கேட்டுள்ளோம்.

பத்: தமிழர்களை ஆடு மாடுகள் போல பிடித்து செல்கிறார்களே?

நண்: இனிமேல் ஆடுமாடுகள் போல் நடத்த மாட்டோம் என்று நேற்றைய சந்திப்பில் உத்தரவாதம் தந்துள்ளனர்.

பத்: இனிமேல் எந்த மாதிரி நடத்துவார்கள்?

நண்: இரண்டு கால்களில்!

பத்: உப்பாற்றில் இருந்து தமிழர்களை வெளியேற்றியுள்ளனரே?

நண்: அறிந்ததும் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தோம். உடனே தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். இனிமேல் அங்கிருந்து வெளியேற்ற மாட்டோம் என்று உறுதி தந்துள்ளனர்.

பத்: இனி யாரை வெளியேற்றுவது. அங்குதான் ஆட்களே இல்லையே?

நண்: (அசடு வழிகிறார்) ஆமாம். திருமலையில் இருந்து வெளியேற்ற மாட்டோம் என்று உறுதி தந்துள்ளனர். அதனைத்தான் கூறினேன். ஹி.ஹி.ஹி.

(பாடல் கேட்கிறது)

மக்கள் என்னடா மண்ணும் என்னடா
பதவி தேடும் உலகத்திலே!
கோபம் கொள்வதில் அர்த்தம் என்னடா
கொள்கை இல்லாதவர் கூட்டத்திலே!

தாயும், பிள்ளையும் ஆனபோதிலும்
வாயும் வயிறும் வேறடா
கொண்ட கொள்கையை வீசி விட்டபின்
நேர்மை என்பதும் ஏதடா?

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331

# தலைவர்

➔ அரசியல் என்றால் ஏமாற்று, போலித்தனம், சந்தர்ப்பவாதம், நேற்று ஒரு பேச்சு இன்று ஒரு பேச்சு என்று நினைப்பவர்கள் இந்த மாபெரும் தலைவரது வரலாற்றை படிக்க வேண்டும்.

ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட். சுருக்கமாக ஈ.எம்.எஸ். இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர். அண்மையில் தனது 89 வயதில் இந்த மாபெரும் மனிதர் மறைந்துவிட்டார்.

இவர் சொத்துக்கள் சேகரிப்பதற்காக அரசியலுக்கு வந்தவரல்ல. தன்னுடைய ஏராளமான குடும்பச் சொத்துக்களை உதறிவிட்டு அரசியலுக்கு வந்தவர்.

இவரது பரம்பரை பெருமைக்குரியது. ஆனால் இவர் பரம்பரைப் பெருமை பேசியதில்லை. புரட்சிகரப் பரம்பரையைச் சேர்ந்தவன், தொழிலாளர்களது தோழன் என்ற பெருமையைத்தான் விரும்பினார்.

1957ல் கேரளாவின் முதலமைச்சராக பதவி ஏற்றார். தேர்தல் மூலம் பதவிக்கு வந்த முதலாவது கம்யூனிஸ்ட் முதலமைச்சர் இவர்தான்.

ஒரு முறை பிரதமர் நேருவை காண்பதற்காக இவர் சென்றிருந்தார். கேரள அரசின் நிகழ்ச்சி ஒன்றுக்காக அவரை அழைக்கப்போனார்.

இந்திராவுக்கும் அழைப்புக் கொடுங்கள் என்று யாரோ கூறினார்கள். இவர் மறுத்தார். இந்திரா நேருவின் மகளேதவிர, அரசாங்கத்தில் உள்ள ஒருவரல்ல, அரச விழாவுக்கு எப்படி அழைப்பது? என்று மறுத்துவிட்டார்.

அந்த சுயமரியாதைக்கும், நேர்மைக்கும் பரிசாக இந்திராவின் தூண்டுதலால் கேரள மாநில ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வென்று காட்டினார்.

இரண்டு முறை முதலமைச்சராக இருந்தும்கூட வாடகை வீட்டில் குடியிருந்ததுதான் உலக அச்சரியம். அரசு இவருக் காக ஒரு வீட்டை ஒதுக்கிக் கொடுத்தது.

அந்த வீட்டுக்கு தவணைப் பணம் கட்டக்கூட பணம் இல்லை. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ரசியப் பயணக் கட்டுரை எழுதியதுக்கு கிடைத்த பணத்தில்தான் தவணைப் பணம் கட்டினார்.

சோவியத் யூனியன் உடைந்திருக்கலாம். மேலும் சில நாடு கள் சோசலிசத்தை உதறியிருக்கலாம். ஆனால் மார்க்சிச கொள்கை கள் பிழையானவை அல்ல. மார்க்சிசம் என்பது விஞ்ஞானம், வழிகாட்டி என்பதை கடைசிவரை நம்பி வாழ்ந்தவர்.

அரசியல் என்பது பதவிகளை பிடிப்பதற்கல்ல. பதவிகளும், பகட்டும் இருந்தால்தான் கட்சி நடத்தலாம் என்பதெல்லாம் பொய். பதவிவேட்டையையும், தங்கள் சுயநலங்களையும் நியாயப்படுத்துகிறவர்கள் கூறுகிற காரணம்.

இந்தியாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு மாநிலங்களில்தான் ஆட்சியைப் பிடித்தது. ஒரு முறை இந்தியப் பிரதமராகும் வாய்ப்பு அக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜோதிபாசுவுக்கு கிடைத்தது. கொள்கைக்காக அப்பதவியைக் கூட கட்சி நிராகரித்தது.

அப்படியிருந்தும் இந்தியாவிலேயே கட்டுக் கோப்பான தொண்டர் பலம் உள்ள கட்சி அதுதான். உறுப்பினர்கள் கலபமாக சேரமுடியாது. ஈ.எம்.எஸ். போன்ற தலைவர்களது வழி நடத்தலும், ஆளுமையும்தான் கட்சி பலமாக இருக்கக் காரணம்.

பாராளுமன்றம் என்பது மக்களை ஏமாற்றும் அமைப்பாகும். பாராளுமன்றத்தில் பங்குபற்றுவது மூலம், அதன் உள்ளே இருந்தே அதன் போலித்தனத்தை அம்பலமாக்குவோம். மக்கள் போராடுவது மூலம்தான் நீதி கிடைக்கும். மாற்றம் ஏற்படும். என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை.

எளிமை, நேர்மை, அப்பழுக்கற்ற பொதுவாழ்க்கை என்ற மூன்றும் கலந்தவரே ஈ.எம்.எஸ். என்று அவரது எதிரிகளே புகழுகிறார்கள்.

நூறு புத்தகங்கள் எழுதியுள்ளார். அவரது எழுத்துக்கள் வலிமையானவை. அவரது கட்டுரைகள் சந்தர்ப்பவாத அரசியலின் முகமூடிகளை கிழித்தன. மரணமாவதற்கு முன்னர்கூட கட்டுரை ஒன்று எழுதியிருந்தார்.

இந்தியச் சுதந்திரப் போராட்ட காலத்தில் அவரது தலைக்கு விலை வைக்கப்பட்டது. யாரும் காட்டிக் கொடுக்கவில்லை.

அதனால்தான் அவர் மறைந்தபோது அவர் வாழ்ந்த கிராமம் கண்ணீரில் மூழ்கியது. அவரது தோழர்கள் கதறி அழுதனர். ஈ.எம்.எஸ். இலங்கைப் போராளிகள் கட்சிகள் சிலவற்றுக்கும் அறிமுகமானவர். ஆனால் அவரது மறைவுக்கு ஒரு கட்சிகூட இங்கு இரங்கல் தெரிவிக்கவில்லை. அவரது கட்சி பதவியில் இருந்திருந்தால் இரங்கல் தந்தியே அடித்திருப்பார்கள். இவர்கள் இப்படி அவர் தலைவர். இவர்கள்...? இவர்கள் தான் அனைத்தையும் துறந்துவிட்டனரே!



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657



# நஷ்டம்

நஷ்டம் என்றால் நஷ்டம் அப்படியொரு உலக மகா நஷ்டம். கதையைக் கேளுங்கள்: அமெரிக்காவில் பிரசித்திபெற்ற இரு எண்ணை வர்த்தக நிறுவனங்களான 'பெண்ணொயில்' மற்றும் 'கெட்டி ஒயில்' ஆகிய இரண்டும் இணைந்து செயற்படுவதற்கான ஒப்பந்தம் ஒன்றுக்கு ஏற்பாடுகள் நடந்தன.

இந்த இணைப்பை முறியடிப்பதற்கு 'டெக்சாக்கோ' என்ற நிறுவனம் திட்டமிட்டுச் செயற்பட்டது. இதற்கெனப் பல குறுக்கு வழிகளையும் நியாயமற்ற செயல் முறைகளையும் கையாண்டது. (அடுத்தவரை கெடுப்பதில் அத்தனை ஆர்வம்) 'டெக்சாக்கோ'வின் நடவடிக்கைகளை கண்டுபிடித்து வழக்குத் தொடுத்தனர். அவை முறைகேடானவை என்று கண்ட நீதிபதி கடுமையான தீர்ப்பு வழங்கினார். 1985 டிசம்பரில், இந்நிறுவனம் 'பெண்ணொயில்' நிறுவனத்துக்கு 35.9 பில்லியன் டொலர் நட்ட ஈடாக வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். (நம்மூர் மதிப்பில் கிட்டத்தட்ட 219 கோடி ரூபாய்கள்)

ஆனால் இந்நிறுவனத்தால் இப்பாரிய தொகையை வழங்க முடியவில்லை. எனவே வாணிகத்தில் தோல்வியுற்று நிறுவனம் ஒட்டாண்டி ஆகிவிட்டது எனப் பகிரங்கமாக அறிவித்துவிட்டது. பேராசை உலகமகா நஷ்டமாகியது.

இன்றுவரை இத்தகைய பாரியதொகைக்கு திவாலாகிப் போன நிறுவனமோ தனிமனிதனோ கிடையாது என்பது உலக சாதனை.

நஷ்டத்திலும் உலக சாதனை படைத்துவிட்டது பார்த்தீர்களா? ஒரு மகா தீமையில் நன்மையும் இருந்திருக்கிறது.




# தூண்டில் தீவு



↑ பசுபிக் பெருங்கடலில் தென் அமெரிக்காவின் மேற்கேயும் அவுஸ்திரேலியாவுக்கு கிழக்கேயும் கடலின் நடுவில் பல்லாயிரக்கணக்கான தீவுகள் பரந்து கிடக்கின்றன. வளம் நிறைந்த செழிப்பான இத்தீவுகளில் வாழும் மக்கள் எப்போதும் குஷியாகவே இருப்பார்கள்.

இம்மக்களுடன் ஆனந்தமாக- உல்லாசமாகப் பொழுது போக்க மேற்கத்தைய நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கில் பயணிகள் வருவார்கள்.

அந்நியர்களை வரவேற்று உபசரித்து மகிழ்வூட்டுவதே இப்பிரதேச மக்களின் தலையாய கடமையாகும். பலவிதமான உபசரிப்புகளுடன் நடனமாடி விருந்தினரை ஆனந்தக் கடலில் ஆழ்த்துவதில் கை தேர்ந்தவர்கள் இங்கு வாழும் பெண்கள். தூண்டில் மாதிரி இழுத்துக் கொள்கிறார்கள். இங்கு செல்பவர்கள் திரும்பிவர விரும்புகிறார்கள் இல்லையாம்.

இத்தீவுக் கூட்டங்களில் ஒன்றுதான் ஃபிரெஞ்ச் பொலினேசியா. இங்குள்ள மூரியாவின் ரிக்கி கிராமத்தில் நடைபெற்ற ஒரு மணவிழாவில் கலந்துகொள்ளச் சென்ற படப்பிடிப்பாளர் ஜொடி கொப் அத்தீவின் நடனக்காரர்களுடன் மாட்டிக்கொண்டார். ஜொடி (தலையில் பச்சை இலைகளாலான தொப்பி வைத்திருப்பவர்)யின் வலது புறத்தில் காணப்படுபவர் ஒரு தீ நடனக்காரர். இவர் நடனமாடும்போது கொளுத்து விட்டு எரியும் தீப்பந்தத்தை தனது உடல் பூராவும் தேய்ப்பாராம். தித்திக்கும் தீ. ■

# அழகு



⬅ படத்தில் இருப்பது பெலிக்கன் என்ற பறவை. இது ஏனைய பறவைகளைவிட சற்றுப் பருமனானவை.

உலகனைத்திலும் 7 வகையான பெலிக்கன் பறவைகள் காணப்படுகின்றன. படத்திலுள்ள பெலிக்கன் கிரேக்க நாட்டில் காணப்படுபவை. பெரும்பாலும் இதன் இறகுகள் தூய வெள்ளையாகவே இருக்கும். இறகுகளில் ஆங்காங்கே கறுப்பு இறகுகளும் காணப்படும்.

பெலிக்கனின் சொண்டு நீண்டு பருத்துக் காணப்படும். கீழ்ச் சொண்டுடன் ஒரு பெரிய பை தொங்கும். இதன் பிரதான உணவு மீன், சொண்டால் பிடிக்கும் மீன்களை உடனடியாக உண்ணாமல் இப்பைக்குள் சேகரித்து வைத்துக்கொண்டு தேவையான போது விழுங்கும்.

பெரும்பாலும் நீர் நிலைகளை ஒட்டி கூட்டம் கூட்டமாக இப்பறவைகள் வாழும். உணவுக்காக மீன்பிடிக்க இப்பறவைகள் பல ஒன்றாகவே சேர்ந்து நீரில் நீந்திச் செல்லும். நீரில் காணப்படும் மீன் கூட்டங்களை இவை ஒன்று சேர்ந்து கலைத்துக் கொண்டு கரையோரம் வரை ஒதுக்கிக் கொண்டு போய் அவற்றை ஒவ்வொன்றாகக் கொத்தி சொண்டின் பைக்குள் சேர்த்துக்கொள்ளும்.

இவை மிக வேகமாகப் பறந்து செல்லும். இவை கூட்டமாகப் பறந்து செல்லும்போது பார்ப்பதற்கு மிக அழகாகத் தோன்றும். ஆனால் தரையில் அமர்ந்தால் அவற்றின் தோற்றம் அருவருப்பாக இருக்கும். பறந்தால் அசத்தல்.... அமர்ந்தால்...? ■

# சாதனை



⬅ இவை பொம்மைகள்தான். ஆனால் விவகாரமான பொம்மைகள்.

'குறளி' என்பது ஒரு ஏவல் சிறு தெய்வம் என மந்திரவாதிகள் கூறுவார்கள். இச்சிறு தெய்வத்தை வாலாயம் பண்ணி வேடிக்கை காட்டும் மந்திரவாதிகளும் இருக்கின்றனர்.

இங்கிலாந்தில் டேவொனில் பிராட்வாதி என்ற ஊருக்கு அருகாமையில் ஒரு பண்ணை இருக்கிறது. இங்கு வசிக்கும் ஆல் அற்கின்ஸ் அம்மையார் இந்த குறளி பொம்மைகளைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்.

இப்பொம்மைகளை வைத்துப் பாதுகாப்பதற்காக 4 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளார். இவர் 2010 குறளிப் பொம்மைகளைச் சேர்த்து வைத்திருக்கிறார்.

இவற்றை ஏவிவிட்டு ஏதாவது காரியங்களை முடிக்கிறாரா என்பது தெரியவில்லை.

எப்படியோ, குறளிப் பொம்மைகளை அதிகளவில் சேர்த்துவைத்துள்ளவர் என்ற உலக சாதனையை படைத்துவிட்டார்.

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



## பைரவி (07.03.1998)

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த ஞானமனோகரன்- விஜயலஷ்மி தம்பதியினரின் செல்வப் புதல்வி **பைரவி** 07.03.1998 தனது 1வது பிறந்தநாளை Canadaவில் Toronto நகரில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பான அப்பா, அம்மா, சாவகச்சேரியில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா(கனடா), அம்மப்பா, அம்மம்மா(இந்தியா), மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சாவகச்சேரி துர்க்கை அம்மன் அருளுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்கள்.

தகவல்:- ஜி. விஜி(கனடா)